விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

உலகெங்குமுள்ள உறவு
களுக்கு உடனுக்குடன்
கடிதங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
உடு புடைவைகள்
CD,VCD க்கள் அனுப்ப
நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன்
தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-4164)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 17 புதன்கிழமை (30.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 102

# வடக்கு மாகாண உச்சியில் பௌத்த மேலாதிக்கம்

## எதிர்ப்பை வெளியிடுகிறது வட மாகாண சபை

(யாழ்ப்பாணம்) வடக்கு மாகாண ஆளுநராக பதவியேற்று குறுகிய காலத்திற்குள் வடக்கில் பௌத்த மதத்திணிப்பை ஆளுநர் றெஜினோல்ட் குரே மேற்கொள்வாராயின் வடக்கு மாகாண சபையினதும் தமிழ் மக்களினதும் கடும் எதிர்ப்பை அவர் சந்திக்க வேண்டியிருக்குமென வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் எச்சரித்துள்ளனர்.

(23ஆம் பக்கம் பார்க்க)



மன்னார் பேசாலை பகுதியில் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப் பட்டிருந்த 44 கிலோகிராம் கேரள கஞ்சா பொதிகளை மன்னார் பொலிஸ் நிலைய போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மீட்டுள்ளனர்.
(செய்தி 09ஆம் பக்கத்தில்)


## கனரக வாகனத்துடன் மோதியது மோ.சைக்கிள்

### ஒருவர் உயிரிழப்பு

(மல்லாவி)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியின் அருகில் நிறுத்தப்பட்டிருந்த கனரக வாகனத்துடன் மோதியதில் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த நபர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 5.00 மணியளவில் கிளிநொச்சி முருகண்டி பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக 23ஆம் பக்கம் பார்க்க....



## அருட்தந்தை பிரான்சிஸ் தலைமையில் இராணுவத்திடம் சரணடைந்தார்கள்!

### போராளி உமாபதியின் மனைவி சாட்சியம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு நீதிமன்றில் இராணுவம் தெரிவித்தது போன்று அருட்தந்தை பிரான்சிஸ் யோசப் தலைமையில் சரணடைந்தவர்களின் பெயர் விபரம் வெளியிடப்பட வேண்டும். அதனுடாக ஆணைக் குழு தனது கணவனை கண்டுபிடித்து தரவேண்டும் என போராளி பரராஜசிங்கம் உமாபதியின் மனைவி ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் கண்ணீர் மல்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னாரில் நடைபெற்ற காணாமல்போனோர் தொடர்பான ஆணைக் குழுவின் சாட்சியங்களை பதிவு செய்யும்பொழுது ஆணைகுழுவிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது சாட்சியத்தில்,

11 ஆயிரம் போராளிகளை புனர வாழ்வளித்து விடுதலை செய்த இந்த அரசால் வெளிப்படையாக பேருந்தில் ஏற்றிச் செல்லப்பட்ட 50 பேரின் விபரங்களை வெளியிட முடியாமைக்கான காரணம் என்ன? எனஆணைக் 23ஆம் பக்கம் பார்க்க....

## எனது கணவரை இராணுவம் வெள்ளை வானில் கடத்தியது

### கண்ணால் கண்டேன் என மனைவி சாட்சியம்

(குருமன்காடு)

எனது கணவரை வவுனியா, கல்மடு - ஈச்சங்குளம் வீதியில் வைத்து 57 ஆவது படைப்பிரிவு இராணுவம் வெள்ளைவானில் கடத்திச் சென்றதை கண்டதாக மனைவி பேரின்பராஜா பாலேஸ்வரி காணாமல் போனோர் தொடர பான விசாரணைகளை நடத்தும் ஜனாதிபதி 24ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு பெண்களிற்கு முன்னுரிமை அவசியம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக பெண்களே அதிகளவில் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

எதிர்காலத்தில் அவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## 'சுதந்திர கட்சியின் தலைவராக மைத்திரியை ஏற்க முடியாது'

(கொழும்பு)


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக ஜனாதிபதி மைத்திரி பால சிறி சேனவை ஏற்றுக்கொள்ள முடியாது என இரத்தினபுரி மாவட்ட உள்ளூராட்சி மன்ற ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களின் வாக்குகளினால் தெரிவான தாம், சுதந்திரக் கட்சியின் வாக்கு களினால் தெரிவாகாத தற்போதைய ஜனாதிபதியை கட்சியின் தலைவராக ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ளனர்.

கூட்டு எதிர்க்கட்சியின் ரத்தினபுரி மாவட்ட செயலாளர் சட்டத்தரணி பிரியந்த கருணாதிலக்க, இரத்தினபுரி மாவட்ட உள்ளூராட்சி மன்ற 23ஆம் பக்கம் பார்க்க....

## கணவரைக் கடத்திய வாகனத்தை பொலிஸ் நிலையத்தில் கண்டேன்

### வாகன இலக்கத்தை குறிப்பிட்டு மனைவி சாட்சியம்




(குருமன்காடு)

எனது கணவரை கடத்திய 50 - 7062 இலக்க வாகனத்தை கொழும்பு கொவல பொலிஸ் நிலையத்தில் கண்டேன் என கணேசு சதாசிவத்தின் மனைவி ஜனாதிபதி ஆணைக்குழுமுன் சாட்சியமளித்துள்ளார். 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இலங்கைக்கான ஜப்பானிய தூதுவரிடம்

# வடக்கு வாழ்வாதார ஊக்குவிப்பு திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு



வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார ஊக்குவிப்புத் திட்டத்திற்கு மேலதிகமாக தேவைப்படுகின்ற 590.8 மில்லியன் ரூபாவுக்கான திட்டமுன்மொழிவு ஒன்றினை இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் கெனிச்சி சுகனுமாவிடம் வட மாகாண கிராம அபிவிருத்திஅமைச்சர் பா.டெனீஸ்வரன் நேற்றையதினம் கையளித்துள்ளார்.

வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனுக்கும், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் கெனிச்சிசு கனுமாக்குமிடையிலான விசேட சந்திப்பொன்று நேற்றைய தினம் கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவராலயத்தில் நடைபெற்றது.

மேற்படி சந்திப்பு தொடர்பாக அமைச்சர் கருத்து தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் காணப்படுகின்ற வாழ்வாதாரப் பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பில் சுட்டிக்காட்டிய தோடு, கடந்த வருடம் எனது அமைச்சின் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட வாழ்வாதார ஊக்குவிப்புத் திட்டத்திற்கு மேலதிகமாக தேவைப்படுகின்ற 590.8 மில்லியன் ரூபாவுக்கான திட்டமுன்மொழிவு ஒன்றினை தூதுவரிடம் கையளித்துள்ளோம்.

மேலும் நடைபெற்று முடிந்த உள்நாட்டு யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்காக எம்மால் வாழ்வாதார உதவித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

ஏறத்தாள 12 ஆயிரத்து 676 குடும்பங்கள் மேற்படித் திட்டத்துக்கு விண்ணப்பி த்திருந்த நிலையில் கடந்த வருடம் 43 மில்லியன் ரூபாநிதி ஒதுக் கீட்டின் ஊடாக 860 குடும்பங்கள் மாத்திரமே மேற்படி வாழ்வாதாரத் திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டிருந்தன.

நிதி போதாமையினால் 11 ஆயிரத்து 816 குடும்பங்களுக்கான வாழ்வாதாரத் திட்டத்தை முன்னெடுக்க முடியாமல் போயுள்ளது என சுட்டிக்காட்டி குறித்த திட்டத்துக்கு மேலதிகமாக தேவைப்படும் நிதிக்கானதிட்ட முன்மொழி வொன்றினை கையளித்திருந்தோம்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜப்பானிய தூதுவர் மேற்படித் திட்டத்தினை வெளிநாட்டு வளத்துறை திணைக்களம் (ERD) சிபாரிசு செய்யும் பட்சத்தில் நிதியுதவி வழங்க தமது நாடுதயாராக உள்ளதாகவும், எனவே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்ததுடன்,

இந்த வருடம் வடக்கு மாகாணத்துக்கு ஜெய்க்கா திட்டத்தின் ஊடாக ஏறக்குறைய ஆயிரத்து 736 மில்லியன் ஜப்பானிய ஜென் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறித்த திட்டத்தின் ஊடாக உள்ளக வீதிகள் புனரமைப்பு, சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் என்பன மேற்கொள்ளமுடியும் என்றும் தெரிவித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தசந்திப்பில் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் தக்குஷி ஒட்டக்கிடா ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (செ-9,281)

# வெடிமருந்து உள்ளடங்கிய 3 கொள்கலன்கள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

நல்லூர், கல்வியங்காடு, யமுனா வீதியிலுள்ள தனியார் காணியொன்றில் புதையுண்ட நிலையில் இருந்த வெடிமருந்து உள்ளடங்கிய 3 பிளாஸ்ரிக் கொள்கலன்களை விசேட அதிரடிப்படையினர் நேற்றைய் தினம் மீட்டுள்ளனர்

நல்லூர் கல்வியங்காடு தனியார் வீதியில் உள்ள தனியார் காணியில் நேற்று முன்தினம் காணி உரிமையாளர் தண்ணீர் குளாய்களை புதைப்பதற்காக கிடங்கு வெட்டிய போது வெடிமருந்துகள் உள்ளடங்கியுள்ளதாக சந்தேகிக்கப்படும் கொள்கலன் ஒன்றை கண்டு அதை வெளியில் எடுத்துள்ளார்.

மேலும் பல கொள்கலன்கள் இருப்பதாக சந்தேகித்த காணி உரிமையாளர் கிராம அலுவலர் ஊடாக கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், அந்த இடத்துக்கு பாதுகாப்பு வழங்கியதுடன், பரல்களை மீட்பதற்காக விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

அதனடிப்படையில் நேற்றைய தினம் குறித்த இடத்துக்கு வருகை தந்த விசேட அதிரடிப்படையினர் குறித்த பகுதியில் சோதனை மேற்கொண்டு மேலதிகமாக வெடிமருந்து அடங்கிய 2 கொள்கலன்களை மீட்டதுடன் மொத்தமாக 3 கொள்கலன்களை மீட்டுச் சென்றுள்ளனர். (செ-9)

**தேவை**

பிரபல புடவை ஸ்தாபனத்திற்கு (சாறி, சல்வார்) மிக அனுபவமுள்ள பணியாளர்கள் தேவை.

சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

P.No:-0770230322, 021 2285750

**கிளிநொச்சி.** (சி-4160)

**BARATHY**

சித்தன்கேணி

O/L Day Class

**ஆரம்பம்:-04.04.2016**

**திங்கள் -8.00** am

எமது வழமையான அதி திறமை கொண்ட ஆசிரிய குழுவினால் வழமைபோல் 80 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

■ உங்கள் அனுமதிகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

இயக்குநர் ஆசிரியர்

(சி-4165)

வது

60

ஆண்டு

திருமண வாழ்த்து



திரு.திருமதி

**சிவசுப்பிரமணியம் இராசலட்சுமி**

30.03.1956 – மண்டைதீவு – 30.03.2016

எம் கண்கண்ட தெய்வங்களாகிய பெற்றோர் மண்டைதீவு திருவெண்காட்டு சித்திவிநாயகர், கடையிற் சுவாமிகள் அருளால் நலமாக வாழ பிரார்த்திக்கின்றோம்.



**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரன், சகோதரி**

இல.06, வராகி அம்மன் கோவிலடி, கொக்குவில் மேற்கு. (4047)

## பகிரங்க ஏல விற்பனை
## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

யாழ்.போதனா வைத்தியசாலையில் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பின்வரும் பொருட்கள் 2016.04.08 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) மு.ப 10.00 மணி தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.


01.இரும்புக்கட்டில்கள், சில்லுக் கதிரைகள், மேசைகள், அலுமாரிகள் (ஸ்ரீல்)
02.மர அலுமாரிகள், மரக் கதிரைகள்
03.கணனி மற்றும் அதனுடன் தொடர்புடைய உபகரணங்கள்
04.குளிர்சாதனப் பெட்டிகள்
05.பழைய இரும்பு, அலுமினியம், சில்வர் பொருட்கள்
06.பழைய மர, இரும்புக் கதவுகள், யன்னல்கள் மற்றும் அதற்குரிய நிலைகள்
07.பாவித்த வாகன ரயர்கள்
08.பழைய பிளாஸ்ரிக் பொருட்கள்
09.பழைய இரும்புக் கேடர்கள்.
10.பழைய தீராந்தி, பனை மரங்கள் மற்றும் சிலாகைகள்
11.பழைய சீற் மற்றும் ஓடுகள்
12.ஏனைய தளபாட உபகரணங்கள்.

இவ் ஏல விற்பனையில் கலந்து கொள்ள விரும்புவோர் இல.111, பிரதான வீதியில் உள்ள யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைக் களஞ்சியத்தில் மேற்படி பொருட்களை 2016.04.08ஆம் திகதி காலை 8.00-10.00 மணிவரை பார்வையிட முடிவதுடன் அதனைத் தொடர்ந்து ஏல விற்பனையில் கலந்து கொள்ளவும் முடியும். ஏலத்தில் தெரிவானவர்கள் பணத்தை காசாளரிடம் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்று பொருட்களை அன்றையதினம் பி.ப 5.00 மணிக்கு முன்னர் மேற்படி களஞ்சியத்திலிருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

**பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

(சி-4166)

# அரசுக்கெதிராக நடவடிக்கை இராவணாபலய எச்சரிக்கை



கைது செய்யப்பட்டு சிறைகளில் வைக்கப்பட்டுள்ள உளவுத்துறை அதிகாரிகள் உள்ளிட்ட இராணுவ அதிகாரிகளை எதிர்வரும் புத்தாண்டுக்கு முன்னர் விடுதலை செய்யாவிட்டால் அரசாங்கத்திற்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ராவணாபலய அமைப்பின் ஏற்பாட்டாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (இ-5)

# இலங்கை அகதிகள் 19 பேர் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தாயகம் திரும்பவுள்ளனர்

(கொழும்பு)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினுடைய (UNHCR) வசதிப்படுத்தலுடனும் ஒருங்கிணைப்புடனும் பத்தொன்பது (19) இலங்கைதமிழ் அகதிகள் தமிழ்நாடு இந்தியாவிலிருந்து நாளை மறுதினம் 31 ஆம் திகதி இலங்கைக்கு வருகைதர உள்ளனர். இவர்கள் திருச்சியிலிருந்து இலங்கை விமான சேவை (UL132) இனூடாக மு.ப. 10.20 மணியளவில் வருகைதர உள்ளனர்.

இவ் அகதிகள் 19 பேரில் 10 ஆண்களும் 9 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் வவுனியா, கொழும்பு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு மீள்குடியமர்வதற்காக வருகை தருகினறனர் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். (இ-5)

## சிறைச்சாலைகளில் போதைப்பொருள் கண்டுபிடிக்க மோப்ப நாய்கள் பிரிவு

(கொழும்பு)

சிறைச்சாலைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் போதைப் பொருட்களை கண்டுபிடிப்பதற்காக மோப்ப நாய்களை பயன்படுத்தும் வேலைத் திட்டத்தை சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து விவகார அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் நேற்று முன்தினம் வெலிக்கடை சிறைச்சாலையல் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இந்த வேலைத் திட்டத்திற்கு தேவையான மோப்ப நாய்களை சிறைச்சாலைகள் அமைச்சுக்கு பொலிஸ் திணைக்களம் வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் இவ் வேலைத் திட்டத்தின் முன்னோடியாக மோப்ப நாய்கள் சிறைச்சாலைகள் எங்கும் அழைத்துச் செல்லப்பட்டன. இதனைத் தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் மோப்ப நாய்களை பயன்படுத்தும் வேலைத் திட்டம் அடிக்கடி நடைமுறைப்படுத்தப்படுமென்றும் அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்தார்.

சிறைச்சாலைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் போதைப் பொருட்களை கண்டுபிடிப்பதற்காக மோப்ப நாய்களை பயன்படுத்தும் வேலைத் திட்டத்தினை ஆரம்பப்பது அமைச்சரின் எண்ணக் கருக்களில் ஒன்றாகும். (இ-5)

## உணவு விஷமாகியதால் 16 பேர் வைத்தியசாலையில்

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் உணவு விஷமாகியதால் 16 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பகல் உணவை உட்கொண்ட பினனர் குறித்த பணியாளர்கள் நோய்வாய்ப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து 5 பேர் நீர்கொழும்பு வைத்தியசாலையிலும் ,11பேர் சீதுவை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டதாகவும் இந்த சம்பவம் தொடர்பாக கட்டுநாயக்க பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (இ-5)

# கையடக்கத் தொலைபேசி பாவனையை முற்றாகத் தடை செய்ய நடவடிக்கை

வாகனங்கள் செலுத்தும் போது கையடக்கத் தொலைபேசி பாவிப்பதை முழுமையாகத்தடை செய்வதற்கான சட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்தவுள்ளதாக வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை அறிவித்துள்ளது.

கையடக்கத்தொலைபேசி பாவிப்பதன் ஊடாக விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் இதில் மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகளவில் இடம்பெறுவதாகவும் வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை சுட்டிக்காட்யுள்ளது.

மேலும் நேற்று முன்தினம் சட்டத்தரணிகள் சங்கத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக வீதிபாதுகாப்பு தொடர்பான தேசிய சபை கலாநிதி சிசிறி ஜயகொடி இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்தார்.

வாகனங்களின் வேகக் கட்டுப்பாடு தொடர்பான சட்டத்தில் மாற்றங்களை கொணடு வருவதற்கு உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுக்க எண்ணியுள்ளதாகவும்அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

கடந்த வாரம் இடம்பெற்ற மாநாட்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பில் நேற்று முன்தினம் சட்டத்தரணிகள் சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகு கலாநிதி சிசிறி ஜயகொடி தெரிவத்துள்ளார். வீதி சமிக்ஞை மற்றும் அது தொடர்பான சட்டங்களைவலுப்படுத்துவது தொடர்பில் பல தீர்மானங்களை மேற்கொண்டுள்ளதாக் அவர் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் தொடர்பில் எதிர்வரும் வாரம் அளவில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்என கலாநிதி சிசிறி ஜயகொடி மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# இலங்கை தமிழர்கள் 14 பேர் திருச்சியில் உண்ணாவிரதம்!

(சென்னை)

தமிழகம் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் வசிக்கும் இலங்கைத் தமிழர்கள் 14 பேர்காலவரையறையற்றஉண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த உண்ணாவிரதத்தில் ஈடுபடுவோரில் தற்போது 16 இலங்கைத் தமிழர்கள், ஒரு நைஜீரியர் என 17 பேர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் மகேந்திரன் என்ற இலங்கைத் தமிழர், தன்னை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி 3 நாட்களுக்கு முன் காலவரையறையற்றஉண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கினார்.

4ஆவது நாளாக நேற்றும் அவரது போராட்டம் தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பொய் வழக்கு பதிவு செய்து கைது செய்யப்பட்டுள்ள தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி, இதே முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் 13 பேர் நேற்று முன்தினம் காலை முதல் காலவரையறையற்ற உண்ணா விரதப் போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

தகவலறிந்த பொலிஸார் உள்ளிட்ட அதிகாரிகள் அங்கு சென்று உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதுடன், அவர்கள் அளித்த கடிதத்தை அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்து உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளனர்.

எனினும், அதை ஏற்க மறுத்து, 14 பேரும் தொடர்ந்து உண்ணாவிரதம்மேற்கொண்டுள்ளனர். (இ-5)

## ஜோன்ஸ்டனுக்கு எதிராக அதிகுற்றச்சாட்டுப்பத்திரம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக, அதிகுற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குருநாகல் பிரதேசத்தில் உள்ள சதொச வர்த்தக நிலையத்தில் பொருட்களைக் கொளவனவு செய்துவிட்டு அதற்கான பணத்தை செலுத்தவில்லை என்று அவருடன் சேர்த்து மூவருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்த மூவருக்கு எதிரான வழக்கு, குருநாகல் மேல் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டபோதே, அதிகுற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர், குருநாகல் மேல் நீதிமன்ற நீதிபதி சுனந்த குமார ரத்னாயக்க, பிரதிவாதிகள் மூவரும் முன்வைப்பு ரொக்கப்பிணையின் ஊடாகவும் ஒரு பிரதிவாதியை 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவித்தார். (இ-5)

## இரத்துச் செய்யப்படவுள்ள ஐ.தே.கவின் முக்கிய பதவி

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் மே மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதன போது ஐக்கிய தேசிய கட்சியின் முக்கிய பதவியொன்றில் மாற்றம் செய்யப்படவுள்ளதோடு, மூன்றாம் நிலை இளம் தலைவர்களுக்கு முக்கிய பதவிகள் வழங்கப்படவுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் (ஏப்ரல்) சீனாவுக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும் கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு 2005 ஆம்ஆணடு ஐக்கிய தேசிய கட்சி எதிர்க்கட்சியாக இருந்த போது வழங்கப்பட்ட பிரதான பதவிகள் அனைத்தும் இரத்துச் செய்யப்படவுளளதாகவும் கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அமைச்சர் பதவிகளை வகித்து அரசின் செயற்பாடுகளை முன்னெடுக்கும் அதேவேளை கட்சியன் இளம்உறுப்பினர்களுக்கு முக்கிய பதவிகளை வழங்கி கட்சியின் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொறுப்பு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# தமிழர்களின் பிரச்சினையை தீர்க்க அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும்

## அமைச்சர் மனோ வலியுறுத்து



(கொழும்பு)

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால் அதிகாரப்பகிர்வு வழங்கப்படவேண்டும். அதன் மூலமாகவே தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியும் என மொழிகள், தேசிய கலந்துரையாடல் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தனிநாடு உருவாகாமல் ஒரே நாட்டுக்குள் தமிழர்கள் வாழவேண்டும், தமிழர்கள் ஆயுதம் ஏந்தக் கூடாது என்றால் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை மட்டக்களப்பு வில்லியம் மண்டபத்தில் நடைபெற்ற இலங்கையில் சமாதான சக வாழ்விற்கான அணுகுமுறைகள் பற்றிய தேசிய கருத்தரங்கில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-5)

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக்கடைகள், சிற்றுண்டிச்சாலை என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

## மீள்கேள்வி அறிவித்தல்-2016

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 15.04.2016ஆம் திகதி முதல் 31.12.2016 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப் பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| கேள்விப்படிவக்கட்டணம் | - | ரூபா 500.00(VAT,NBT நீங்கலாக) |
| கேள்விப்படிவம் விநியோகித்தல் | | 30.03.2016-07.04.2016ஆம் திகதி வரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல்- | | 08.04.2016 மு.ப 9.30 மணிவரை |
| கேள்வி திறத்தல்- | | 08.04.2016 மு.ப 10.00 மணிக்கு |

விண்ணப்பபடிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 08. 04.2016ஆம் திகதி மு.ப 9.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக் காரார்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்.

**குறிப்பு:-**

01.கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையின் வீதத்திற்குச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் முறி ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும். அல்லது சித்தி பெற்றவர்கள் உடனடியாக கேள்வித் தொகையின் 1/2 பகுதியைச் செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகை யின் 1/4 பங்கை மே தொடக்கம் ஆகஸ்ட் வரையான 4 மாத காலப்பகுதிக்குள் 2016 மே முதல் ஒவ்வொரு மாதமும் அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும். தவறும்பட்சத்தில் குத்தகைப் பணத்தின் 10% தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும்.

02.சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் பொருள்களின் மொத்தப் பெறுமதியின் 4 வீதம் கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு)நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம். மரக்கறி வியாபாரம் செய்யும் இடத்துக்கு (5'X5') நாள் ஒன்றுக்கு ரூபா 50.00 பெறலாம். மேலதிகமாக எந்தவித கட்டணங்களும் அறவிடக்கூடாது.

03.சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 5.00 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 10.00ஆம் அறவிடலாம். மேலதிகமாக எந்த வரியும் அறவிடக்கூடாது.

04.சபையின் கடைகளில் இறைச்சி / கருவாடு/ கோழி ஆகியன விற்பனை செய்யும் உரிமையாளர்கள் சபையால் விதிக்கப்படும் மாத வாடகை செலுத்த வேண்டும்.

05.கேள்வியில் சித்தி பெறுபவர் குத்தகைக்கு எடுக்கத்தவறின் இரண்டாவது கேள்விதாரருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

06.சிற்றுண்டிச்சாலைகளை குத்தகைக்குப் பெறுபவர்களுக்குரிய நிபந்தனைகள்.

1.சிற்றுண்டிச்சாலை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 7.00 மணிவரை வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படும்.

2.சிற்றுண்டிச்சாலைக்குப் பயன்படுத்தும் மின்சாரத்துக்கான மின் கட்டணத்தை குத்தகைக்குப் பெறுபவர்களே செலுத்துதல் வேண்டும்.

3.மின்சார கட்டணத்திற்கான பாதுகாப்பு வைப்பு கட்டணமாக ரூ.15000.00 ஐயும் உடன் செலுத்துதல் வேண்டும்.

07.கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு VAT, NBT சேர்த்து செலுத்துதல் வேண்டும்.

08.கேள்விப் பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் தங்கள் பகுதி கிராம சேவையாளர் மூலம் தங்கள் வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

09.சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்.மாநகர சபைக்கே உரியது.

10.கேள்விப் பத்திரங்களைப் பெறுபவர்கள் முன்பு மாநகர சபைக்கு எந்த வித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

### மாநகர சபை-யாழ்ப்பாணம்
### மீள்கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ. இல | விபரம் | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 01 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 1,48,310.00 |
| 02 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 3,46,490.00 |
| 03 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 65,660.00 |
| 04 | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 2,23,750.00 |
| 05 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 2,55,710.00 |
| 06 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 1,59.820.00 |
| 07 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 1,57,900.00 |
| 08 | நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை | இல.11 | 5,000.00 | 42,450.00 |
| 09 | நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 5,000.00 | 8,630.00 |
| 10 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 2,69,170.00 |
| 11 | சுப்பிரமணியம் பூங்கா வளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 46,670.00 |
| 12 | புங்கன் குளம் சந்தை | | 2,000.00 | 6,080.00 |
| 13 | யாழ்.முஸ்லிம் கல்லூரி வீதியில் அமைந்துள்ள சந்தை கட்டிடத் தொகுதி-மேல் தளம் 8 கடைகள் (விடுதி, இறைச்சி, மீன் வகை தவிர்ந்த ஏனையவை) | | 10,000.00 | 1,22,740.00 |


**பொ.வாகீசன்**
**ஆணையாளர்,**
**யாழ்.மாநகர சபை.**

**மாநகர சபை அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(சி-4167)

# இருபது-20 உலகக் கிண்ணம் இங்கிலாந்து-நியூசிலாந்து

## இன்று பலப்பரீட்சை




20 ஓவர் உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் சுப்பர் 10 சுற்று ஆட்டங்கள் நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்தன.

இதன் முடிவில் இந்தியா, நியூசிலாந்து, மேற்கிந்திய தீவுகள், இங்கிலாந்து ஆகிய 4 அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெற்றன.

அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நடப்பு சம்பியன் இலங்கை, முன்னாள் சம்பியன் பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகள் வெளியேற்றப்பட்டன.

நேற்று ஓய்வு நாளாகும். முதல் அரை இறுதி ஆட்டம் டெல்லி பெரோஷா கோட்லா மைதானத்தில் இன்று (புதன்கிழமை) இரவு 7 மணிக்கு நடக்கிறது. இதில் நியூசிலாந்து- இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன.

இரு அணிகளும் சமபலம் பொருந்தியவை என்பதால் அரை இறுதி ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இறுதிப் போட்டிக்கு முன்னேற இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் கடுமையாக போராடும்.

வில்லியம்ஸன் தலைமையிலான நியூசிலாந்து அணி தான் மோதிய 4 ஆட்டங்களிலும் வென்று குரூப் 2 பிரிவில் முதலிடத்தை பிடித்து அரை இறுதிக்கு தகுதி பெற்றது. தோல்வியை சந்திக்காத அந்த அணி இங்கிலாந்தை வீழ்த்தி முதல் முறையாக இறுதிப்போட்டிக்கு நுழையும் ஆர்வத்துடன் உள்ளது.

2ஆவது முறையாக அரை இறுதியில் விளையாடும் நியூசிலாந்து அணியில் கப்டன் வில்லியம்ஸன், குப்தில், முன்னாள் கப்டன் ரோஸ் ரெய்லர், முன்ரோ, அண்டர்சன் போன்ற அதிரடி வீரர்கள் உள்ளனர். சுழற்பந்தில் நேதன் மக்கலம், சான்ட்னெர், இந்தர்சிங் சோதி முத்திரை பதிக்க கூடியவர்கள்.

மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து அணி பேட்டிங், பவுலிங்கில் சமபலத்துடன் உள்ளது. தென்னாபிரிக்காவுக்கு எதிராக 230 ஓட்ட இலக்கை எடுத்தது. இலங்கைக்கு எதிராக கடைசி ஓவரில் சிறப்பாக பந்துவீசி முத்திரை பதித்தது. 3 வெற்றி, ஒரு தோல்வியுடன் குரூப் 1 பிரிவில் 2ஆவது இடத்தை பிடித்தது.

2010ஆம் ஆண்டு சம்பியனான இங்கிலாந்து அணியில் கப்டன் மோர்கன், பட்லர், ஜோ ரூட், ஹேல்ஸ், ஜேசன் ரோய், மொயின் அலி, பென் ஸ்டோக்ஸ், ஜோர்டன் போன்ற சிறந்த வீரர்கள் உள்ளனர். நியூசிலாந்தை வீழ்த்தி 2ஆவது முறையாக இறுதிப்போட்டிக்கு நுழையும் ஆர்வத்துடன் அந்த அணி இருக்கிறது.

இரு அணி வீரர்கள் விவரம்:-

நியூசிலாந்து: வில்லியம்ஸன் (கப்டன்), குப்தில், முன்ரோ, ரோஸ ரெய்லர், அண்டர்சன், ரோஞ்சி, அடம் மில்ன், போல்ட், நேதன் மக்கலம், சான்ட்னெர், இந்தர சிங் சோதி, எல்லியர்ட், நிக்கோலஸ், சவுத்தி, மெக்லகன்.

இங்கிலாந்து: மோர்கன் (கப்டன்), ஜேசன் ரோய், ஹேல்ஸ், ஜோ ரூட், பட்லர், பென்ஸ்டோக்ஸ், மொயின் அலி, ஜோரடன், டேவிட் வில்லி, அடில் ரஷித், பிளாங்கெட், டாசன், பில்லிங்ஸ், ஜேம்ஸ் வின்ஸ் ரீஸ்டோப்லே. (க)



# 65 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்தை உடன் மீள் பரிசீலனை செய்யக் கோரிக்கை

## ஜனாதிபதி, பிரதமருக்கு வடமாகாண சபை கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படவுள்ள 65 ஆயிரம் வீட்டு திட்டத்தினை உடனடியாக நிறுத்தி அதனை மீள் பரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் ஆகியோருக்கு வடக்கு மாகாண சபை கடிதம் அனுப்பியுள்ளது.

இந்த கடிதத்தை வடக்கு மாகாண சபை சார்பில் அதன் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அனுப்பி வைத்துள்ளார்.

வடக்கு மாகாண சபையுடன் கலந்தாலோசிக்காது, தமிழ் தரப்பின் கடும் எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் மத்திய மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனால் குறித்த வீட்டுத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சரது செயற்பாட்டினை வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வின் போது வன்மையாக கண்டித்த வடக்கு மாகாண சபை,

குறித்த வீட்டுத்திட்டத்தை உடனடியாக நிறுத்துமாறும், அதனை மீள்பரிசீலனை செய்யுமாறும்வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்களால் கடந்த அமர்வில் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டது. இதனை அடுத்தே மேற்படி கடிதம் நேற்றைய தினம் அவைத்லைவரினால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், ஆளுநர் ரெஜினோல்ட் குரே ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 65 ஆயிரம் வீட்டு திட்டத்தை வழங்கியமையை நாங்கள் வரவேற்கின்றோம். எனினும் குறித்த பொருத்து வீட்டு திட்டம் தொடர்பில் எம்மோடு கலந்தாலோசிக்காது செயற்பட்டமையானது சரியான நடைமுறையாக தோன்றவில்லை. குறித்த வீட்டுத் திட்டத்தில் ஒரு வீட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 21 இலட்சம் ரூபாய் என்பது அதிகமான தொகையாகும்.

எளிதில் உடைக்க கூடிய இந்த வீடுகளினால் அந்த பகுதிகளில் வாழும் மக்களது பாதுகாப்பு கேள்விக் குறியாக்கப்படும். இதனால் பாலியல் ரீதியான குற்றங்களும் இடம் பெறலாம். குறித்த வீட்டு திட்டத்தில் தனி ஒரு வீட்டுக்கு ஒதுக்கப்பட்டுள்ள 21 இலட்சம் ரூபாவிற்கு. சீமெந்திலான இரண்டு வீடுகள் கட்ட முடியும். இந்த பொருத்து வீடுகள் இங்கு நிலவும் காலநிலைக்கு ஏற்றதாகவும் இல்லை.

மழை காலங்களில் வெள்ளம் வீட்டுக்குள் உட்புகும் சாத்தியங்களும் உள்ளன. ஆகையால் உடனடியாக இந்த வீட்டுத் திட்டத்தை நிறுத்தி வடக்கு மாகாண சபையுடன் கலந்தாலோசித்து செயற்படுத்துமாறு கோருகின்றோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)


## வேலையாட்கள் தேவை

யாழ் நகர் மற்றும் கொக்குவிலில் இயங்கிவரும் எமது ஐஸ்கிறீம் உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்களுக்கு கீழ்க்காணும் வேலைக்கு ஆட்கள் தேவை. நிரந்தரமாக வேலை செய்யக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். EPF / ETF உடன் திறமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் கிடைக்கும்.

- உணவு மற்றும் ஐஸ்கிறீம் பரிமாறுநர்கள்
- உதவி எலக்றிசியன் (ஓரளவு Electrical Machanical வேலை செய்ய கூடியவர்கள்)
- உதவியாட்கள் / வேலை பழக விருப்பமுள்ளோர். (O/L, A/L முடித்த 20-25 வயதிற்குட்பட்டோர்)
- உணவக மேற்பார்வையாளர்
- விற்பனைபிரதிநிதி (Sales Rep)
- ஐஸ்கிறீம் வாகன சாரதி ( ஐஸ்கிறீம் வாகனத்தில் அனுபவமுள்ள- ஐஸ்கிறீம் விற்பனையில் அனுபவமுள்ள AD சாரதி அனுமதி பத்திரமுள்ளவர்கள்)
- ஐஸ்கிறீம் பட்டறை வேலை செய்ய கூடியவர்கள்
- ஐஸ்கிறீம் உற்பத்திப்பிரிவில் (கொக்குவிலில்) வேலை செய்ய கூடிய உற்பத்தி, பொதியிடல் கிளீனிங் வேலையில் அனுபவமுள்ள/ அனுபவமில்லாத பெண் பிள்ளைகள்

நல்ல சுகாதார பழக்கவழக்கங்களுடன் மருத்துவ ரீதியில் உணவு கையாளக்கூடிய திறன் கொண்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்

**ஷைலோ ஐஸ்கிறீம் மற்றும் உணவகம்**
இல. 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
**0777 710785**

(4036)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 07 03 1952



இறப்பு 11 04 2015

**அமரர் ஜெயராசா உதயகுமார் (J.P)**
(ஓய்வுபெற்ற மாநகர சபை உத்தியோகத்தர்)

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
பண்புடன் எமை வளர்த்து பார்புகழவைத்து
இன்பமுடன் நாம்வாழ, எல்லாம் எமக்களித்து
ஈசன் கழல் சேர்ந்தனையோ!
நெஞ்சிருக்கும் வரை நாம் மறவோம்
உங்கள் நினைவால் என்றென்றும் வாழ்ந்திருப்போம்

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'கலாபவனம்'
அல்வாய் மேற்கு, திக்கம்.
தொ.இல. 077 401 1352

(ச-4156)

குடும்பத்தினர்
மனைவி, மகன், மகள்,
மற்றும் உறவினர்கள்.


### யானைக்குட்டி; தவறை ஏற்கும் தம்லோக தேரர்

(கொழும்பு)

யானைக்குட்டி ஒன்றை பராமரித்து வந்த தாம் அதற்கான அனுமதியை பெறவில்லை என்பதை உடுவே தம்மாலோக்க தேரர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அவர் தமது தவறை ஏற்றுக் கொண்டார். இதன் காரணமாகவே தாம் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும் நீதிமன்றமே தமக்கு பிணை வழங்கியதாக தெரிவித்த அவர் தாம் பிணை மனு எதனையும் தாக்கல் செய்யவில்லை என்றும் தெரிவித்தார். (இ-5)

## இராசி பலன்

30.03.2016
(பங்குனி 17, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.11 மணிக்கு
சப்தமி பின்னிரவு 4.33மணிவரை
கேட்டை முற்பகல் 8.32மணிவரை
சுபநேரம் 4.42-6.12 மணிவரை
இராகுகாலம் 12.12-1.42 மணிவரை

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத | | | |
| சுக், கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் ரோகினி காலை 8.24இற்கு தனு-சந் | | |
| | | | குரு ராகு |
| சந் | சனி, செவ் | | |

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆரோக்கியமான நாள்.

**மேடம்:** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள்,வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**இடபம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் அதிகரிக்கும் நாள்,வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள், சோர்வு ஏற்படலாம்.

**மிதுனம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், விருந்தினர்களின் வருகையுண்டு, ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், கௌரவமான நாள்.

**கும்பம்:** சமயோசித புத்தியால் பலரையும் கவர்வீர்கள், தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**கடகம்:** பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பயணத்தால் பலன் கிடைக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்:** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, வழிபாடு காரிய வெற்றி தரும், சுபவிரயங்கள் கூடும் நாள்.

**சிம்மம்:** பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம் பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**தனுசு:** வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், சோம்பலை விலக்குவது நல்லது, வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், வெளியூர் பயணமொன்று உருவாகலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தினரின் எண்ணங்களை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்.

**துலாம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், பழைய பாக்கிகள் திடீரென வசூலாகும், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வாகன பழுதுச் செலவுகள் குறையும்.

# பெண்கள் அரசியல் ரீதியாகப் பலப்படுத்தப்பட்டால் அனைத்து பிரச்சினைகளிலிருந்தும் விடுபடமுடியும்

## யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**பெண்களுக்கு அரசியல் மட்டத்தில் கூடுதலான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, அரசியல் ரீதியாக பலப்படுத்தப்பட்டால் மட்டுமே அவர்கள் அனைத்து பிரச்சினைகளிலிருந்தும் விடுபடமுடியும் என யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.**

"சமத்துவத்துக்கான உறுதிமொழி, வலுவான பெண்கள், நிலையான நாளைய தினம்" எனும் தொனிப் பொருளில் மகளிர் தின நிகழ்வு நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிலைய மண்டபத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையற்றுகையில்,

சர்வதேச மகளிர் தினத்தின் முக்கியத்துவமாக விளங்குவது எமது சமூகத்தில் பெண்கள் ஆண்களுக்கு சமமாக, இணையாக சென்று வாழ்வதற்கான ஏற்பாட்டை அனைத்து மட்டங்களிலும் நினைவுபடுத்துவதற்கு கொண்டாடப்படுவது ஆகும்.

அந்த வகையில் மகளிர் தினம் என்பது அவர்களை குறிப்பிட்ட ஒரு வரையறைக்குள் அடைத்து விடாது பொருளாதார, சமூக, அரசியல் மட்டங்களில் ஆண்களுக்கு இணையாக செல்ல ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நிகழ்வு ஆகும்.

எமது தமிழ் கலாசாரத்தின் படி பெண்களை நாம் அதிகளவாக மதிக்கின்ற பண்பு காணப்படுகிறது. குடும்பம்,சமூகம் என்று பார்க்கும் போது சில பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. அப் பிரச்சினைகளின் மூலம் பெண்களுக்கு உரிமைகள் இல்லை என்று கூற முடியாது.

கல்வித் துறையிலும் அலுவலகங்களிலும் 80 வீதத்திற்கும் மேல் பெண்களே சிறந்து விளங்குகின்றனர். எமது நாட்டில் இலவசக்கல்வி வாய்ப்பானது ஆண்-பெண் பாகுபாட்டை குறைத்துள்ளது.

எமது சமூக நிலையில் குடும்பத்தில் தாய், மனைவி செய்கின்ற வேலைகள் அதன் பெறுமதி கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

அவர்கள் அன்றாடம் செய்யும் வேலைகளை கருத்தில் கொண்டால் ஒரு நாளுக்கு ஆண் செய்கின்ற வேலையை விட அதிகமான வேலையை பெண்கள் வீட்டில் செய்கிறார்கள் என்பதே உண்மை.

மேலும் எமது பெண்களுக்கு அரசியல் மட்டத்தில் கூடுதலான விழிப்புணர்வு தேவை. அரசியல் ரீதியாக பெண்கள் பலப்படுத்தப்பட்டால் தான் எல்லா பிரச்சினைகளிலும் இருந்து விடுபட முடியும்.



கூடுதலான பெண்கள் அரசியலில் ஈடுபடும் போது நாளுக்குநாள் அனைத்து மட்டங்களிலும் மாற்றங்கள் ஏற்படும்.

அதன் மூலம் பிரச்சினைகளை இலகுவில் தீர்த்துக் கொள்ள முடியும்.

எமது பிரதேசம் போரால் பாதிக்கப்பட்ட பிரதேசம். இங்கு கணவனை இழந்த பெண்கள், பிள்ளைகளை இழந்த தாய்மார் அன்றாட வாழ்க்கையை நடத்திச் செல்வதற்கு பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்.

இவற்றுக்கு தீர்வு காணப்பட வேண்டும். தனித்துவமாக அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

அனைத்து மட்டங்களும் சேர்ந்து எமது தமிழ் சமூகத்தை சிறப்பான சமூகமாக கொண்டு செல்வதற்கு ஒன்றாக செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கையாக சிரமதான பணிகள் முன்னெடுப்பு

(கரணவாய்)

உடுப்பிட்டி மல்லந்துறை சூர்யோதம் இளைஞர் கழகத்தினரினால் டெங்கு ஒழிப்பினை முன்னிட்டு சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கழகத்தின் தலைவர் ஆர். ருசாந தலைமையில் இச்சிரமதானப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

உடுப்பிட்டி,நெல்லியடி சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர்கள், கழக உறுப்பினர்கள் இணைந்து இச்சிரமதானப் பணியினை மேற்கொண்டுள்ளனர். (இ-60)



# க.பொ.த.(சா/த)பரீட்சை-2015

**யா/கோப்பாய் சரவண பவனாந்த வித்தியாலயம்**

ச.துசாலினி-8ஏசி, அ.மயூரன்-3ஏ2பி 3சிஎஸ், இ.கயல்விழி- 3ஏபி3சி2எஸ், ச.சங்கமன்-2ஏபி4சிஎஸ், கு.கங்காசுதன்-ஏ4 பி2சி, ஸ்ரீ.சத்யன்-ஏ3சி4எஸ், ச.விநோயா-ஏபி4சிஎஸ், கே.கௌசிகா-ஏபி3சி 2எஸ்.

**யா/வட்டு மத்திய கல்லூரி**

கே.வித்தியா-9ஏ, ரி.தாரணி-8ஏசி, யே.விணோதினி-8ஏசி, ஆர்.துஷ்யந்தன்-6ஏ2பிஎஸ், எஸ்.தினேஸ்-5ஏ2பிசி, எம்.சாளினி-5ஏபி2சிஎஸ், எம்.சோமபாலன்-4ஏ2பி2சிஎஸ், எஸ்.பார்கவி-3ஏ3பி2சிஎஸ், எஸ்.பிரகாஷ்-2ஏ4பி2சிஎஸ், எஸ்-கார்த்திகா-2ஏபி3சி3எஸ்.

**யா/நெடுந்தீவு மகா வித்தியாலயம்**

அன்ரன் விமலதாஸ் கில்பகுமார்-ஏபி2சி3எஸ், வி.நிருசா -3ஏபி4சி, பி.கேசவரஜனி -2பி4சி 2எஸ், யே.கிருஷாலினி - 5ஏ2பிசிஎஸ், ஆர்.ரகுவர்மன்-பி4சி2எஸ், டி.மயூரராஜ்-3பி4சிஎஸ், யே.கிருஷ்டிராஜ்கிரன்-ஏபி2சி4எஸ், பி.அமலதீபன்-2பி2சி2எஸ்.

**யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்**

எஸ்.கிருபாஜினி-7ஏ2சி, ஆர்.லவேஸ்-4ஏபி2சி2எஸ், ஆர்.பவேஸ்-3ஏபி3சி2எஸ், யே.கிரிதரன்-4ஏ2பிசிஎஸ், ரி.செந்தூர்-3ஏபி3சிஎஸ், யே.அஜந்தா-2ஏபி5சிஎஸ்,ஆர்மீரா-3ஏபிசி3எஸ், ஏ.சுகேதா- 2ஏ3 பி2சி2எஸ், ஆர்.ரூபதனா-2ஏசி5எஸ். (இ-5)

யாழ்.செய்திகள்

## யாழ்.நகரில் இயங்கி வந்த வாகன பாதுகாப்பு நிலையங்கள் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் இயங்கி வந்த துவிச்சக்கர வண்டி மற்றும் வாகன பாதுகாப்பு நிலையங்கள் தற்போது வேறு இடங்களில் இயங்கி வருவதாக அதன் நடத்துநர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி யாழ்.மாநகரசபையினால் பிரதான பேருந்து நிலையம் அருகாமையில் நடத்தப்பட்டு வந்த பாதுகாப்பு நிலையம் யாழ்.முனியப்பர் வீதியிலும் (யாழ்.வீரசிங்கம் மண்டபம் அருகாமையில்)யாழ்.போதனா வைதத்திய சாலையில் இயங்கி வந்த வாகன பாதுகப்பு நிலையம் யாழ். ஆஸ்பத்திரி வீதி, இராமையா செட்டியார் வீதியிலும் (சம்பந்தன் கிளினிக் ஒழுங்கை) தனியார் பேருந்து நிலையம் அருகாமையில் இயங்கிவரும் வாகன பாதுகாப்பு நிலையம் தொடர்ந்தும் அதே இடத்தில் இயங்கி வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இடங்களை பொது மக்கள் அறிந்து கொண்டு தங்களுக்கு ஏற்ற பாதுகாப்பு நிலையங்களில் தமது துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்களை தரிக்க முடிய்மென அறிவுத்துள்ளனர்.

மேலும் குறித்த மூன்று துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்களும் 24 மணி நேரமும் இயங்கு நிலையில் இருக்கும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-4)

# பொலிஸ் சோதனைச் சாவடி கப்பூது பகுதியில் வேண்டும்

## பொதுமக்கள் வேண்டுகோள்

வடமராட்சியில் இருந்து தென்மராட்சிக்குச் செல்லும் புலோலி-சாவகச்சேரி வீதியில் கப்பூது பகுதியில் பொலிஸ் சோதனைச் சாவடி ஒன்றினை அமைப்பதன் மூலம் பொதுமக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் எனப் பொது மக்களினால் கோரப்பட்டுள்ளது.

இவ்வீதியினால் பயணம் செய்வோர் ஆட்கள் நடமாட்டம் அற்ற கப்பூது வெளிப் பகுதியில் செல்லும் போது அப்பகுதியில் மோட்டார் சைக்கிள்களில் நிற்கும் இளைஞர்கள் சிலரினால் தாக்கப்படுவதும் வழிப்பறிப்பும் மேற்கொள்ளப்படும் நிலையே தொடர்ந்து காணப்படுகிறது.

வடமராட்சியில் இருந்து தென்மராட்சிக்குச் செல்லும் இரண்டு பிரதான பாதைகளுக்கும் முள்ளி கப்பூது பகுதிகளில் பொலிஸ் சோதனைச் சாவடிகளை அமைக்குமாறு சிவில் பாதுகாப்புக் குழுக்களுககிடையிலான கலந்துரையாடலகளில் பொதுமக்கள் பொலிஸாரிடம் வேண்டுகோளினை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் முள்ளிப் பகுதியை அண்டிய பகுதியில் பருத்தித்துறைப் பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளதனால் அப்பகுதியால் சென்று வரும் பயணிகள் அச்சமின்றி தமது பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் கப்பூது பகுதியில் எவ்வித சோதனை நிலையமும் இன்மையால் அப்பகுதி வழிப்பறி நடைபெறும் இடமாக மாறியுள்ளது.

காங்கேசன்துறைப் பிராந்தியத்திற்குட்பட்ட நெல்லியடிப் பொலிஸ் பிரிவிற்குள் இருக்கும் இப்பகுதிக்கு ஒரு பொலிஸ் சோதனைச் சாவடியினை நிரந்தரமாக அமைப்பதன் மூலம் அப்பகுதியால் பொது மக்கள் அச்சமின்றி சென்று வரக் கூடிய நிலை ஏற்படும் எனப் பொது மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.(இ-60)

# மக்களின் பணம் எனக்கு வேண்டாம்

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

பணம் எனக்கு தேவையில்லை. எனது மூதாதையர் பணம் கொடுத்துள்ளனர். நானும் 45 வருடகாலம் சட்டத்தரணியாக கடமையாற்றியவன். இறைவன் எனக்கு கொடுத்தது போதும். எனவே நான் பொதுமக்களிடமிருந்து பணத்தை எடுக்கத் தேவையில்லை என்று மீள்குடியேற்ற மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார்

அம்பாறை மாவட்டம் கஞ்சிக்குடிச்சாறு, தங்கவேலாயுதபுரம், மீள்குடியேற்றக் கிராமங்களில் முதற் கட்டமாக அமைக்கப்பட்ட 100 வீடுகளை கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் இவ்வாறு தெரிவித்தார்

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு இலட்சத்து 32 ஆயிரம் வீடுகள் தேவை. ஆனால் முதலில் 65 ஆயிரம் வீடுகளை கட்டிக் கொடுக்கப்பதற்கு திட்டமிட்டோம். இந்த வீடுகளை கட்டுவதற்கு இன்று அரசாங்கத்தில்பணமெடுக்க முடியாது.

இவ் வீடுகளை எவ்வாறு கட்டிக்கொடுக்க முடியும் என அறியாது பத்திரிகைகளில் எழுதுகின்றனர். அரசியல் வாதிகள் பாராளுமன்றத்திலே பேசுகின்றனர். எனவே இதற்கான பணத்தை எவ்வாறு பெறுவது என அறிந்து பேசுவது நன்று.

இந்த 65 ஆயிரம் வீடுகளை கட்டும் திட்டத்தில் ஒரு அதிகாரம் கொண்ட கம்பனி பணத்தை கொண்டுவந்து அந்த பணத்தை திருப்பி அரசாங்கம் 12 வருட காலத்தில் கொடுக்க முடியுமானால் தான் அந்த வீடுகளைக் கட்ட முடியும். அதற்காகவே நாங்கள் இணையத்தளங்கள் மற்றும் பத்திரிகைகளில் சர்வதேச ரீதியாக விளம்பரம் செய்தோம்.

அதில் உலகத்திலே பிரபல்யமான 56 கிளைகளைக் கொண்டதும் 2 இலட்சத்து 25 ஆயிரம் பேர் வேலை செய்யும் முதலாவது பெரிய கம்பனியுடன் ஒப்பந்தம் செய்தோம்.

மக்களுக்கு ஒரு முன்னேற்றத்தை கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் இருக்கின்ற நிலையில் அல்லவா இருக்கவேண்டும். அப்படி முன்னேற்றம் இல்லாது வாழவேண்டுமா?

நீங்கள் பத்திரிகையில் எழுதினால் ஒரு சமர்ப்பணம் செய்வதில் ஓர் அடிப்படையை செய்யுங்கள். நீங்கள் உங்களுக்கு வேண்டியதை எழுதினால் அதனை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். நான் பிழை செய்திருந்தால் அதனை ஏற்பதற்கு தயார்.

பிரான்ஸில் இருந்து திட்டம் கொண்டுவரப்பட்டு விஞ்ஞான ரீதியாக சகல துறைகளையும் ஆராய்ந்து 30 வருட உத்தரவாதத்துடன் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

பத்திரிகையொன்றில் அந்த வீட்டு ஜன்னலுக்கு கம்பி போடவேண்டும் என எழுதுகின்றனர். அது போடவேண்டும். அவ்வாறே சில சில குறைகள் உள்ளன. அதனை திருத்தி செய்யவுள்ளோம். அதனை ஏற்றுக் கொள்கின்றேன்.

30 வருட காலம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்கு வேண்டியதை கொடுக்க வேண்டும். அந்த மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை கூட்ட வேண்டும். அவர்களுக்கும் இவ்வாறான வீடுகளே தேவை என்கிறார்கள்.

தற்போது திறந்து வைத்துள்ள வீடுகள் தொடர்பாக நான் பேச விரும்பவில்லை. ஆகையினால் அப்படியான வீடுகளைக் கொடுத்தால் திரும்ப அதே நிலையில் தான் மக்கள் இருப்பார்கள். அப்படியான நிலைதான் உங்கள் அரசியல் வாதிகளுக்கு வேண்டும். அதைத்தான் இந்த அரசியல்வாதிகள் கேட்கின்றார்கள்.

ஏன் காஸ் கொடுத்துள்ளதாக சிலர் கேட்கிறார்க்ள. இன்று விறகு ஒரு கிலோ வாங்குவதற்கு 15 ரூபா தேவை. இவ்வாறாயின் மாதம் ஒன்றுக்கு 3 ஆயிரம் ரூபா தேவை ஆனால் காஸுக்கு ஆயிரத்து 450 ரூபா மட்டும் தான் தேவை.

கட்டப்படும் வீடு 3 தொன் நிறையுடையது. அந்த வீட்டை ஆட்டமுடியாது. அந்த வீட்டை கையால் ஆட்டமுடியும் என்று ஒரு அரசியல்வாதி கூறினார். 3 தொன் வீட்டை ஆட்டவேண்டுமென்றால் சுப்பர் மான் தேவையாகும். அப்படியான சுப்பர் மான் இலங்கையில் இல்லை என நினைக்கின்றேன்.

அப்படி அந்த வீட்டை ஆட்டினால் நான் மில்லின் ரூபா கொடுப்பதற்கு தயாராகவுள்ளேன். நான் அந்த அரசியல் வாதியுடன் பந்தயம் பிடிப்பதற்கும் தயாராகவுள்ளேன். இந்த வீடுகளை கட்டிக் கொடுக்கும் போது தளபாடம், ரிவி, சூரிய ஒளி மின்சாரம், காஸ் என்பன கொடுக்கின்றோம்.

எனவே அதனை நான் செய்து முடிப்பேன். பிரச்சினை இருந்தால் ஏதும் பிழையிருந்தால் அதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன். செய்யாத பிழையை நான் எப்படி ஏற்றுக்கொள்வது. ஒவ்வொரு நாளும் பத்திரிகையில் போடுகின்றனர்.


நான் இப்படி வீடுகளை கட்டிக் கொடுத்தால் உங்கள் அரசியல் வாதிகளுக்கு பயமாக இருக்கின்றதா? அரசியல் வாதிகள் பயப்படத் தேவையில்லை. உங்களுக்குத் தான் நான் செய்கின்றேன். உங்கள் கட்சிக்குத்தான் செய்கின்றேன். உங்கள் கட்சிக்கு செய்யவேண்டாம் என்றால்நான்செய்யமாட்டேன்.

நான் யாழ்ப்பாணத்திலே மட்டக்களப்பிலே வாக்கு கேட்க தேவையில்லை. தமிழரசு கட்சிக்கு இன்னும் ஆதரவு கிடைக்கவேண்டும் என்ற அடிப்படையில் தான் நான் இதனை செய்கின்றேன்.

நான்சமுதாயத்துக்கு செய்ய வேண்டிய கடமையை செய்கின்றேன். ஜனாதிபதியும் பிரதமரும் என்னிடம் கொடுத்த கடமையை செய்கின்றேன். அந்த கடமையை செய்வதற்கு இவர்கள் விடுவதாக இல்லை.

சொல்வது எல்லாம் பொய்யாகவுள்ளது. உண்மையைச் சொன்னாலும் பரவாயில்லை. இந்த திட்டத்தில் களவு செய்வதாகவும் இல்லாததொன்றை கூறுகிறார்கள்.

எனவே எழுதுவதை சரியான முறையில் எழுதவும். மக்களுக்கு கடமையை செய்ய வேண்டும் என்றால் அந்த கடமையை செய்யுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)



# குறைகேள் அரங்கு...

## வளலாய் வீட்டுத்திட்டத்தில் புறக்கணிப்பு ஏன் என வினவும் மக்கள்

போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட கிராமங்களில் பலாலி விமான நிலையத்திற்கு அண்மையாகவுள்ள வளலாய் கிராமமும் ஒன்றாகும். அதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்து வீட்டுத்திட்டங்களை வழங்கி வருவது நன்று தான். ஆனால் பெறுமதி மிக்க வீடுகளை இழந்தவர்களுக்கு உரிய அதிகாரிகளினால் வீடு வழங்கப்படுவதற்கு சிபார்சு செய்யப்படவில்லை.

வீட்டுரிமையாளர்களாகிய நாம் எமது வீட்டைத் தகர்க்கவில்லை. போரினாலேதான் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன. வீடுகளைக் கட்டி விட்டு சிலர் வேறு இடங்களில் வசிக்கின்றார்கள்.

இப்பொழுது வளலாய் கிராம அலுவலரின் பிரிவில் வழங்கப்படவுள்ள 100 வீடுகளில் உண்மையாக வீட்டை இழந்த குடும்பத்தினருக்குப் பல்வேறு நொண்டிச் சாட்டுகளைக் கூறி வீடு வழங்கப்படவில்லை.

தற்காலிக வீடு என்று கூறப்படுகின்ற தரமற்ற வீடுகளை மாத்திரம் வீடில்லாத குடும்பங்களுக்குத் தரலாமெனக் கூறி விண்ணப்பப்படிவங்களை நிரப்பிக் கையொப்பத்தை மாத்திரம் பெற்றுள்ளனர்.

ஆகையால் இதனைப் பூரணமாக விசாரணை செய்து உண்மையாகவே வீட்டை இழந்த குடும்பத்தினருக்கு வயதுக் கட்டுப்பாட்டையோ குடும்ப எண்ணிக்கையையோ கருத்தில் எடுக்காது தரமான வீடுகளை வழங்கிப் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை மேலும் பாதிப்படையச் செய்யாமல் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம். மேலும் வீட்டுத்திட்ட பயனாளிகளைத் தெரிவு செய்வதில் தரகுப்பணம் கைமாறுகிறதா? எனக் கூட மக்கள் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

ஆகவே பிரதேச செயலக அதிகாரிகள் வளலாய் கிராமத்தில் உண்மையாகவே வீடுகளை இராணுவ நடவடிக்கையால் இழந்தவர்களை வளலாய் கிராமத்திற்கு வந்து நேரில் சந்தித்து வீட்டுத் திட்ட வீட்டை அவர்களுக்கு வழங்கி அவர்களுடைய பாதிப்பை நிவர்த்தி செய்து உதவுமாறு பணிவுடன்வேண்டுகிறோம்.

பாதிக்கப்பட்ட மக்கள்
(வளலாய்)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1988RC<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா:52செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/4030 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 8சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்<br>தொ.இ: G/4866 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 36செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: DIPLOMA/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4031 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 50சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/4869 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 28சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/4033 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 2சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 158cm<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4870 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 18சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்:BPES, MPES/ விரிவுரையாளர்<br>தொ.இ: B/4036 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 73செவ் 1 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:HNDA, B.COM/ அரசதொழில்<br>தொ.இ: G/4872 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# இரண்டு பௌத்த மதகுருமார்கள் உள்ளிட்ட ஐவருக்கு வவு. நீதிமன்றம் அழைப்பாணை

(குருமன்காடு)

பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டமை தொடர்பில் இரு பௌத்த மதகுருமார் உள்ளிட்ட ஐவருக்கு வவுனியா நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

கடந்த 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வீதியைப் புனரமைத்து தருமாறு கலாபேபஸ்வேவ உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சிங்கள மக்கள் வீதிப் போக்குவரத்திற்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் 5 மணி நேரம் ஏ-9 வீதி உள்ளிட்ட வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் வவுனியா பொலிஸார் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து ஐவருக்கு நீதிமன்றம் நேற்று முன்தினம் அழைப்பாணையை அனுப்பியுள்ளது.

இதன்படி குறித்த ஆர்ப்பாட்டத்தை வழிநடத்தி பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் இரு பௌத்த மதகுருமார், கலாபேபஸ வேவ பாடசாலை அதிபர், வவுனியா நகரசபை முன்னாள் உறுப்பினர் உட்பட ஐவருக்கே இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதி அவர்களை வவுனியா நீதிமன்றில் முற்படுமாறும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)




## கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதிகளில் நேற்று சுகாதார நிலைமை குறித்து அவதானிப்பு நடவடிக்கை

(மல்லாவி)

கிளிநொச்சி நகரை அண்மித்துள்ள பகுதிகளில் காணப்படும் சுகாதார நிலைமை தொடர்பில் நேற்று விசேட அவதான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி சுகாதார பணிமனையுடன், பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து குறித்த செயற்பாட்டில் நேற்று ஈடுபட்டனர். கிளிநொச்சி நகரை அணமித்த பகுதியில் காணப்படும் சுகாதார நிலை தொடர்பில் அவர்கள நேரில் சென்று பார்வையிட்டனர்.

நேற்றுக் காலை 9 மணியளவில ஆரம்பிக்கப்பட்ட குறித்த அவதானிப்பு நடவடிக்கையின் போது, நுளம்பு பெருகும் இடங்கள், நீர் வடிகாலமைப்பு, குப்பைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக காணப்படும் வெப்பம் காரணமாக பல்வேறு நோய் தாக்கங்கள் காணப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் சில பகுதிகளில் குறிப்பாக ஜெயபுரம் பகுதியை அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் மழை பெய்தது. தற்போது மப்பும் மந்தாரமுமான காலநிலை காணப்படும் நிலையில் குறித்த விசேட அவதான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் மழை பெய்யும் சந்தர்ப்பத்தில் தொற்று நோய்களை தடுக்கும் நோக்குடன் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கதாகும். (2-3-15)

## க.பொ.த.(சா/த) பெறுபேறு-2015

**மன்/கௌரியம்பாள் அ.த.க.பாடசாலை**

ச.கம்சாருஜன் - 4ஏபி3சிஎஸ், க.பிரதீபன் - 4ஏ2பிசிஎஸ், பு.அனோஜன் - 2பி4சி3எஸ், சி.அர்ச்சனா - ஏபி2சி4எஸ், சி.சுகன்யா - 2பி3சி2எஸ்.க.சீதாலக்சுமி - பி3சி4எஸ், உ.உசாநந்தினி -பி4சி3எஸ்.(2-3)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

(முள்ளியவளை)

மு/ வித்தியானந்தாக் கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக பழைய மாணவர் சங்க செயலாளர் வே.அருணோதயம் அறிவித்துள்ளார்.

இக்கூடத்தின் போது இவ்வாண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது. இக் கூட்டத்திற்கு பாடசாலையின் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

▲▲▲▲▲▲▲▲▲▲▲

மு/வித்தியானந்தாக்கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டமும்நிர்வாக சபைத் தெரிவும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் கு.அரசரட்ணம் அறிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் இரண்டாண்டு பதவிக் காலத்திற்கான புதிய நிர்வாக உறுப்பினர்களின் தெரிவு இடம் பெற்றுள்ளமையால் இக் கூட்டத்திற்கு பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (2-3-302)

## வவுனியாவில் மோட்டார் சைக்கிள் விபத்து; இரு இளைஞர்கள் வைத்தியசாலையில்



(குருமன்காடு)

வவுனியா தேக்கவத்தை பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகியதில் இரு இளைஞர்கள் காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

ஏ-9 வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இரு இளைஞர்களை கடமையில் இருந்த போக்குவரத்து பொலிஸார் மறித்துள்ளனர்.

எனினும் இளைஞர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்தாது சென்றமையினால் போக்குவரத்து பொலிஸார் அவர்களை துரத்தி சென்றுள்ளனர்.

இந் நிலையில் வேகமாக சென்ற இளைஞர்கள் செலுத்திய மோட்டார் சைக்கிள் தேக்கவத்தை பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனையடுத்து அப்பகுதியில் நின்றவர்கள் இளைஞர்கள் இருவரையும் உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதித்தனர். அவர்களுக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. (2-3-250)

# நீதிமன்ற அபராதங்கள்

(மல்லாவி)

கிளிநொச்சி பகுதியில் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச் சென்ற ஆறு சாரதிகளுக்கு தலா ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மணலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச் சென்ற ஆறு டிப்பர் வாகனத்தையும் அதன் சாரதிகளையும் கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் சாரதிகளை நேற்று பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஜே.பிரபாகரன் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புபட்ட சாரதிகளுக்கு தலா ஐயாயிரம் ரூபா வீதம் முப்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மணலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது."

▲▲▲▲▲▲▲▲▲▲▲

கிளிநொச்சி பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றியவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிய ஒருவரை உழவு இயந்திரத்துடன் கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த சாரதியினை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.கே.பிரபாகரன் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றவாளிக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

▲▲▲▲▲▲▲▲▲▲▲

கிளிநொச்சி பகுதியில் மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு 7500ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஏ-9 வீதியில் மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற ஒருவரை கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த் சாரதியை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஜே.பிரபாகரன் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த சாரதிக்கு ஏழாயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

▲▲▲▲▲▲▲▲▲▲▲

கிளிநொச்சி,வட்டக்கச்சி ஆகிய பகுதிகளில் கசிப்புடன் கைது செய்யப்பட்ட பெண் உட்பட இருவருக்கு80 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத கால கட்டாயச்சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் கடந்த ஆண்டு கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் நிலுவையில் இருந்த வழக்குடன் தொடர்புபட்ட பெண் குறித்த குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்ட நிலையில் 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் பத்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஆறு மாத கால கட்டாயச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று கடந்த ஆண்டு கசிப்புடன் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் பத்து வருடங்களிற்கு ஒத்தி வைக்கப்பட்ட ஆறு மாத கால கட்டாயச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பெண் உட்பட இருவரையும் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஜே.பிரபாகரன் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து மேற்படி தண்டப்பணம் அறவிடப்பட்டதுடன் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனைகளும் விதிக்கப்பட்டன. (2-3-15)









கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 24 ஆம் திகதி பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற போது... (படங்கள்:- கிளிநொச்சி-1 செய்தியாளர்)

# வவுனியாவில் முதலாம் நாள் அமர்வு



காணாமற்போனோர் தொடர்பான விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் வவுனியா மாவட்டத்திற்கான அமர்வுகள் நேற்று ஆரம்பமாகி இன்றுடன் நிறைவு பெறுகின்றது. இதில் நேற்று நடைபெற்று முடிந்த முதலாம் நாள் அமர்வின் போது... (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

# பேசாலையில் பூட்டிய வீட்டிலிருந்து

# 44கிலோகிராம் கஞ்சா பொதிகள் மீட்பு

## வீட்டின் உரிமையாளரைத் தேடுகிறது பொலிஸ்

(மன்னார்)

**மன்னார் பேசாலை பகுதியில் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 44 கிலோ கிராம் கேரள கஞ்சா பொதிகளை மன்னார் பொலிஸ் நிலைய போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் மீட்டுள்ளனர்.**

இந்த கஞ்சாப் பொதிகள் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் பேசாலை முருகன் கோவில் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து மீட்கப்பட்டது. மன்னார் பொலிஸாருக்கு கிடைககப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து, ஸ்தலத்துக்கு விரைந்து சென்ற மன்னார் பொலிஸ் நிலையத்தின் மாவட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் குறித்த வீட்டை முற்றுகையிட்டனர்.

எனினும் வீடு மூடப்பட்ட நிலையில் காணப்பட்டதால், மன்னார் பொலிஸ் நிலையத்தின் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரி, மன்னார் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து, மன்னார் நீதிமன்றத்தின் அனுமதியோடு அன்றையதினம் பிற்பகல் 4 மணியளவில் குறித்த வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு, பொலிஸ் மோப்பநாயின் உதவியுடன் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது 20 பொதிகளில் அடைக்கப்பட்ட 44 கிலோகிராம் கேரள கஞ்சாப்பொதிகள் மீட்கப்பட்டன.

குறித்த வீட்டின் உரிமையாளர் போதைப்பொருள் வியாபாரி என தெரிவித்த மன்னார் பொலிஸ் நிலையத்தின் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரி, பிரஸ்தாப நபரை தேடி வருவதாகவும் தெரிவித்தார்.

குறித்த கஞ்சாப்போதைப்பொருள் 44 இலட்சம் ரூபாய் பெறுமதியுடையது எனவும் கஞ்சாப்போதைப் பொருளை மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-3-281)

## இராணுவம்,பொலிஸ்-அரச பணியாளர்கள் இணைந்து முல்லைத்தீவில் டெங்கு நுளம்பு ஒழிப்புப் பிரசாரம்

### 15 அணிகள் வீடுவிடாகச் சென்று சோதனை

முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தலைமையில் வீடு வீடாக சென்று டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வகையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுடன் கிராம அலுவலர்கள், கிராமங்களில் நியமிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,சமுர்த்தி அலுவலர்கள, பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோர் இணைந்து 15 அணிகளாக பிரிந்து காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை வீடு வீடாகச் சென்று நுளம்பு பெருகக் கூடிய இடங்கள், நீர் நிலைகள் குறித்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

ஒவ்வொரு குடும்பங்களிற்கும் டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்துவதற்கும் அவற்றை ஒழிப்பதற்குமான விழிப்புணர்வுக் கருத்தூட்டல்களையும் வழங்கினர்.

நேற்றைய தினம் முள்ளியவளை கிழக்கு, மேற்கு,வடக்கு, தெற்கு, மத்தி ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளுடன் புதறிகுடா வற்றாப்பளை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள கிராமங்களிற்கும் சென்று மேற்படி நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அத்துடன் இன்று தண்ணீரூற்று கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளுக்கும் செல்லவுள்ளனர் என பிரதேச செயலக தகவல் தெரிவிக்கின்றன. (2-3-302)

வன்னி வலம்

## மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்பட்ட

# வவு. வீட்டுத்திட்ட விண்ணப்பப்படிவத்திற்கு கையெழுத்துப்பெற முண்டியடிக்கும் மக்கள்

(பனிக்கன்குளம்)

மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்ட 65 ஆயிரம் வீட்டுத்திட்டத்திற்கான விண்ணப்பப்படிவத்தில் பிரதேச செயலாளரின் கையொப்பத்தை பெறுவதற்காக பொதுமக்கள் நேற்றுக் காலையில் இருந்தே முற்றுகையிட்டனர்.

மீள்குடியேற்ற அமைச்சினால் வீட்டுத்திட்டத்தைப் பெறுவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த நிலையில் விண்ணப்பப்படிவத்தில் பிரதேச செயலாளர், அரசாங்க அதிபர் ஆகியோரின் கையொப்பங்களை பெறுவதற்காக ஆயிரக்கணக்கானோர் தினமும் வவுனியா பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகத்திற்கு செல்கின்றனர்.

இதன்காரணமாக மக்களைக் கட்டுப்படுத்த முடியாத அரச உத்தியோகத்தர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் விண்ணப்பத்திகதி முடிவடையவுள்ளதனால் மக்களின் நலன்கருதி கடமையை செய்வதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

சீரான நடைமுறையை பின்பற்றாமல் மீள்குடியேற்ற அமைச்சினால் இவ்வாறு விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டமையினால் பிரதேச செயலாளர்கள் மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோர் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், தினமும் மூவாயிரத்திற்கும் அதிகமான விண்ணப்பங்களை பரிசீலித்து கையொப்பம் இடவேண்டியநிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தற்போது கடும் வெப்பமான காலநிலை நிலவி வருவதனால் கைக்குழந்தைகளுடன் தாய்மாரும் வயோதிபர்களும் நீண்ட வரிசையில் காத்திருப்பததையும் காண முடிவதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-3-281)




# தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்- இல.04


★ வலம்புரி கல்விப்பிரிவு ★ பகுதி-II தமிழ்க் கல்விக் கழகம் விடைகள்

## 29.03.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை


01. 1.பிறரை பழித்துப் பேசக் கூடாது.
 தீயோரின் அறிவுரை கேட்க கூடாது.
 2. இழிவு- அவமானம்/தாழ்வு , நீதி- அநீதி
 3.நடத்துகின்றவன்.
 4. உறுதியாக நிற்றல், உறுதி கொள்ளுதல்
 5. பழிச்சொல்
 6.கூட்டம்
 7.இறந்தகாலம்
 8.1.பழி:-நாம் யாரையும் பழிக்ககூடாது
 2.வழி :- நல்ல வழியில் நாம் செல்லுதல் வேண்டும்.
02. 1.பயன்படுத்தாதவை வீணாகப்போகும்.
 2.போலியை கண்டு ஏமாறக்கூடாது.
03.1.புளிப்பான உணவுப்பண்டங்களை உலோகப் பாத்திரங்களில் இடுவதனை தவிருங்கள்.
04.2.தங்கை கேட்ட பொது அறிவு கேள்விக்கு சுமதியால் விடை கூற முடியவில்லை.
05. 1.கரைபுரண்டு
 2.சிறைச்சாலையில்
06. விடாப்பிடி
07.ஏமாற்றுதல்
08.பிழையை மறைத்தல்
09.வாழ்க்கை (3)
 உயர்ச்சி (1)
 தொழில்நுட்பம் (2)
10. 1.கிளிகள் வானில் சிறகடித்து பறந்தன.
 2. நண்பர்கள் இனிமையாகப் பாடினார்கள்.
11. 1.பொன்விழா
 2.தீர்ப்பு
 3.வேட்பாளர்
12. 1. இந்த பென்சிலின் நிறம் என்ன?
 2.அது மேசைக்கு அருகிலா?
13.Knife, Leaf
14.அப்பா தென்னை மரத்தை வெட்டுகிறார்
15.நிவசே லியனய மொகக் (Dh) த?
16.எனது வீட்டுத்தோட்டத்தில் அழகிய வர்ண மயமான பூக்கள் தினமும் பூக்கின்றன
 வீட்டுத்தோட்டத்திலுள்ள பூக்களில் தேனை பருகுவதற்காக வண்ணத்துப்பூச்சிகள் வட்டமிடுகின்றன.
 நான் எனது வீட்டுத்தோட்டத்திலுள்ள பூக்கன்றுகளை நன்கு பராமரித்து வருகிறேன்.
17.20019
18.301
19.25 Km
20.8cm
21.5.50
22.800g
23. 50/=
24.1025ml
25. 2m10cm
26.1. 30
 2.




27.3m 96cm
28.6246, 6125, [5884], 5825 ,5792
29.




30. x=12cm




31. 3
32. 3
33. 4
34. 2
35. 1
36. 2
37. 2
38. 4
39. 3
40. 4
41. 2
42. 4
43. 4
44. 1
45. 2
46. 4
47. 3
48. 2
49. 2
50. 2
51. 4
52. 3
53. 2
54. 4
55. 1
56. 1
57. 4
58. 2
59. 2
60. 3

ஐ.எஸ்.வசமிருந்த

# பல்மைராவில் பெரும் அழிவு



இஸ்லாமிய தேசம் குழுவிடம் இருந்து சிரிய அரச படையினால் மீட்கப்பட்ட பண்டைய பல்மைரா நகரில் பெரும் அழிவுகள் இடம் பெற்றிருப்பது அங்கிருந்து வெளியாகி இருக்கும் புதிய படங்கள் உறுதி செய்துள்ளன.

கடந்த 10 மாதங்களாக ஐ.எஸ். வசமிருந்த இந்த நகரின் சில வரலாற்று பொக்கிஷங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

எனினும் பண்டைய நகரில் பெரும்பாலான இடிபாடுகள் அவ்வாறே உள்ளன.

இந்த அழிவுகள் எதிர்பார்க்கப்பட்டதே என்று சிரிய தொல்பொருள் திணைக்களத்தின் தலைவர் மாமூன் அப்துல்கரிம் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அந்த பகுதி பொதுவாக நல்ல நிலையிலேயே இருப்பதாகதெரிவித்துள்ளார்

பல்மைரா நகரம் கைப்பற்றப்பட்டது தீவிரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் முக்கியமான வெற்றி என்று ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் பாராட்டியுள்ளார்.

ரஷ்ய வான் தாக்குதல் உதவியோடு கடந்த சில தினங்களாக கடும் யுத்தத்தில் ஈடுபட்ட சிரிய அரச படை நகரை தற்போது முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதாக குறிப்பிட்டுள்ளது. (இ-5)

அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்
நீங்கள் அறிந்த
♦செய்திகள்
♦புகைப்படங்கள்
♦நிகழ்வுகள்
♦பேசும் படங்கள்
போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.
VIBER செயலி இல
076 636 3378






## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
## திறந்த கேள்வி கோரல்

மருதனார்மடம் சந்தைத் தொகுதியில் சபையினால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த வாடகைத் தொகைக்கு அமைவாக வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக்கூடிய ஒரே தடவையில் செலுத்தக்கூடிய தொகைக்கான கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால் கோரப்படுகின்றது.

| தொடர் இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை(NBT, VAT வரி தவிர்ந்த தொகை) ரூபாவில் |
|---|---|---|
| 01 | 01 | 1,800,000.00 |
| 02 | 13 | 1,800,000.00 |
| 03 | 01A | 1,200,000.00 |
| 04 | 02A | 1,200,000.00 |
| 05 | 08A | 1,200,000.00 |
| 06 | 09A | 1,200,000.00 |
| 07 | 11A | 1,200,000.00 |

இடம்: வலி.தெற்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், சுன்னாகம்.
காலம்: 06.04.2016 புதன்கிழமை.
நேரம்: முற்பகல் 10.00 மணி

நிபந்தனைகள்
1.திறந்த கேள்வி மூலம் கேள்விதாரர்கள் கடைக்கான ஆகக்குறைந்த தொகையிலிருந்து கேட்கலாம்.
2.கேள்விதாரர்கள் தங்களை மீளப்பெறமுடியாத பணம் ரூபா 1000.00 ஐ செலுத்தி பதிவுசெய்யவேண்டும் .
3.ஆகக்கூடிய தொகை கோரும் கேள்விதாரருக்கே வழங்கப்படும்.
4.சகல நிபந்தனைகளும் பிரதேச சபைகள் சட்டத்திற்கு உட்பட்டதாகும்.

தி.சுதர்சன்
செயலாளர்,
வலி.தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
(C-4162)

# புதிய இலத்திரனியல் அடையாள அட்டைக்கு அடுத்தமாதம் முதல் விண்ணப்பிக்க முடியும்

ஆட்பதிவு திருத்தச் சட்டமூலம் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அனுமதி பெறப்படவுள்ளதுடன் தேசிய அடையாள அட்டையில் கைவிரல் அடையாளம் பொறிக்கப்படவுள்ள தாக ஆட்பதிவுத் திணைக்கள பதிவாளர் அறி வித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கைவிரல் அடையாளங்களை தேசிய அடையாள அட்டையில் பொறிப்பதற்கான இயந்திரங்களை கேள்விப்பத்திர முறையில் ஆட்பதிவுத் திணைக்களம் கோரவுள்ளது.

தகவல் தொழில்நுட்ப முகவர்கள் மூலம் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ள படப்பிடிப்பாளர்களுக்கு சர்வதேச நியமங்களுக்கு அமைவாக பயிற்சியளிக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. தேசிய அடையாள அட்டை 15 வயதிற்கு மேற்பட்டவர்களின் தனிப்பட்ட விபரங்களையும் உள்ளடக்கி இருப்பதுடன் இந்த விபரங்கள் மத்திய தகவல்திட்டத்தின்கீழ் முறைமைப்படுத்துவதுடன் இந்த விபரங்கள் குடிவரவு குடியகல்வு திணைக்களங்கள், சுங்கத் திணைக்களம், மோட்டார் வாக னப்பதிவுத்திணைக்களம்மற்றும்வங்கிகளுக்கு இணைப்பு மூலம் வழங்கப்படவுள்ளன.

தேசிய அடையாள அட்டை 12 இலக்கங்களை கொண்டதாக அமையும். இதில் பிறந்த ஆண்டின் கடைசி இரு இலக்கங்கள் மட்டுமன்றி ஆண்டு முழுமையாக உள்ளடக்கப்படும். இதன் மூலம் 2000 ஆம் ஆண்டும் அதற்குப் பின்னால் பிறந்தவர்களின் அடையாள அட்டை இலக்கங்கள் மீண்டும் ஒருதடவை இடம்பெறுவதுதவிர்க்கப்படும்.

உதாரணமாக 27.03.2016 இல் பிறந்த ஒருவரது தேசிய அடையாள அட்டை இலக்க மும் 27.03.1916 இல் பிறந்தவரது அடையாள அட்டை இலக்கமும் ஒன்றாகவே காணப்படும். இதனைத் தவிர்ப்பதற்கே 12 இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

அத்துடன் 2017 ஆம் ஆண்டு முதல் பிறக்கின்ற குழந்தைகளின் விபரங்கள் ஆட்ப திவுத் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட வுள்ளதுடன் அவர்கள் 15 வயதை அடையும்போது தேசிய அடையாள அட்டை வழங்கப்படும்.தற்போது நடைமுறையில் உள்ள தேசிய அடையாள அட்டை மீளப் பெறமாட்டாது. அடுத்த மாதம் முதல் புதிய இலத்திரனியல் அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு புதிய விண்ணப்பப்படிவங்கள் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் பிரதேச செயலா ளர்கள், கிராம அலுவலர்கள், பாடசாலை அதிபர்கள், மலையக தோட்ட முதலாளிகள் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் www.drp.gov.lk என்ற இணையத்தள முக வரியினூடாகவும் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்றும் ஆட்பதிவுத் திணைக்கள பதிவாளர் தெரிவித்துள்ளார். (3)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



# சூழலியல் மாற்றத்திற்கு ஏற்ப உடல் உஷ்ணத்தை தணிக்கும் மூலிகை உணவுகளும் உப உணவுகளும்

சூழலியல் மாறுபாட்டால் பருவகாலத்தின் தட்ப, வெப்பநிலைமைகளில் எவ்வாறான உணவு முறைகள், பழக்கவழக்கங்களை மேற்கொள்ள வேண்டுமென்பதை சித்தமருத்துவம் நோயின்றி வாழ்வதற்குரிய வாழ்வியல் முறையில் தெளிவாக எடுத்தியம்பியுள்ளமை குறிப்பிடப்படவேண்டிய விடயமாகும். தற்போது பின்பனிக் காலமாகிய பங்குனி மாதத்தில் வெப்பத்தின் தாக்கம் பூமியில் அதிக மடைந்து காணப்படுகின்றது. இனிவரப் போகும் சித்திரை மாதமாகிய இளவேனிற் காலத்திலும் வெப்பத்தின் தாக்கம் அதிகமாகவே இருக்கப் போகிறது.

இச் சூழலியல் மாற்றத்தால் பற்பல தோல்வியாதிகள்,பித்தம் சம்பந்தமான நோய்கள் மேலும் அதிகரிப்பதற்குரிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.எனவே நாம் இக்காலத்தில் ஏற்படும் நோய் நிலைமைகளிலிருந்து விடுபட நாமே எமது உணவுமுறைகளை, பழக்க வழக்கங்களை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்.

முக்கியமாக,

இளநீர்,பதநீர்,கற்றாழை யூஸ், கரும்புச்சாறு,நெல்லிக்கனி, எலுமிச்சம்பழச்சாறு/நாரத்தம்பழச் சாறு, கரட்சாறு, வெள்ளரிப்பிஞ்சு, தர்ப்பூசணி, நன்னாரி வேர்/வெட்டிவேர், அறுகம்புல்சாறு,சீரகநீர்/சீரகத்தூள், இலுப்பம்பூ, வேம்பம்பூ, வில்வம்பூ, பழைய சாதமும் மோரும், கீரைவகைகள் (அறக்கீரை, சீதேவியார் செங்கழுநீர்), மூக்கரட்டைக் கீரை, ஆரைக்கீரை, மிளகு தக்காளிக்கீரை, வெந்தயக்கீரை, மல்லிக்கீரை போன்றவை), நெற்பொறி அவித்த நீர்,வெந்தயம் ஊறிய நீர்,விலிம்பிலிக்காய், தமரத்தக்காய், தாமரைக்கிழங்கு, செவ்வரத்தம்பூ, வில்வம்பழம், விளாம்பழம் போன்ற உணவுக்கூறுகள் முக்கிய இடம் வகிக்கின்றன.

தற்காலத்தில் நாம் வாழும் சூழலில் அதிக உஷ்ணம் வெளிப்படுகின்றது. இவ்வாறான உஷ்ண காலங்களில் எமது தாகம்,வெப்பம் என்பவற்றை தணிக்கும் பழங்கள்,காய்கள்,கீரைவகைகள் என்பன பருவகாலத்திற்கு ஏற்ப இயற்கையிலேயே எமது சூழலில் பரம்



பிக் காணப்படுகிறது.

### கற்றாழை யூஸ்

கற்றாழைச் சோறு உடலிற்கு குளிர்ச்சியை மட்டுமல்லாது மலத்தை இளக்கி வெளியேற்றக் கூடியது. தோலை மிருதுவாக வைத்திருக்கக் கூடிய மூலிகையுமாகும்.

செய்முறை-கற்றாழை gel (சோறு) 700 கிராம்(5சோற்றுக் கற்றாழை மடலிலிருந்து-700gm gel இனை பெறமுடியும்)

தயிர்-1லீற்றர்

தேசிப்பழச்சாறு 60மில்லி (2பழம்)

சீனி-500கிராம்

உப்பு-சிறிதளவு

கற்றாழை மடலையும் கரைமுட்களையும் சீவி அகற்றிய சோற்றை சிறு,சிறு துண்டுகளாக நறுக்கி 7 தடவை நீரில் நன்றாக கழுவவும். (கைப்புத்தன்மையும் நீங்கும்)

இவ்வாறு எடுத்த 700கிராம் கற்றாழைச்சோற்றையும் 1லீற்றர் தயிரையும் வடித்த எலுமிச்சம்பழரசத்தையும் சீனியையும் உப்பையும் ஒரு பாத்திரத்தில் சேர்த்து கலக்கி, மிக்ஸியில் அடித்து 60 மில்லி Cup களில் ஊற்றி குடிக்கவும்.1/2 கப்பிலிருந்து 1 Cup வரை பயன்படுத்தலாம்.

வெள்ளரிப் பிஞ்சுகளை தினமும் சாப்பிடலாம்.

வெள்ளரிப்பிஞ்சுகளை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி தயிர்ப்பச்



சடியில் சேர்த்தோ,மோரில் போட்டோ அருந்தலாம்.

வெள்ளரிக்காயை மிக்சியில் அடித்து மென்பானமாக அருந்திவர இரத்தத்திலுள்ள உஷ்ணத்தை குளிர்மையாக்கும்.மலச்சிக்கலை நீக்கும்.இதில் 96.3% நீர்ச்சத்து உள்ளதால் வயிற்றெரிச்சலையும் உடனடியாக குணமாக்கும்.

வெள்ளரிக்காயை அறுத்து அதைத் தினமும் முகத்தில் பூசி வந்தால் முகத்தோலின் வரட்சி நீங்கும்.

வெள்ளரிப்பழ சர்பத், வெள்ளரிப்பழச்சாறு,தேவையான அளவு சீனி/சர்க்கரை,எலுமிச்சம்பழச்சாறு வெள்ளரிப்பழங்களை தோல்சீவி சுத்தமான பாத்திரத்தில் போட்டு கைகளை நன்குகழுவி கைகளால் பிசைந்து சாற்றை வடித்து விதைகளை நீக்கி அந்தளவு சர்க்கரை சேர்த்துகாய்ச்சி அடுப்பேற்றிபாகுபதம் வந்ததும் இறக்கி ஆறவிட்டு சுத்தமான போத்தல் ஒன்றில் அடைக்கவும். பின்னர் இதன் தேவையேற்படும் போது 3தேக்கரண்டிக்கு 200மில்லி நீர் ஊற்றி கலந்து குடிக்க உடல் உஷ்ணத்தை தணித்து பித்த நோய்களையும் நீக்கும்.

### தர்ப்பூசணி

இதன்பழம் இனிப்பாக இருக்கும்.உடலிற்கு குளிர்ச்சியைத் தரும். வெப்பகாலத்திற்கு உகந்த ஆரோக்கிய பழமும் பானமுமாகும்.

காலையில் இப்பழம் சாப்பிடுவது சிறந்தது.



தர்ப்பூசணிச்சாறு 30 மில்லி, ஒரு தேக்கரண்டி தேன்,2 தேக்கரண்டி எலுமிச்சம்பழச்சாறு ஆகியவற்றை கலக்கி தினமும் அருந்தி வர சொறி, சிரங்கு போன்ற தோல் நோய்களையும் நீக்கி உடலிற்கு குளிர்ச்சியையும் கொடுக்கும்.இதில் 95.2கி/100கிராம் பழத்தில் நீர்ச்சத்து (ஈரலிப்பு) உண்டு.

இதேபோல் வில்வம்பழம், விளாம்பழம் போன்றவற்றை சர்க்கரை சேர்த்துச் சாப்பிடலாம். இதே போல் எலுமிச்சம்பழரசம், நாரத்தைரசம்,பதனீர்,பழைய சோற்று நீர், இளநீர்,மோர் ஆகியன சிறந்தவையுமாகும்.

நமது மூதாதையர் பசும்பாலைக் கூட தயிராகவும் மோராகவும் மாற்றம் செய்து பயன்படுத்தி இருக்கிறார்கள். தயிர்,மோர் ஆகியன உடலுக்கு குளிர்ச்சியைத் தரும். தயிர், மோரில் நீர்த்தன்மைதவிர இவற்றிலுள்ள புரதங்கள் இலகுவில் சமிக்கத்தக்கவை.இதிலுள்ள இலக்ரிக் கமிலம் உணவுக்கால்வாயில் நோய் விளைவிக்கும் பக்றீரியாக்களை பெருகவிடாமல் தடுக்கவும் கூடியது.

### செவ்வரத்தம்பூ சர்பத்

செவ்வரத்தம்பூக்களை வெந்நீரில் ஊறவிட்டு சாயமிறக்கி சீனியையும் (அளவாக) சேர்த்துக் காய்ச்சி சூடு ஆறியதும் எலுமிச்சம் பழச்சாறு பிழிந்து ஊற்றி கலந்து சர்பத்தாக பயன்படுத்த உடலெரிவு, எரிச்சல்,சிறுநீர்கடுப்பு ஆகியன நீங்கும்.

இதன் பூக்களை பச்சடி,சம்பல் செய்தும் பயன்படுத்தலாம்.உடல் உஷ்ணத்தை தணிக்க 60 மில்லி குளிர்ந்த நீரில் 4கிராம் சீரகத்தை போட்டு 6மணிநேரம் ஊறவிட்டு வடித்து தினமும் காலையில் அருந்தவும்.இதேபோல் வில்வமிலைகளை அல்லது கருந்துளசி இலைகளையும் குளிர்ந்த நீர் ஊறல் குடிநீராக தினமும் அருந்திவர உடல் உஷ்ணத்தை தணிக்கும்.

### விலிம்பிலிப்பழம்/ தமரத்தம்பழம்



இவையும் உஷ்ணத்தை தணித்து குளிர்ச்சியை கொடுக்கக்கூடியவை. நன்றாக பழுத்த விலிம்பிலிப்பழங்கள் அல்லது தமரத்தம்பழங்களின் சாறு ஒரு பங்கு,அ்தேயளவு நீரும் கலந்து சீனி 3பங்கு சேர்த்து சிறுதீயிட்டு எரித்து மணப்பாகுபோல் காய்ச்சி ஒரு தேக்கரண்டிற்கு 100மில்லிநீர் கலந்து அருந்தி வரலாம்.

### தாமரைக்கிழங்கு

சதைப்பிடிப்பான உடன் தாமரைக்கிழங்குகளை சேகரித்து கழுவி சிறுசிறு துண்டுகளாக நறுக்கி நிழலில் உலர்த்தி பொடித்துவைத்துக் கொண்டு இதில் 4-8 கிராம் அளவு எடுத்து 200மில்லி வெந்நீரில் கரைத்து கஞ்சி தயாரித்து குடிக்க உடலிற்கு பலத்தையும் குளிர்ச்சியையும் கொடுக்கும்.

அல்லது தாமரைக்கிழங்குகளை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி நெய்யில் பொரித்து சாப்பிட்டு வந்தாலும் உடலிர்கு குளிர்ச்சியைக் கொடு




க்கும்.

### வெந்தயமும் வெந்தயக் கீரையும்

வெந்தயக்கீரையை சமைத்துண்ண உடலிலுள்ள சொறி, சிரங்கு குணமாகி உடலிற்கு குளிர்ச்சியைக் கொடுக்கும்.

வெந்தயத்தை நீரில் போட்டு ஊறவைத்து நீரை வடித்துக் குடித்தாலும் உடல் உஷ்ணம் தணியும். (8கிராம் வெந்தயத்தில் 200மில்லி குளிர்ந்த நீர்)

இலும்பம் பூக்கள் கிடைக்கும் போது அல்லிதட்டி நிழலில் உலர்த்தி சர்க்கரை சேர்த்து துவைத்துச் சாப்பிட்டாலும் உடலிற்கு குளிர்ச்சி



யைக் கொடுக்கும்.

ஆவாரம் பூக்களையும் பச்சைப்பயறு இரண்டையும் சேர்த்து அரைத்து உடலில் பூசி குளித்து வந்தாலும் தோல் நோய்களை தடுக்கும்.

இதன் இலைகளிற்கு குளிர்ச்சியை உண்டுபண்ணும் தன்மையிருப்பதால் புராதன மக்கள் வெயிலில் வெகுதூரம் நடப்பவர்கள் இவ்விலைகளை தலையின் மீது பரப்பி அதன் மீது தலைப்பாகை யிட்டு நடக்க வெப்பம் தாக்காது.

ஆவாரம்பூக்களை சுத்தம் செய்து கழுவி துவரம்பருப்புடன் சேர்த்து சமைத்து சாப்பிட்டு வந்தாலும் உடல் குளிர்ச்சியடையும்.

வெப்பகாலத்தில் போதியளவு நீரை அடிக்கடி அருந்த வேண்டும். நீரை அருந்தும் போது சிறு நன்னாரி வேர்களையோ,வெட்டி வேர்களையோ நன்கு கழுவி சிறு சிறுதுண்டுகளாக நறுக்கி குளிர்ந்த நீரில் போட்டு ஊறவிட்டு அருந்திவர மேலும் உடலிற்கு குளிர்ச்சியைக் கொடுக்கும்.

கொடிப்பசளி, குத்துப்பசளி, மூக்கரட்டை போன்ற கீரை வகைகளில் நீர்ச்சத்தும் அதிகமாக காணப்படுவதால் தினமும் ஏதாவது ஒரு கீரையை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

காலையில் கஞ்சிவகைகள் அருந்துவது சிறந்ததாகும். கஞ்சி வகைகளுள் ஏதாவது சாறுகள் சாத்தாவாரி இலைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு போன்றன கலந்து இலைக்கஞ்சியாகவே காலை உணவை எடுக்கலாம்.

முக்கியமாக கரட்சாறு, அறுகம்புல்சாறு என்பன 15-30 மில்லி அளவு வாரத்தில் 4நாட்கள் அருந்தலாம்.



மேற்கூறிய பானங்கள்,உப உணவுகள், உணவுக்கூறுகள், கஞ்சி வகைகள் அனைத்தும் எமது பிரதேசத்தில் கிடைக்கக் கூடியதும் பருவகாலத்திற்கு உகந்ததும் இலகுவில் தயாரிக்கக் கூடியவை யுமேயாகும்.எனவே சூழலியல் மாற்றத்திற்கு ஏற்ப இயற்கையுடன் இணைந்த உணவு முறைகள்,உடலால் இலகுவில் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் பக்க விளைவுகள் அற்றவையுமாகும்.

தோல் நோய்களை தடுக்க குளியல் பொடியாக, பச்சைப் பயறு, வெட்டிவேர்,சந்தனக்கட்டை, ஆவாரம்பூக்கள், எலுமிச்சம்பழத்தோல் (உலர்ந்தது) போன்றவற்றை உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக்



கொண்டு சோப்பிற்கு பதிலாக இளஞ்சூட்டு நீரில் பொடியை குழைத்து பூசி 20 நிமிடங்கள் ஊறவிட்டு குளிக்கலாம்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# அமெரிக்காவின் அன்பளிப்புக்கள் எங்களுக்குத் தேவையே இல்லை

## பிடல் காஸ்ட்ரோ காட்டம்

(ஹவானா)

**தேன் தடவிய பேச்சால் கியூபா மக்களை திசை திருப்ப முயலும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் கருத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ அமெரிக்காவின் அன்பளிப்புக்கள் எவையும் எங்களுக்குத் தேவையே இல்லை எனவும் கூறியுள்ளார்.**



அமெரிக்காவும், அதன் அயல் நாடான கியூபாவும் அரை நூற்றாண்டுக்கும் மேலாக பரம எதிரிகளாக இருந்தன. 1959 ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஆதரவுடன் அங்கு நடைபெற்றுவந்த ஆட்சியை பிடல் காஸ்ட்ரோ தலைமையி லான கம்யூனிஸ்ட் புரட்சிப்படை தூக்கியெறிந்த பின்னர் இருநாடு களுக்கும் இடையில் தீராப்பகை நிலவி வந்தது.

இந்நிலையில், கியூபாவுடன் நட்பு பாராட்டுவது என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா முடிவு செய்து அதற்கான முயற்சிகளையும் செய்தார். 54 ஆண்டுகள் கழித்து அமெரிக்காவில் கியூபா நாட்டு துாதரகம் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் திறக்கப்பட்டது. அதேபோன்று கியூபாவில் அமெரிக்க துாதரகம் திறக்கப்பட்டது. இதை தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கியூபாவுக்கு செல்வார் என்று பல மாதங்களாக கூறப்பட்டது.

இந்நிலையில், தனது மனைவி மற்றும் இருமகள்களுடன் ஒபாமா கடந்த 20 ஆம் திகதி கியூபா வந்தடைந்தார். கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவின் தம்பியான தற்போதைய ஜனாதிபதி ரவுல் காஸ்ட்ரோவை, ஒபாமா சந்தித்தார். இந்த சந்திப்பின்போது இருநாட்டு நல்லுறவு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

உடல்நலம் குன்றிய நிலையில் சக்கர நாற்காலியின் துணையின்றி நடமாட முடியாத நிலையில் இருக்கும் கியூபா கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான பிடல் காஸ்ட்ரோவை ஒபாமா சந்தித்துப் பேசுவார் என இதற்கு முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

அந்த தகவலை அமெரிக்க வெள்ளை மாளிகை அதிகாரிகள் மறுத்துள்ளனர். இது தொடர்பாக கருத்து கூறிய ஒபாமாவின் வெளியுறவுக் கொள்கை ஆலோசகர் பென் ரோட்ஸ், 'இந்த பயணத்தின்போது பிடல் காஸ்ட்ரோவை சந்திக்கும் திட்டம் எதுவும் எங்களுக்கு இல்லை. அதுபோன்றதொரு சந்திப்புக்கு நாங்களும் கேட்டுக் கொள்ளவில்லை, கியூபா அரசுதரப்பிலும் எங்களுக்கு அப்படியொரு கோரிக்கை முன்வைக்கப்படவில்லை என்று தெரிவித்திருந்தார்.

பேச்சுவார்த்தைக்கு பின்னர், ஒபாமாவும் ரவுல் காஸ்ட்ரோவும் கூட்டாக நிருபர்களுக்கு பேட்டியளித்தனர். அப்போது, அமெரிக்காவைப் பற்றி பெருமை பொங்க பேசிய ஒபாமா, அமெரிக்காவில் கருத்துரிமை, பேச்சுரிமை மற்றும் மத வழிபாட்டு உரிமைகள் சிறப்பாக நிலைநாட்டப்படுவதாக குறிப்பிட்டார். இது அமெரிக்காவுக்கு உரிய உயர்பண்புகள் அல்ல, உலகம் முழுமைக்குமான உயரிய பண்புகளாகும் என்றும் அவர் கூறினார்.

கியூபாவில் ஆளும் கம்யூனிஸ்ட கட்சியின் ஆட்சியில் இந்த உரிமைகள் அனைத்தும் மக்களுக்கு மறுக்கப்பட்டு வருவதாக அமெரிக்கா நீண்டகாலமாகவே குற்றம்சாட்டி வருகிறது. கியூபாவில் பத்திரிகை சுதந்திரமும் பெரிய அளவில் இல்லை என்றநிலையில், ஒபாமாவும் ரவுல் காஸ்ட்ரோவும் கூட்டாக நிருபர்களுக்கு பேட்டியளித்தபோது வெளிநாட்டு ஊடகங்களை சேர்ந்த நிருபர்கள் கேட்ட சில கேள்விகளுக்கு பதில் அளிக்கும்போது ரவுல் காஸ்ட்ரோ அவர்கள்மீது எரிந்து விழுந்தார்.

குறிப்பாக, கியூபா நாட்டு சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள அரசயல்கைதிகள்தொடர்பான கேள்வியின்போது ஆவேசம் அடைந்த அவர், 'இப்போதே சொல்லுங்கள்? எத்தனைபேர் எங்கள் நாட்டு சிறைகளில் அரசியல் கைதிகளாக இருக்கிறாரகள்?, அவர்களின் பெயர்களை சொல்லுங்கள்? இன்றிரவுக்குள் விடுதலை செய்கிறேன் என அவர் கோபமாக கூறினார்.

பின்னர், கியூபாவில் மனித உரிமைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதாக பேசப்படுகிறதே? என்ற மற்றொரு நிருபரின் கேள்விக்கு பதிலளித்த காஸ்ட்ரோ, உலகில் உள்ள எத்தனை நாடுகள் 61 வகை மனித உரிமைகளையும் முழுமையாக கடைப்பிடிக்கின்றன என்று உங்களுக்கு தெரியுமா?. உலகில் உள்ள எந்த நாடும் இந்த 61 வகை மனித உரிமைகளையும் முழுமையாக கடைப்பிடிக்கவில்லை என்பது எனக்கு நன்றாக தெரியும் என கூறினார். அப்போது ஒபாமாவின முகம் இறுகிய நிலையில் காணப் பட்டது.

வழக்கமாக இதுபோன்ற கூட்டுப் பேட்டிக்கு பின்னர், இருநாடுகளை சேர்ந்த உலகத் தலைவர்கள் தங்களது கரங்களை உயர்த்தி, ஊடகங்களுக்கு 'போஸ்' கொடுப்பது வாடிக்கையான சம்பிரதாயம் ஆக உள்ளது. நேற்று முன்தினம் பேட்டி முடிந்ததும், இதேவகையில் ஒபாமாவின் கரங்களைப்பற்றி, மேலே உயர்த்தி ஊடகங்களுக்கு 'போஸ்' கொடுக்க நினைத்த ரவுல் காஸ் டரோ, தனது வலது கரத்தால் ஒபாமாவின் இடது கரத்தைப்பற்ற முயன்றார்.

ஆனால், அப்படியொரு 'போஸ்' கொடுப்பதை தவிர்த்த ஒபாமா, தனது கரத்தை காஸ்ட்ரோவின் பிடியில் இருந்து விலக்கிக் கொள்ள முயன்றார். இருப்பினும், விடாப்பிடியாக ஒபாமாவின் இடது மணிக்கட்டை பிடித்து, அவரது கையை மேலே தூக்க காஸ்ட்ரோ மல்லுக்கட்டினார். ஆனால், அந்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது. அரைகுறையாக கையை தூக்கிய ஒபாமா, நிருபர்களை பார்த்து ஒரு அசட்டு சிரிப்பை உதிர்த்துவிட்டு, அங்கிருநது புறப்பட்டுச் சென்றார். இதனால் ஒபாமாவின் கியூபா பயணம் தோல்வயில் முடிந்ததாகவே பார்க்கப்பட்டது.

இந்நிலையில், கியூபாவில் மகளுக்கு உரிய சுதந்திரம் இல்லை என்னும் பொருள்பட தலைநகர் ஹவானாவில் ஒபாமா வெளியிட்ட கருத்துக்கு அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ(89) கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, பிரபல பத்திரிகை ஒன்றில் அவர் எழுதியுள்ள கட்டுரையில் கூறியுள்ளதாவது.

ஒபாமாவின் தேன் தடவிய வார்த்தைகளை கியூபா மக்கள் பொருட்படுத்த வேண்டாம். அவரது பேச்சை கேட்டவுடன் நம் நாட்டு மக்கள் அனைவருக்கும் மாரடைப்பு ஏற்படும் அபாயம் தோன்றியதாகவே அனைவரும் கருதுகின்றனர். நமது நாட்டு மக்களின் அறிவாற்றல் மற்றும் உழைப்பால் நமக்கு தேவையான உணவு உள்ளிட்ட அனைத்து தேவைகளிலும் நாம் தன்னிறைவை அடைந்துள்ளோம். அவர்கள் (அமெரிக்கா) சாம் ராஜ்ஜியத்தின் அரசு தரும் எந்த அன்பளிப்பும் எங்களுக்கு தேவை யில்லை.

பிறநாடுகளின் தயவு இல்லாமல் சுகாதாரம், கல்வி உள்ளிட்ட அம்சங்களில் கியூபா அடைந்துள்ள வளர்ச்சியைப் பற்றி அறியாமல், கியூபா நாட்டு அரசியலைப்பற்றி வியாக்கியானம் பேசும் ஒபாமா, உலக நாடுகளின் தடை நடைமுறையில் இருந்த போதே தென்னாபிரிக்காவுக்கு அமெரிக்கா அணு ஆயுதங்களைவழங்கியபழையகதையைப் பற்றி முதலில் தெளிவாக விளக்க வேண்டும் என பிடல் காஸ்ட்ரோ மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## வெள்ளை மாளிகையின் பார்வையாளர் மையத்தில் திடீர் சூடு ; ஒருவர் காயம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் வெள்ளை மாளிகையின் பார்வையாளர் மையத்தில் மர்ம நபர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டதை அடுத்து பாதுகாப்பை அதிகப்படுத்தியுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதியின் அலுவலகமான வெள்ளை மாளிகை தலைநகர் வோஷிங்டனில் அமைந்துள்ளது.

இந்த வெள்ளை மாளிகை வளாகத்தினுள் அமைந்துள்ள பார்வையாளர் மையத்தில் மர்ம நபர் ஒருவர் திடீரென்று துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்டதாக தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து துரிதமாக செயற்பட்ட அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரிகள் அந்த மர்ம நபரை கைது செய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இந்த துப்பாக்கிச்சூட்டில் அங்கிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு காயமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. இருப்பினும் உயிருக்கு ஆபத்தான நிலையில் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



வெள்ளை மாளிகையின் பார்வையாளர் மையத்தில் நடைபெற்ற இந்த சம்பவம் குறித்து பிடிபட்ட நபரிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இது பொதுமக்கள் பீதி அடையத்தக்க சம்பவம் இல்லை எனவும் இதனால் பொதுமக்களுக்கு எந்தவொரு அச்சுறுத்தலும் இல்லை எனவும் விசாரணை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூடு நடைபெற்ற பகுதியின் சில மீற்றர்கள் தொலைவில்தான் ஜனாதிபதி ஒபாமா ஈஸ்டர் விழா சிறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருந்தார்.

மேலும் அந்த விழா நடைபெற்ற பகுதியில் சுமார் 35 ஆயிரம் பொது மக்கள் குழுமியிருந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




## பிரஸல்ஸ் தாக்குதல் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர் விடுவிப்பு

பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸில் கடந்த வாரம் நடந்த குண்டுத் தாக்குதல் தொடர்பாக பயங்கரவாதக் குற்றம் சாட்டப்பட்ட பைசல் சி என்ற சந்தேக நபர் போதுமான ஆதாரங்கள் இல்லாததால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பைசல் சிக்கு எதிரான ஆதாரங்கள் போதுமானதாக இல்லையென அரசுத் தரப்புத் தெரிவித்திருக்கிறது.

ஜாவெண்டம் விமான நிலையத்தில், இரு தற்கொலைப்படைதாரிகளுடன் வந்த மூன்றாவது நபர் இவர் எனக் கருதப்பட்டது.

தற்போது மேலும் நீண்ட சிசிடிவி காட்சிகளை வெளியிட்டிருக்கும் பெல்ஜியம் பொலிஸ் துறை அந்த நபரைக் கண்டுபிடிக்க உதவும்படி கோரியுள்ளது.

பிரஸல்ஸ் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணையில் இது பெரிய பின்னடைவாகக் கருதப்படுகிறது.

இதற்கிடையில், அந்தத் தாக்குதலில் காயமடைந்தவர்களில் மேலும் நால்வர் பலியாகியுள்ளதாக பெல்ஜியத்தின் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனால் பலியானவர்களின் எண்ணிக்கை 35 ஆக உயர்வடைந்துள்ளது. (இ-5)



"சமத்துவத்துக்கான உறுதிமொழி.வலுவான பெண்கள்.நிலையான நாளையதினம்"எனும் தொனிப்பொருளில் மகளிர்தின நிகழ்வு நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிலைய மண்டபத்தில் நேற்றையதினம் நடைபெற்றது. யாழ் சர்வோதய மாவட்டநிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெண் தொழில் முயற்சியாளர்கள் 15 பேரும்.ஆதரவற்றவர்களை வளர்க்கும் தாய்மார்கள் 15 பேரும்.சுற்றாடலை பாதுகாக்கும் கைப்பை தயாரித்த 5 பேரும்.பெண் செயற்பாட்டாளர்கள் 2 பேரும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட்குரே.சிறப்பு விருந்தினர்களாக யாழ். இந்திய துணைத்தூதுவர் ஏ.நடராஜன்.யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர்(காணி) எஸ்.முரளிதரன்.சர்வோதய அமைப்பின் மகளிர் இயக்கத்தின் தலைவி விமலாரணதுங்க. யாழ். மாவட்ட பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் என்.உதயனி உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)

# சிரியாவிற்கு நவீன ரோபோக்களை அனுப்பும் ரஷ்ய ஜனாதிபதி புடின்

(டமாஸ்கஸ்)

சிரியாவில் உள்ள பழங்காலப் பகுதியான பல்மைராவை சில மாதங்களுக்கு முன்னர் ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். இதனை தொடர்ந்து ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக போரிட்டு வந்த சிரிய அரசாங்கம் பல்மைராவை மீண்டும் தங்களது கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்தது.

ஐ.எஸ். தீவிரவாதிகள் இந்த போரில் தோல்வியை தழுவ ரஷ்ய இராணுவமும் பெரிதும் துணை நின்றுள்ளது. எனினும். ஐ.எஸ். தீவிரவாதிகள் பல்மைராவில் உள்ள பட இடங்களில் ஆபத்தான கண்ணி வெடிகுண்டுகளை புதைத்துள்ளனர்.

இந்த கண்ணி வெடிகுண்டுகளை கண்டுபிடித்து அப்புறப்படுத்தவே தற்போது ரோபோக்களை அனுப்ப ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தரவிட்டுள்ளார். நவீன தொழில்நுட்பங்கள் கொண்ட ரோபோக்கள் மட்டுமின்றி உயர் மின பொறியாளர்களும் விரைவில் சிரியாவுக்கு அனுப்பப்பட உள்ளனர்.

இந்த தகவலை ரஷ்ய இராணுவத்தின் உயர் அதிகாரிகளில் ஒருவரான வால்ரி ஜெரசிமோவ் உறுதிப்படுத்தியுள்ளார். (இ-5)

# சட்டவிரோதமான முறையில் சாராயம் விற்ற பெண்ணிற்கு 50ஆயிரம் ரூபாய் அபராதம்

சட்டவிரோதமான முறையில் அரச சாராயத்தை விற்பனை செய்த பெண் ஒருவருக்கு 50ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் தீர்ப்பளித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சிவில் உடையில் சென்ற பொலிஸாருக்கு 1/2 போத்தல் சாராயத்தினை விற்பனை செய்ய முயன்ற போது அப்பெண் கைது செய்யப்பட்டார்.

அவரை பருத்தித்துறை பொலிஸார் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நீதிமன்றில் முற்படுத்திய போது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு 50ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார் நீதிபதி. (இ-60)

## 80 பேருடன் கெய்ரோ நோக்கி சென்ற

# பயணிகள் விமானம் கடத்தல்

(கெய்ரோ)

**80 பேருடன் அலெக்சாண்ட்ரியாவில் இருந்து கெய்ரோ சென்ற பயணிகள் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் விமானம் கடத்தப்பட்டது என்ற தகவல் வெளியாகியுள்ளது.**




கடத்தப்பட்ட எகிப்து ஏர் விமானம் சைபிரஸ் நாட்டிற்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. விமானம் கடத்தப்பட்டது உலக நாடுகள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. 80 பயணிகளுடன் விமானம் கடத்தப்பட்டுள்ளது. விமானத்தை ஒருவர் கடத்தியதாகவும். விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை விமானத்தை தீவிரவாதிகள் கடத்தி இருக்கலாம் என்ற செய்திகளும் வெளியாகி உள்ளன.விமானம் கடத்தப்பட்டதற்கான காரணம் தெரியவரவில்லை. (இ-5)

# ரூ.8.5 கோடி மதிப்பிலான தங்கக் கட்டிகள் பறிமுதல்

## தேர்தல் பறக்கும் படையினர் அதிரடி

சட்டப்பேரவை தேர்தலையொட்டி வாக்காளர்களுக்கு பணம் வழங்குவதை தடுக்கும் நோக்கில் பறக்கும் படை அதிகாரிகள் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர். உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்படும் பணம் உள்ளிட்டவற்றை பறிமுதலும் செய்து வருகின்றனர். இந்நிலையில் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் நாமக்கல் - சேலம் சாலையில் நேற்றுக் காலை நடத்திய அதிரடி சோதனையில் ரூ.8.5 கோடி மதிப்பிலான 32 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட தங்கக் கட்டிகள் வணிக நோக்கத்திற்காக திருச்சி, தஞ்சை, திருவாரூர் ஆகிய பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுவதாக கூறப்பட்டது.எனினும் ஆர்.டிஓ..கண்ணன் தலைமையிலான அதிகாரிகள் இது குறித்து தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர். இது தவிர தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட வாகனச் சோதனையில் ஒரே நாளில் ரூ.68 இலட்சத்திற்கு அதிகமாக ரொக்கப் பணம் பறிமுதல் செய்யப்புட்டுள்ளது. வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதை தடுப்பதற்காக தமிழகம் முழுவதும் பறக்கும் படையினர் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர்.

திருவாரூர் மாவட்டம் மன்னார் குடியில் இரு வேறு இடங்களில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு வழங்குவதற்காக கொண்டு செல்லப்பட்ட ரூ.48 இலட்சத்து 80 ஆயிரம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (இ-5)

# சிறப்புமிக்க சம்பள அறிவிப்பை வெளியிட்டது கலிபோர்னியா

அமெரிக்காவில் நாடு முழுவதும் வேலை செய்யும் உடலுழைப்பு சார்ந்த தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் சம்பளம் ஒருமணி நேரத்துக்கு ஏழரை டொலர்களாகவுள்ளது. இதன்படி ஒரு நாளில் எட்டு மணிநேரம் உழைத்தால் அதிகபட்சமாக ஒருவர் 60 டொலர்களை (இந்திய மதிப்புக்கு சுமார் 4 ஆயிரம் ரூபாய்) சம்பாதிக்க முடியும் என்ற நிலை கடந்த ஆறாண்டுகளாக நீடித்து வருகின்றது.

இந்நிலையில். இன்னும் ஆறாண்டுகள் கழித்து. எதிர்வரும் 2023 ஆம் ஆண்டுவாக்கில் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய குறைந்தபட்ச சம்பளம் குறித்து நிர்ணயம் செய்ய கலிபோர்னியா மாநில ஆளுநரின் ஏற்பாட்டின் பேரில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் தொழிற்சங்க தலைவர்களுக்கு இடையில் பலசுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

இதன் விளைவாக, கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள உடலுழைப்பு தொழிலாளர்களின் குறைந்த பட்ச புதிய சம்பளமாக ஒருமணி நேரத்துக்கு 15 டொலர்கள் நிர்ணயிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம். எதிர்வரும் 2023 ஆம் ஆண்டிலிருந்து இனி இங்குள்ள ஒவ்வொரு தொழிலாளியும் தனது எட்டுமணி நேர உழைப்புக்கு 90 டொலர்களை (இந்திய மதிப்புக்கு சுமார் ஆறாயிரம் ரூபாய்) சம்பளமாக பெற முடியும். (இ-5)

# கட்சிப் பதவி வேண்டாம்!

## கோத்தபாய நிராகரிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பதவி ஒன்றை சலுகையாக வழங்கினால் அதனைத் தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு முக்கிய பதவி ஒன்று வழங்கப்பட வேண்டும் என்று கட்சியின் ஒரு பகுதியினர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பதவியைப் பெறும் நோக்கம் தனக்கு இல்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிராந்தியக் கூட்டங்களில் மகிந்த ராஜபக்ஷவுக்கு மக்கள் ஆதரவை வெளிப்படுத்தியது குறித்து எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அவர் மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 29.03.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 145.56 | 149.54 |
| பவுண்ட் | பிரிட்டன் | 206.47 | 213.79 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 161.87 | 168.32 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 148.38 | 154.55 |
| டொலர் | கனடா | 109.60 | 114.17 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 108.92 | 114.03 |
| டொலர் | சிங்கப்பூர் | 105.95 | 110.00 |
| ரூபா | இந்தியா | 2.1613 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6774 |
| குவைத் | டினார் | 476.1747 |
| ஓமான் | ரியால் | 373.7614 |
| கட்டார் | ரியால் | 39.5156 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3698 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1783 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல் வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 40 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 65 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 80 | 80 | 120 | 100 |
| தக்காளி | 40 | 40 | 25 | 60 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 60 | 40 |
| கோவா | 70 | 80 | 80 | 120 | 40 |
| கரட் | 100 | 80 | 80 | 120 | 80 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 | 50 |
| புடோல் | 50 | 50 | 30 | 80 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 65 | 80 | 50 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 65 | 80 | 80 |
| பாகற்காய் | 120 | 120 | 110 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 50 | 100 | 100 |
| பயற்றங்காய் | 70 | 100 | 30 | 60 | 60 |
| லீக்ஸ் | 130 | 100 | 90 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 100 | 60 | 120 | 70 |
| கறிமிளகாய் | 120 | 100 | 50 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 500 | 550 | 350 | 500 | 400 |
| போஞ்சி | 140 | 200 | 70 | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 40 | 80 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 40 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 200 | 200 | 110 | 320 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 30-40 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 140 | 200 | 110 | 120 | 160 |
| வெங்காயப்பூ | 160 | 150 | — | — | — |
| முள்ளங்கி | 50 | 80 | 25 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | — | 50 | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## உண்ணாவிரதம் இருந்து திலீபன் மரணம் 142

...கடைகள், ஹோட்டல்கள், வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டன. சினிமா காட்சிகள் நடைபெறவில்லை.

பொதுமக்கள் கறுப்புச் சின்னம் அணிந்து மௌன ஊர்வலம் நடத்தினர்.

திலீபன் மரணத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பதற்ற நிலை ஏற்பட்டது. 2 பேருந்துகள் தீ வைத்துக் கொழுத்தப்பட்டன.

தமிழர்களின் வீடுகளில் கறுப்புக் கொடிகள் ஏற்றப்பட்டன. யாழ்ப்பாணப் பகுதியின் பல்வேறு இடங்களில் இருந்தும் சைக்கிள்களிலும் நடந்தும் திலீபனுக்கு இறுதி மரியாதை செலுத்த மக்கள் விரைந்தார்கள்.

**மேலும் 2 பேர்**

திலீபன் உயிர் துறந்ததும் பாஸ்கர் (வயது 19), முரளி (வயது 23) ஆகிய விடுதலைப் புலிகள் சாகும் வரை உண்ணா விரதம் தொடங்கினார்கள்.

மரணத்தைக் கண்டு நாங்கள் அஞ்ச மாட்டோம். கொள்கைக்காக உயிர் கொடுப்போம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

**தூதர் துயரம்**

இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் தீட்சித் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் 26 ஆம் திகதி அன்று காலை பேச்சுவார்த்தை நடத்தினர்.

பேச்சு வார்த்தை தொடங்கிய சற்று நேரத்திற் கெல்லாம் திலீபன் மரணமடைந்தார்.

வெளியே வந்த தூதரிடம் இது பற்றி நிருபர்கள் தெரிவித்தனர்.

தீட்சித் மிகவும் துயரம் அடைந்தார். இந்தச் சிறிய வயதில் திலீபன் உண்ணா விரதம் இருந்து உயிர் திறந்தது எனக்கு வேதனை அளிக்கிறது. இதைத் தவிர்த்திருக்கலாம் என்று கூறினார்.

மேற்கொண்டு நிருபர்கள் கேட்டதற்கு இப்போது இதற்கு மேல் எதுவும் சொல்ல விரும்பவில்லை என்று தீட்சித் மறுத்து விட்டார்.

**வாழ்க்கைக்குறிப்பு**

உண்ணாவிரதம் இருந்து உயிர் தியாகம் செய்த விடுதலைப்புலி தளபதி திலீபனுக்கு வயது 23.

திலீபன் 29.11.1963 அன்று யாழ்ப்பாணம் மாவட்டம் ஊரெழு என்ற இடத்தில் பிறந்தார்.

இவருடைய தந்தை பெயர் ராசையா. இவர் பிறந்த 9 ஆவது மாதத்தில் தன் தாயைப் பறிகொடுத்தார். தந்தையின் அரவணைப்பில் வளர்ந்தார். இவருக்கு இளங்கோ, நம்பி, அசோகன் ஆகிய 3 அண்ணன்கள் உண்டு.

**இயக்கத்தில் சேர்ந்தார்**

1982 இல் திலீபன் கல்லூரிப் படிப்பை முடித்தார்.

83 இல் இலங்கைத் தமிழர் மீது சிங்களர் தாக்குதல் நடத்தியதைக் கண்டு மனம் பொறுக்காது மேற்கொண்டு படிப்பை நிறுத்தி விட்டு தமிழீழ விடு தலைப்புலிகள் (எல்.ரி.ரி.ஈ) இயக்கத்தில் சேர்ந்தார்.

இந்த இயக்கத்தில் சேர்ந்த போது சுழிபுரம், சங்கானை பகுதிகளில் விடுதலைப்புலிகள் அரசியல் பிரிவு பிரசாரப் பணியில் ஈடுபட்டார்.

அந்த சமயத்தில் சிங்கள பொலிஸார் கைது செய்து ஜீப்பில் அவரை அழைத்துச் சென்றனர்.

அப்போது தான் வைத்திருந்த சூட்கேசினால் பொலிஸாரைத் தாக்கிவிட்டுத் தப்பினார்.

சிங்கள ஆயுதப் படையினரின் தாக்குதலின் போது காயம் அடைந்த போதிலும் துணிச்சலாக எதிர் நின்று சமாளித்தவர்.

**அரசியல் பிரிவு**

1985 முதல் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் யாழ்ப்பாணப் பகுதிக்கு அரசியல் பிரிவுப் பொறுப்பாளராக இருந்து வந்தார்.

வல்லைவெளியில் ஏற்பட்ட மோதலின் போது அவரது வயிற்றில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்தது. இதற்கு சிகிச்சை பெற்ற திலீபன் தன் உடல் நிலையைப் பற்றிக் கவலைப் படாது உண்ணா விரதத்தைத் தொடங்கினார்.

இதற்கு அவரது தந்தையும் அண்ணன்களும் அவரது குடும்பத்தினரும் ஆதரவு தெரிவித்தனர். இதற்கு அடையாளமாக அவர்களும் அடையாள உண்ணா விரதத்தில் கலந்து கொண்டனர்.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத் தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உட்பட 17 விடுதலைப்புலிகள் சயனட் அருந்தி தற்கொலை செய்து கொண்டனர்.

இலங்கையில் தமிழ் மாநிலத்தின் முதல் மந்திரியாக யாரை நியமிப்பது என்பதில் ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கும் விடுதலைப் புலி தலைவர் பிரபாகரனுக்கும் மோதல் ஏற்பட்டதால் தமிழ்ப் பகுதிகளில் மீண்டும் பதற்ற நிலை பரவியது.

முதல் மந்திரியாக சி.வி.கே. சிவஞானத்தை (யாழ்ப்பாணம் மாநகர சபை கமிஷனர்) நியமிப்பதாக ஜெயவர்த்தன அறிவித்தார்.

சிவ ஞானத்தை ஏற்க மாட்டோம். என்.பத்மநாபனை நியமிக்க வேண்டும் என்று பிரபாகரன் கூறினார்.

**மோதல்கள்**

முதல் மந்திரி பற்றி உடன்பாடு ஏற்படாததால் தமிழ் மாநிலத்தின் இடைக்கால மந்திரிசபை எப்போது முதல் செயற்படும் என்ற சந்தேகம் உருவானது.


இதற்கிடையே சிங்களவர்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டன.



(தொடரும்)

# இலங்கை வாக்காளர்களுக்கு அமெரிக்கா மதிப்பளிக்கின்றது

## அடுல் கெசாப் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதியும் ஒகஸ்ட் 17ஆம் திகதியும் இலங்கை மக்கள் அளித்த வாக்குகளுக்கு அமெரிக்கா மதிப்பளிப்பதாக இலங்கைக்கான அமெரிகக தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார்.**

இலங்கை மக்களின் நல்லிணக்கம், அமைதி, ஒற்றுமை, சிறப்பான எதிர்காலம், ஜனநாயகம் என்பன இந்து- பசுபிக் பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வந்துள்ள அமெரிக்கா கடற்படை கப்பலை வரவேற்கும் நிகழ்வின் போது கெசாப் இந்தக்கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவின் பல முக்கிய அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் செய்வது இலங்கை மக்கள் நலன்கருதியே என்றும் கெசாப் மேலும் தெரிவித்தார். (இ-5)

# விமானத்தள விஸ்தரிப்புக்கு ஜப்பானிய வங்கி நிதியுதவி!

(கொழும்பு)

இலங்கையின் கட்டுநாயக்க விமானத்தள விஸ்தரிப்புக்காக ஜப்பானின் சர்வதேச ஒத்துழைப்பு வங்கி (ஜெய்கா) இலங்கையுடன் உடன்படிக்கை ஒன்றை செய்துகொண்டுள்ளது.

இதன்படி 56 பில்லியன் ரூபாய்களை அந்த வங்கி வழங்கவுள்ளது.

புதிய விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் கட்டுநாயக்க விமானத்தளத்தில், பயணிகளுக்கான புதிய இடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதன்கீழ் வருடம் ஒன்றுக்கு 15 மில்லியன் பயணிகளை இந்த விமான நிலையத்தின் ஊடாக கையாளக்கூடியதாக இருக்கும்.

தற்போது இந்த விமான நிலையத்தின் ஊடாக 8.5 மல்லியன் பயணிகளே வந்து செல்கின்றனர்.

இந்த திட்டத்தின் கீழ் 23 விமான தரிப்பிடங்களும் அமைக்கப்படவுள்ளன.

96 மேலதிக பரிசோதனை மையங்களும் ஏற்படுத்தப்படவுள்ளன

2020ஆம்ஆண்டில்இந்த பணிகள் முழுமை பெறவுள்ளன. (இ-5)

# நியாயம்

## யுத்தத்தில் இலங்கை அரசுக்கு ஆதரவளித்தமை குறித்து ஆஸியின் முன்னாள் பிரதமர் விளக்கம்



இலங்கையின் சிவில் யுத்தத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பில், இலங்கைக்கு ஆதரவான போக்கை வெளிப்படுத்தியமையை, அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் டொனி அபொட் நியாயப்படுத்தியுள்ளார்.

இலங்கைக்கெதிராக உலக வல்லரசு நாடுகள் பல ஒன்றாகக் கூடியபோது, அந்தக் கூட்டணியில் இணைவதிலிருந்து அவுஸ்திரேலியா தள்ளியிருந்ததோடு, இலங்கையோடு நெருங்கிச் செயற்பட்டிருந்தது.

அப்போது, அவுஸ்திரேலியாவின் பிரதமராக டொனி அபொட்டே செயற்பட்டிருந்தார்.

இந்நிலையில், அவுஸ்திரேலிய ஊடகமொன்றில் பத்தியொன்றைஎழுதியுள்ள டொனி அபொட்,

இலங்கையில் இடம்பெற்ற சிவில் யுத்தத்தில் எடுக்கப்பட்ட கடுமையான, ஆனால் அநேகமாகத் தவிர்க்க முடியாத நடவடிக்கைகளுக்கெதிரான மனித உரிமைகள் குழுக்களோடு இணையாமையை நியாயப்படுத்துவதாகத் தெரிவித்தார்.

அபொட்டின் காலத்தில், இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையில் காணப்பட்ட நெருக்கமான உறவில், படகுகளில் அவுஸ்திரேலியா நோக்கிச் செல்பவர்களைக் கட்டுப்படுத்துதல் முக்கியமானதாக அமைந்திருந்தது.

எனினும், அந்த நடவடிக்கைகள், சில சந்தர்ப்பங்களில் தோல்வியடைந்திருக்கலாம் என்பதை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

படகுகளைத் தடுத்து நிறுத்தும் செயற்பாடு, அதிகாரத்துக்கு அப்பாற்பட்டது எனச் சிலரும் அவுஸ்திரேலியாவுக்கும் இந்தோனேஷியாவுக்குமிடையிலான உறவைப் பாதித்தது எனச் சிலரும் தெரிவித்த போதிலும், அதை நியாயப்டுத்திய அபொட், “படகுகளை நிறுத்த வேண்டிய தேவை, அரசாங்கத்துக்கு இருந்தது. எங்களது தேசிய நலனும் ஒரு நாடாக எங்களது சுய மரியாதையும் அதை வேண்டி நின்றது” எனத் தெரிவித்தார். (இ-5)

# இலங்கைக்கு ஒரு பில்லியன் பெறுமதியான தரமற்ற மருத்துவப் பொருட்கள்-கோப்குழு

கடந்த ஐந்து வருடங்களில் ஒரு பில்லியன் ரூபாய்களுக்கும் மேற்பட்ட தரமற்ற மருத்துவப் பொருட்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

அரச நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்ற குழுவான கோப் இதனை கண்டறிந்துள்ளதாக அந்தக் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்நெந்தி தெரிவித்துள்ளார்.

குறித்த பொருட்கள் தரம் குறைந்த பொருட்கள் என்று இலங்கை மருந்தாக்கல் திணைக்களம் இறக்குமதி செய்யப்பட்ட பின்னரே தெரிந்துகொண்டமையானது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயமாகும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் இதில் தொடர்புடைய அதிகாரிகளை கோப் குழு அழைத்து விசாரணை செய்யும் என்றும் ஹந்துன்நெந்தி தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## யார் விட்டுக் கொடுப்பது?

ஒவ்வொரு பொருளும் வெவ்வேறான மூலகங்களைக் கொண்டவை. அவற்றை உருக்கவும் மாற்றவும் பதப்படுத்தவும் அவ்வவற்றின் தன்மைகளுக்கேற்ற வழி முறைகளைப் பின்பற்ற வேண்டும். இவை விஞ்ஞானம் கூறும் உண்மைகள்.

ஆகஓரே விதி அனைத்திற்கும் பொருந்தாது.

அதேபோல் மனிதர்கள் மனத்தளவில் பெருத்த வேறுபாடுகள் கொண்டவர்கள். எட்டாத எல்லையைக் கொண்ட மன விகாரங்களை உடையவர்கள்.

நம் சக்திக்கு உட்பட்ட அளவில் நம்மைச் சுற்றி இருப்பவர்களின் சுபாவங்களைப் புரிந்து கொண்டு அந்தப் போக்கில் அவர்களை விட்டுப் பிடிக்க வேண்டும்.

இப்படிச் செய்வதில் மூன்று வகையான நன்மைகள் இருக்கின்றன. மற்றவர்களை நீங்கள் மகிழ்ச்சியோடு வைத்திருக்க முடியும். நீங்கள் பாராட்டைப் பெறுவதோடு அவர்களின் இதயத்தில் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொள்ளவும் முடியும்.

இவ்வளவு சிறந்த நன்மைகள் இருக்கின்றன என்பதைத் தெரிந்து வைத்துக் கொண்ட பிறகு ஒருவரால் வெற்றிகரமாக செயற்பட முடியவில்லை என்றால் அதற்கு இரண்டு காரணங்கள் இருக்க முடியும்.

முதலாவது பொதுவான சில நியதிகளை நிர்ணயித்துக் கொண்டு அந்த முறையிலேயே அனைவரையும் அணுகுவது.

இரண்டாவது மற்றவர்களின் மனநிலைக்கு ஏற்ப அணுகுமுறைகளை மாற்றிக் கொள்ள சிலரது தன்மானம் இடம் கொடுக்காது.

பத்து வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்கள் இல்லற வாழ்வை நடத்திய ஒருவன் (அல்லது ஒருத்தி)தன் மனைவியுடன் (அல்லது கணவனுடன்) ஒத்துப் போகவில்லை என்றாலோ அதைவிட அதிக வருடங்கள் தொடர்புள்ள ஒரு வீட்டுக்காரர்-குடித்தனக்காரர் உறவோ தொழிலாளி, முதலாளி இடையிலான உறவோ நண்பர்களிடையிலான உறவோ சுமுகமாக இல்லை என்றால் ஒருவரையொருவர் புரிந்து கொண்ட பிறகும் சரி செய்து கொண்டு போக அவர்கள் மனம் இடம் தரவில்லை என்றுதானே பொருள்?

அவர்கள் சுபாவம் தெரிந்ததுதான் என்று நம் மனத்தைச் சரி செய்து கொண்டு போகாமல் போலியான உள்ளுணர்வுகளைப் பெரிதாக்கி கேலிச் சிரிப்பிற்கும் பழி பாவத்திற்கும் உள்ளாகும் வாழ்க்கை என்ன வாழ்க்கை?

யார் முதலில் விட்டுக் கொடுப்பது என்று கேள்வியைப் பெரிதுபடுத்தாமலிருந்தால் விட்டுக் கொடுத்த பெருமையை நாம் அடைவதோடு மெல்ல அவர்களை நம் வசப்படுத்தி விட முடியும்.

மேலும் விட்டுக் கொடுப்பது என்பது இருவருக்குள் முடிந்து போகிற பிரச்சினை. விட்டுக் கொடுக்க மாட்டேன் என்பது ஊருக்கெல்லாம் தெரியப்போகிற பிரச்சினை.

விட்டுக் கொடுப்பதன் மூலம் அடையப் போகும் சில சிறிய நட்டங்களை பொருட்படுத்தாதவர்கள் முன்னர் கூறிய பல பெரிய நன்மைகளை அடை முடியும். இவை கண்கூடான உண்மைகள்.

லேனா தமிழ்வாணன்

# சிறுவர் அரங்கம்

1396

# சிரிங்க... சிரிங்க...!

...இதை அறிந்த அந்நாட்டு அரசன் தன் படைவீரர்களை ஒன்று சேர்த்தான்.

“நம் நாட்டை நோக்கி எதிரி வீரர்கள் படையெடுத்து வருகின்றனர். நம் நாட்டு எல்லைக்குள் நுழைவதற்கு முன் அவர்களைத் தாக்குங்கள்,” என்று கட்டளை இட்டான்.

அந்த வீரர்களும் அணிவகுத்துப் போருக்குப் புறப்பட்டனர்.

அன்று சிரிக்க வேண்டிய நாள்.

வீரர்கள் எல்லாரும் ஆ! ஆ! இன்று மகிழ்ச்சியான வாய்ப்பு. இப்படிப்பட்ட வாய்ப்பு யாருக்குக் கிடைக்கும்? இந்த நல்வாய்ப்பைத் தந்த கடவுளுக்கு நன்றி,” என்று ஆடிப்பாடி கும்மாளமிட்டபடியே சென்றனர்.



அவர்கள் ஆரவாரத்தைக் கேட்டான் எதிரி அரசன்.

“போரே இன்னும் நடக்கவில்லை. அதற்குள் வெற்றி பெற்றுவிட்டது போல மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வருகின்றனரே... அச்சமோ, கலக்கமோ அவர்களிடம் சிறிதும் இருப்பதாகத் தெரியவில்லையே...

“இவர்களை எதிர்க்க நம்மால் ஆகாது. இங்கிருந்து ஓடி விடுவதே நல்லது” என்று நினைத்தவன், தன் படையினருடன் ஓட்டம் பிடித்தான்.

எதிரி அரசன் படையினருடன் ஓடி விட்டான் என்பதை அறிந்தான் அந்நாட்டு அரசன்.

வெற்றியுடன் திரும்பும் தன் வீரர்களுக்குச் சிறந்த வரவேற்பு தர நினைத்தான். அதற்கான ஏற்பாடுகளைச் செய்தான்.

படை வீரர்கள் தலை நகரம் திரும்பிக் கொண்டிருந்தான்.

அன்று அழ வேண்டிய நாள் வந்துவிட்டது.

“ஐயோ! என்ன செய்வோம்? நாட்டைக் காப்பாற்றச் சென்றோமே. எங்களுக்கு இந்த நிலையா வர வேண்டும்? இனி நாட்டைப் பாதுகாக்க யார் இருக்கின்றனர்?” என்று அழுது புலம்பியபடியே வந்தனர்.

இதைப் பார்த்த மக்களும், அழுது புலம்பத் தொடங்கினர்.

எங்கும் அழுகுரலும், ஒப்பாரியும் கேட்டன.

அரசனுக்கு ஒன்றும் புரியவில்லை.

“வெற்றி பெற்ற நம் வீரர்கள் ஏன் அழுது புலம்புகின்றனர்? நமக்குத் தவறான செய்தி வந்துவிட்டதா?” என்று கலங்கினார்.

கண்களில் கண்ணீர் வழிய அழுது கொண்டே வந்த படைத் தலைவனைப் பார்த்தான்.

“போரில் நம் படை வெற்றி அடைந்ததா இல்லையா? அதைச் சொல்லி தொலையுங்கள். பிறகு அழுது புலம்பலாம்,” என்று எரிச்சலுடன் கத்தினான்.

“அரசே! அதை எப்படிச் சொல்வேன்? நம் படை வெற்றி பெற்று விட்டது. எதிரி வீரர்கள் பயந்து ஓடி விட்டனர். எல்லாம் போய் விட்டதே. இனி என்ன செய்யப் போகிறோம்,” என்று கதறி அழுதான் படைத் தலைவன்.

“மகிழ்ச்சியான செய்தி அல்லவா இது? இதை ஏன் அழுது கொண்டே சொல்கிறீர்கள். நான் எவ்வளவு பதறி விட்டேன் தெரியுமா? நீங்கள் வெற்றி ஆரவாரத்துடன் வந்திருக்க வேண்டாமா?” என்று கோபத்துடன் கேட்டான் அவன்.

“அரசே! இன்று அழ வேண்டிய நாள் அல்லவா? எது நடந்தாலும் அழுது ஒப்பாரி வைக்க வேண்டாமா? உங்கள் கட்டளையை யாராவது மீற முடியுமா?” என்றான் படைத் தலைவன்.

அப்போதுதான், தான் செய்த தவறு அந்த முட்டாள் அரசனுக்கு உரைத்தது. தான் போட்ட வினோதமான சட்டங்களை எல்லாம் விலக்கிக் கொண்டான். மக்களும் நிம்மதியடைந்தனர்.

(முற்றும்)

03.2016 30

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1492 - ஸ்பெயினில் இருந்து அனைத்து யூதர்களும் உரோமன் கத்தோலிக்கராக மாற வேண்டும் அல்லது அனைவரும் வெளியேற்றப்படுவார்கள் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
- 1814 - நெப்போலியனுக்கு எதிரான போரில் கூட்டுப் படைகள் பாரிஸ் நகரை அடைந்தன.
- 1822 - ஐக்கிய அமெரிக்காவில் புளோரிடா உருவாக்கப்பட்டது.
- 1831 - யாழ்ப்பாணம், மானிப்பாயில் அமெரிக்க மிஷன் கட்டடங்கள் தீப்பிடித்து அழிந்தன.
- 1842 - அறுவை சிகிச்சைகளில் முதன்முதலாக மயக்க மருந்து குரோஃபோர்ட் லோங் என்பவரினால் பயன்படுத்தப்பட்டது.
- 1851 - ஐக்கிய இராச்சியத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- 1858 - அழிப்பானுடன் கூடிய எழுதுகோலுக்கான காப்புரிமம் ஹைமன் லிப்மன் என்பவரினால் பெறப்பட்டது.
- 1867 - அலாஸ்கா 7.2 மில்லியன் அமெரிக்க டொலருக்கு, 2 சதம்/ஏக்கர் ($4.19/கிமீ$^2$) ரஷ்யாவின் மன்னன் இரண்டாம் அலெக்சாண்டர் II இடமிருந்து ஐக்கிய அமெரிக்காவின் அரசுச் செயலாளர் வில்லியம் செவர்ட் கொள்வனவு செய்தார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் படைகள் ஆஸ்திரியாவினுள் நுழைந்து வியன்னா நகரைக் கைப்பற்றினர்.
- 1949 - ஐஸ்லாந்து நேட்டோ அமைப்பில் இணைந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து ரெய்க்ஜாவிக் நகரில் கலவரம் இடம்பெற்றது.
- 1981 - ஜனாதிபதி றொனால்ட் றேகன் வோஷிங்டனில் வைத்து ஜோன் ஹிங்கிளி என்பவனால் மார்பில் சுடப்பட்டார்.

### பிறப்புக்கள்

- 1709 - ஆனந்த ரங்கம்பிள்ளை, தமிழில் நாட்குறிப்பு எழுதியவர் (இ. 1761)
- 1925 - தி. க. சிவசங்கரன், மார்க்சிய திறனாய்வாளர் (இ. 2014)

### இறப்புக்கள்

- 1949 - பிரீட்ரிக் பேர்ஜியஸ், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர் (பி. 1884)
- 1965 - பிலிப் ஹென்ச், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1896)
- 2005 - ஓ. வி. விஜயன், இந்திய, மலையாள எழுத்தாளர், ஓவியர் (பி. 1930)

# கூட்டு எதிர்க்கட்சி சார்பில் ஜெனீவாவில் ஆர்ப்பாட்டம்

## உதய கம்மன்பில, பந்துல குணவர்த்தன பங்கேற்பு





(கொழும்பு)

**கூட்டு எதிர்க்கட்சி சார்பில் நாளை 31ஆம் திகதி ஜெனீவாவில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் முன்பாக பெரும் தொகையான பொதுமக்களின் பங்கேற்புடன் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சி அறிவித்துள்ளது.**

படையினரைப் பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் நடைபெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான உதய கம்மன்பில மற்றும் பந்துல குணவர்த்தன ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் பிரான்ஸ், இத்தாலி, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் சிலரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கான அனுமதி கோரி சுவிட்சர்லாந்து பொலிஸாரிடம் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து, அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. (இ-5)

# மகிந்தவின் தோல்விக்கு காரணம் பசிலும் கோத்தபாயவுமே

சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் மூத்த உறுப்பினர்கள் மதிக்கப்படவில்லை. பசில், கோத்தபாய ஆகியோர் தன்னிச்சையாகச் செயற்பட்டனர். அதனை மகிந்த கட்டுப்படுத்தவில்லை. இறுதியாக இதற்கான விலையை மகிந்த ராஜபக்ஷ கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்று கலாநிதி தயான் ஜெயதிலக தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராஜதந்திரியும், மகிந்த ராஜபக்ஷவின் தற்போதைய ஆலோசகர்களில் ஒருவருமான, தயான் ஜயதிலக இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

போர்க்காலத்தில் மகிந்தவுக்கு பெரும் உதவியாக இருந்த சகோதரர்கள் போருக்குப் பின்னர் பலம் படைத்தவர்களாக மாறினார்கள்.

கோத்தாபய ராஜபக்ஷ திறமையானவர். ஆனால் அவர் தனது வரையறையை மீறி செயற்பட்டார், அதனை மகிந்த கட்டுப்படுத்தவில்லை.

பசில் ராஜபக்ஷ அரசியல் ரீதியில் அறிவுள்ளவர். பாரிய திட்டங்களை முன்னெடுக்கக் கூடிய திறமையானவர். ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் உள்ளக அரசியலில் மற்றும் அரச நிர்வாக விடயங்களில் அவரது செயற்பாடுகள் தவறாக இருந்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, பசில் ராஜபக்ஷவும், கோத்தபாய ராஜபக்ஷவும், தம்மை முதன்மைப்படுத்தினர். இதற்கான விலையை மகிந்த ராஜபக்ஷ கொடுக்க வேண்டியேற்பட்டது.

மைத்திரிபால சிறிசேனவுக்கு பிரதமர் பதவியை வழங்குமாறு 2014 ஆம் ஆண்டு நான் மகிந்த ராஜபக்ஷவிடம் ஆலோசனை வழங்கினேன். ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை.

மைத்திரிக்கு பிரதமர் பதவி வழங்கினால் நிமால் சிறிபால டி சில்வா கோபித்துக் கொள்வார் என மகிந்த தெரிவித்தார்.

போருக்குப் பின்னர் மகிநதவினால், தனது சகோதரர்களை கட்டுப்படுத்த முடியாமல் போனது. இதன் பிரதிபலனே மைத்திரியின் கிளர்ச்சிக்கு வித்திட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 677

சதுர்ஷன்




ஜெனி




தர்சினி




கரோலின்




மது





பமலேந்திரன்




**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

# இறுதிப்போர் இரகசியங்கள்



இறுதிக்கட்டப் போரில் என்ன நடந்தது என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சில தகவல்களை வெளயிட்டுக் கொண்டிருக்கின்ற சூழலில் இறுதிப்போர் பற்றிய பல்வேறு தகவல்களை உள்ளடக்கிய விடுதலைப் புலிகளின் முன்னாள் மகளிர் அரசியற் துறை பொறுப்பாளர் தமிழினியின் நூலும் வெளியாகியிருக்கிறது.

இந்த இரண்டு விவகாரங்களுமே இறுதிப்போர் பற்றிய பரபரப்பான கதைகளை மீண்டும் மக்கள் மத்தியில் பேச வைத்திருக்கின்றன. ஏழு ஆண்டுகளாகியும் இன்னமும் பல அவிழ்க்கப்படாத முடிச்சுக்களைக் கொண்டதாகவே இறுதிப்போர் இரகசியங்கள் இருக்கின்றன.

அந்தப் போருக்குத் தலைமை தாங்கிய இராணுவத் தளபதி என்ற வகையில் தனக்கு எல்லாமே தெரியும் என்பது போலவும், தான் சொல்வதெல்லாம் உண்மை என்பது போலவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பல்வேறு தகவல்களை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஆனாலும் அவருக்கே தெரியாத இரகசியங்களும் இருக்கின்றன என்பதை சரத் பொன்சேகாவின் ஒப்புதல் வாக்குமூலங்களே உணர்த்தியிருக்கின்றன.

**அதாவது போர் இறுதிக் கட்டத்தை எட்டியிருந்த நிலையில் தான் சீனாவுக்கு சென்றிருந்த போதும் அங்கிருந்தே படையினருக்கு கட்டளைகளை வழங்கியதாக அவர் கூறியிருக்கிறார்.**

இதன்மூலம் போர் வெற்றியில் வேறு எவரும் பங்கிற்கு வரக்கூடாது என்று அவர் விரும்புகிறார். ஆனாலும் இறுதிப் போரின் சர்ச்சைக்குரிய நிகழ்வுகள் பற்றி அவர் எதையும் பேசவோ, வெளிப்படுத்தவோ தயாராக இல்லை. எனினும் அத்தகைய சர்ச்சைகளை இன்னமும் சந்தேகங்களாகவே அவர் படரவிட முனைந்திருக்கிறார்.

அதைவிட, போருக்குத் தாமே தலைமை தாங்கியதாக கூறியிருக்கும் சரத் பொன்சேகா, போரில் ஈடுபட்ட மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, மேஜர் ஜெனரல் சவேந்திர சிலவா உள்ளிட்ட அதிகாரிகளுடன் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தனியாகத் தொடர்புகளை வைததிருந்தார் என்பதையும் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

இதன் மூலம் தனது கையையும் மீறி உத்தரவுகள் இராணுவ அதிகாரிகளுக்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கலாம் என்றே அவர் கூற வந்திருக்கிறார்.

இவை தவிர, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மரணம் எவ்வாறு நிகழ்ந்தது என்ற சர்சசையை சரத் பொன்சேகா கிளப்பாது விடினும், அதனை முன்னிறுத்தி ஊடகங்களில் பலரும் பலவித கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சண்டையில் கொல்லப்பட்டார் என்றே பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறியிருந்தார்.

அதேவேளை, சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணப்படம் ஒன்றில் அவரது மரணம் குறித்து வெளியிட்ட சர்வதேச தடயவியல் நிபுணர் ஒருவர் 50 கலிபர் துப்பாக்கிகளின் ரவை ஒன்றே பிரபாகரனின் தலையைத் துளைத்துச் சென்றிருக்க வாயப்புகள் உள்ளதாக கூறியிருந்தார்.

ஆனாலும் சரத் பொன்சேகாவின் பேட்டியின் பின்னர் பிரபாகரனின் மரணம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது குறித்து ஆராயப்பட வேண்டும், ஆராயப்படும் என்பது போன்று அமைச்சர்கள் பலரும் கூறி வருவதைக் காண முடிகிறது.

இங்கு பிரச்சினை என்னவென்றால் போர்க் குற்றங்கள் என்று கூறப்பட்ட சம்பவங்களை மறக்கடிக்கச் செய்யும் முயற்சிகள் தான் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மரணம் ஒரு போர்க்குற்றம் என்று யாருமே கூறவில்லை. அதுபற்றி விசாரிக்கப் போகிறதாம் அரசாங்கம்.

**ஆனால் போர்க்குற்றம் என்று கூறப்பட்ட நடேசன், புலித்தேவன் போன்றவர்களின் மரணங்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்படும் என்ற உறுதிமொழி இதுவரை அரசதரப்பில் யாரிடம் இருந்தும் வரவில்லை.**

அதைவிட படையினரிடம் சரணடைந்த பின்னர் காணாமல் போனவர்கள், கொல்லப்பட்டவர்கள் விடயத்தில் போர்க்குற்றங்கள் நடந்துள்ளதா? என்று ஆராயப்படும் என்றும் கூட யாரும் கூறவில்லை.

இந்தக்கட்டத்தில் பிரபாகரனின் மரணம் குறித்த விசாரணைகளை நடத்துவது பற்றி ஏன்? அரசாங்கம் மக்களின் கவனத்தை திருப்பப் பார்க்கிறது?

மக்களின் கவனத்தை ஈர்க்கும் விடயத்திலிருந்து அவர்களை திசை திருப்ப வேண்டுமானால் அதைவிட அதிகம் ஈர்க்கக் கூடிய விடயத்தை நோக்கி அவர்களின் கவனத்தை நகர்த்த வேண்டும். அதுதான் இங்கு நடக்கிறது போலத் தெரிகிறது.

இறுதிப் போர்க்கால மீறல்கள் பற்றி கடந்த ஆறேழு ஆண்டுகளாகப் பேசப்பட்டு வரும் நிலையில் இதன் திசையை மாற்றும் முயற்சிகள்தான் இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அரசாங்கத் தரப்பு எவ்வாறு எதனைக் கூறினாலும் தமிழர்களில் பலருக்கே புலிகளினதும், பிரபாகரனினதும் செயற்பாடுகள் மீது விமர்சனங்கள் இருந்தாலும் புலிகளின் மீதும் பிரபாகரன் மீதும் தமிழர்களில் பெரும்பான்மையானோர் பெருமதிப்பு வைத்திருக்கின்றனர் என்பது உண்மை.

**அந்த நம்பிக்கையை உடைப்பதும் கூட இப்போதைய பலமுனை நகர்வுகளின் உள்நோக்கங்களில் ஒன்றாக இருப்பதற்கு நிறையவே வாய்ப்புகள் இருக்கின்றன.**

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இறுதிப்போர் பற்றி வெளியிடும் கருத்துக்கள் பலரது கவனத்தை ஈர்த்தாலும் அவருக்குள் பழிவாங்கும் உணர்வு அதிகம் இருப்பதை மறக்க முடியாது.

தன்னைக் கொல்ல உதவியதாக கூறப்படும் புலிகள் இயக்க சந்தேக நபருக்கு கருணை காட்டுமாறு கோரும் அளவுக்கு அவர் பக்குவப்பட்டிருந்தாலும் முன்னைய ஆட்சியாளர்களை அவர் மன்னிக்கத் தயாராக இல்லை.

எனவே அவர்களை எந்தளவுக்கு சிக்கலுக்குள் தள்ளிச் செல்லவும் அவர் தயாராகவே இருப்பார் என்றே தெரிகிறது.

அதேவேளை, விடுதலைப் புலிகள் விடயத்தில் சரத் பொன்சேகாவின் நிலைப்பாடு ஒன்றும் தயவுதாட்சண்யம் கொண்டதாக இருக்கவும் வாய்ப்பில்லை.

பிரபாகரன் தொடர்பாக தமிழ்மக்கள் மத்தியில் உள்ள கருத்தை புலிகள் பற்றிய அபிப்பிராயத்தை உடைப்பது முக்கியமானது எனபதை சரத் பொன்சேகாவும் அறிவார். விடுதலைப் புலிகள் மற்றும் அதன் தலைமை தொடர்பானது மட்டுமன்றி அதன் இறுதிப் போர்க்காலச் செயற்பாடுகள் பல மர்மம் நிறைந்தவையாகவே இருப்பதால், இதுபோன்ற பரபரப்பான தகவல்களும் எழுத்துக்களும் மக்களிடையே கூடுதல் ஆர்வத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

**இதன் ஊடாக யாருக்கு** என்ன இலாபம்? நிச்சயமாக உள்ளது. விடுதலைப் புலிகளின் போராட்டம் தொடர்பாக ஒரு வெறுப்பூட்டக்கூடிய, மாற்றப்பட முடியாத கருத்தை விதைக்கலாம்.

தமிழ் மக்களின் உரிமைகள் இன்னமும் உறுதிப்படுத்தப்படாத நிலையில், மீண்டும் இதுபோன்ற போராட்டங்களில் அவர்களை ஈடுபடாமல் தடுப்பதற்கு இது போன்ற எண்ணப்பாடுகளை ஏற்படுத்துவது அவசியம்.

அதைவிட, போர்க் குற்றங்கள் தொடர்பாக எது முன்னிறுத்தப்பட வேண்டுமோ அதனை விடுத்து வேறொன்றின் மீது கவனத்தைக் குவிய வைப்பதன் ஊடாக போர்க்குற்ற வசாரணையை எதிர் நோக்கக் கூடியவர்களைப் பாதுகாக்கலாம்.

சரத் பொன்சேகா இப்போது சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்புடன் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கூறுகிறார் என்றால், தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார் என்று அர்த்தமில்லை.

அவர் போர்க்குற்றச் சாட்டிலிருந்து இராணுவத்தைப் பாதுகாக்கவே அவ்வாறு கூறுகிறார். அதேவேளை தனது உத்தரவுக்குக் கட்டுப்படாதவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று அவர் நினைக்க வில்லை.

ஆக, சரத்பொன்சேகாவின் எதிர் பார்ப்பு நிறைவேறினால், போர்க்குற்றங்களுக்கு நீதி கோரும் தமிழர்களின் எதிர்பார்ப்பு பொசுங்கிப் போய்விடும்.

போர்க்குற்றச்சாட்டுகளை முற்றாக வலுவிழக்கச் செய்வதற்கும் தமிழர் தரப்பை இந்த விவகாரத்திலிருந்து திசை திருப்புவதற்கு இது போன்று எதைச் செய்வதற்கும் அரசாங்கமும் படைத்தரப்பும் தயாராகவே உள்ளதென்பதை மறந்து விடலாகாது.

இந்த விடயத்தில் அரச புலனாய்வுப் பிரிவை அவ்வளவு எளிதாக எவரும் மதிப்பிட்டு விட முடியாது.

**தமிழினி எழுதிய நூலில் ஊடகவியலாளர் என்ற போர்வையில் புலிகளின் கண்ணுக்குள் மண்ணைத் தூவிவிட்டு வன்னிக்குள் நுழைந்த இராணுவ அதிகாரியை, தாம் சிறைப்பட்டிருந்த நிலையில் சந்தித்த போது திகைத்துப் போனதாக குறிப்பிட்டிருக்கிறார்.**

அதுபோலத்தான் இறுதிப்போர் இரகசியங்களுடன் நேரடித் தொடர்புடையவர்கள் பெரும்பாலும் இல்லாமல் போய்விட்ட நிலையில், தமிழ் மக்களின் கண்களில் மண்ணைத் தூவும் முயற்சிகளைத் தொடர்வது ஒன்றும் அரசதரப்புக்குக் கடினமான காரியமில்லை.

சுபத்ரா


## போதைப்பொருள் விற்பனை; பெண் பொலிஸாரால் கைது

ஹசிஸ் போதைப்பொருளை சொக்கலேட்டுடன் கலந்து விற்பனை செய்து வந்த பெண ஒருவர், தென்மாகாண ஹிக்கடுவ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

45 வயதான இவரிடம் இருந்து நேற்று முன்தினம் சுமார் 5 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப் பொருட்கள் மதுவரி திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டன.

குறித்த சொக்கலேட்டுக்கள இத்தாலியில் இருந்து கொணடு வரப்பட்டவையாகும்.

தென்மாகாண கரையோர பிரதேசங்களுக்கு வரும் உல்லாச பயணிகளுக்கு விற்பனை செய்யும் பொருட்டே இவை தயார் செய்யப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)





# அரசாங்கம் தோல்விக்கு அஞ்சி தேர்தலை ஒத்தி வைக்கின்றது

## திஸ்ஸ விதாரண கூறுகிறார்

(கொழும்பு)

**அரசாங்கம் தோல்விக்கு அஞ்சி தேரதலை ஒத்தி வைத்து வருவதாக லங்கா சம சமாஜ கட்சியின் பொதுச் செயலாளர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

ஜனநாயகம், நல்லாட்சி பற்றி பேசிய இந்த அரசாங்கம் தோல்வியடையக் கூடும் என்ற அச்சத்தினால் தேர்தலை ஒத்தி வைத்து வருகின்றது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும். கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி மன்றத்தேர்தல்கள் இந்த மார்ச் மாதம் 31ஆம் திகதியை கடக்க உள்ள நிலையில் அரசாங்கம் தேர்தலை நடத்த எவ்வித ஆயத்தங்களையும் மேற்கொள்ளவில்லை.

தேவையான காரணிகளின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒரு வருடம் ஒத்தி வைக்க முடியும். இந்த காலமும் தற்போது பூர்த்தியாகியுள்ளது.

அரசாங்கம் மக்கள் ஆணையை உதாசீனம் செய்து வருகின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-5)

## மகிந்த, கோத்தாவை கொலை செய்ய திட்டம்

### வழக்கு ஒத்திவைப்பு





முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரை கொலை செய்ய சூழ்ச்சி திட்டம் தீட்டியதாக குற்றம் சுமத்தி இரண்டு பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரையிலான காலப் பகுதியில் மகிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ, சரத் பொன்சேகா ஆகியோரை கொலை செய்ய சூழ்ச்சித் திட்டம் தீட்டியதாக இரண்டு பேருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குத் தொடர்ந்துள்ளது.

கனகரட்ணம் ஆதித்யன் எனப்படும் கிரிதரன் மற்றும் கந்தவனம் கோகுல்நாத் எனப்படும் இன்பன் ஆகியோருக்கு எதிராகவே இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பயங்கரவாத செயற்பாடுகள் குறித்த வழக்குகளை விசாரணை செய்யும் விசேட உயர் நீதிமன்றினால் நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணைகளின் போது முதலாம் சந்தேக நபருக்கு எதிரான சாட்சியங்களே இரண்டாம் சந்தேக நபருக்கும் பொருந்துமா? என்பது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டுமென சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நயோமி விக்ரமசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அடிப்படையில் சந்தேக நபர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த வழக்கு எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## குற்றச்செயல்களுடன் தொடர்புடையோருக்கு தேர்தல்களில் போட்டியிட அனுமதி இல்லை

### அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஊழல், மோசடி மற்றும் குற்றச் செயல்களுடன்தொடர்புடையோருக்கு சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட அனுமதி வழங்கப் பட மாட்டாது என அமைச்சர் மகிந்த அமரவீர வலியுறுத்தியுள்ளார்.

கடந்த காலங்களில் சுதந்திரக் கட்சி சார்பில் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களாக, உறுப்பினர்களாக இருந்த பலரும் பல்வேறு வகையான மோசடிகள், குற்றச் செயல்கள் மற்றும் ஊழல் நடவடிக்கைகளில் தொடர்புபட்டிருந்தனர்.

மேலும் சிலர் கடந்த தேர்தல்களின்போது சுதந்திரக் கட்சியை தோற்கடிக்கும் நோக்கிலும் செயற்பட்டிருந்தனர்.

இவ்வாறானவர்களின் செயற்பாடு காரணமாக அதிருப்தியடைந்த இளம் தலைமுறையினர் கட்சியை விட்டு தூரமாகிச் சென்றதன் காரணமாகவே சுதந்திரக் கட்சி கடந்த தேர்தல்களில் பின்னடைவொன்றை எதிர் கொணடது.

எனவே அவ்வாறு குற்றச்சாட்டுகளை எதிர்கொ ண்டுள்ள எந்தவொரு உள்ளூராட்சி மன்ற தலைவர் அல்லது உறுப்பினருக்கும் எதிர்வரும் தேர்தலில் போட்டியிட அனுமதி வழங்கப்பட மாட்டாது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளர் அமைச்சர் மகிந்த அமரவீர வலியுறுத்தியுள்ளார். (இ-5)

# செய்தித்துளிகள்

## வரலாறு காணாத வகையில் ரூபாவின் பெறுமதியில் வீழ்ச்சி

இலங்கையில் வரலாறு காணாத வகையில் ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி பாரிய ளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக ஒரு அமெரிக்க டொலரின் பெறுமதி 148 ரூபாவினை தாண்டிச் சென்றுள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி 148 ரூபாவாக பதிவாகியிருந்தது.இலங்கை மத்திய வங்கியின் தகவல்களின் அடிப்படையில் ஒரு அமெரிக்க டொலரின் விற்பனை விலை 148.91 ரூபா என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி நாட்டின் இறக்குமதி பொருட்களின் விலைகளிலும் ஒட்டுமொத்த பொருளாதாரத்திலும் பாதிப்பை ஏற்டுத்தும் என சுட்டிக்காட்டப்படுகிறது. (இ-5)

## சட்டவிரோதமாக மின்சாரம்; பொலிஸாரால் ஒருவர் கைது

நெல்லியடி காளிகோவிலடிப்பகுதியில் மின்மாணியில் துளையிட்டு சட்டவிரோதமான முறையில் மின்னிணைப்பினை மேற்கொண்ட நபர் ஒருவரை தாம் கைது செய்துள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இலங்கை மின்சார சபையினரும் பொலிஸாரும் மேற்கொண்ட தேடுதலிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

இவரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

## போயா தினத்தன்று கள் விற்ற நபரொருவர் விளக்கமறியலில்

போயா தினத்தன்று கள் விற்பனை செய்த நபர் ஒருவரிற்கு மூவாயிரம் ரூபா அபராதமும் 100 மணித்தியால சமுதாயப்பணியும் செய்யுமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் தீர்ப்பளித்தார்.

நெல்லியடிப் பொலிஸாரால் அரசடிப்பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட நபரை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்திய போதே அவருக்கு மூவாயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் 100 மணித்தியால சமுதாயப் பணியும் செய்யுமாறும் உத்தரவிட்டார். (இ-60)

## இறந்த நிலையில் சிறுத்தை மீட்பு

கண்டி ஹீரஸ்ஸகல பகுதியில் காட்டுப்பன்றியால் தாக்கப்பட்டு இறந்ததாக சந்தேகிக்கப்படும் சிறுத்தையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.சுமார் மூன்று அடி நீளம் கொண்ட குறித்த சிறுத்தை, வீடுகளில் வளர்க்கப்பட்டுவரும் பூனை, நாய் போன்ற செல்லப்பிராணிகளை கொன்றுள்ளதாக பிரதேச மக்கள் சந்தேகிக்கின்றனர்.பேராதனை மிருக வைத்திய பீட அதிகாரிகள் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

இது மலையக காடுகளில் காணப்படக் கூடிய மிக அரிய வகையான சிறுத்தை இனத்தைச் சேர்ந்தது.

இது காட்டுப் பன்றி ஒன்றின் தாக்குதலால் பலியாகி இருக்கலாம் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (இ-5)

## பேராசிரியர் வித்தியானந்தனின் நினைவுப்பேருரை-2016 இன்று

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இன்று 30ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப்பேருரை, கல்லூரி பிரதான மண் டபத்தில் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறை தலைவர் கலாநிதி திருமதி அனுஷியா சத்திய சீலன் ''இன்றைய சூழலில் ஆசிரியர் தலைமைத்துவம்- ஓர் விமர்சன நோக்கு'' என்னும் தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (இ

# தமிழ் சினிமா வரலாறு

130

## 56 வயதில் டி.ஆர்.சுந்தரம் மாரடைப்பால் மரணம் (1963)

சேலத்திலுள்ள சினிமா தியேட்டர்களில் காட்சிகள் இரத்துச் செய்யப்பட்டன. மறுநாள் சென்னை சினிமா ஸ்ரூடியோக்கள் மூடப்பட்டன.

டி.ஆர். சுந்தரத்தின் மரணம் திரையுலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு என்று பட அதிபர்கள் சங்கத் தலைவர் ஏ.எல்.சீனிவாசன் அனுதாப செய்தி விடுத்தார்.

**இறுதி மரியாதை**

சுந்தரம் மறைவு பற்றி அறிந்ததும் சென்னையிலிருந்து மு.கருணாநிதி, எம்.ஜி.ஆர்., நம்பியார், தங்கவேலு மற்றும் பல நடிகர்- நடிகைகள், கலைஞர்கள் சேலத்திற்கு விரைந்து சென்று இறுதி மரியாதை செலுத்தினர்.

மாடர்ன் தியேட்டர்ஸ் ஊழியர்கள் கண்ணீர் விட்டு அழுதபடி இருந்தார்கள். அன்று மாலை இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

**மனோரமா துயரம்**

சுந்தரம் மறைவு குறித்து பின்னர் மனோரமா கூறியதாவது:-

கதாநாயகியாக புகழ் பெறலாம் என்ற கனவை சுமந்து கொண்டுதான் சென்னைக்கு வந்தேன். ஆனால் எனக்குக் கிடைத்தது. நகைச்சுவை வேடங்கள்தான். கதாநாயகிக் கனவு மனதுக்குள்ளேயே புதைந்திருந்தது.

அப்போதுதான் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பான யாருக்கு சொந்தம் என்ற படத்தில் நடிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. எனக்கு ஜோடியாக நகைச்சுவை மன்னர் சந்திரபாபு.

மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர்.சுந்தரம் அப்போதெல்லாம் படப்பிடிப்பு நடக்கும் இடத்திற்கு வரமாட்டார். நான் அந்தப் படத்தில் நடித்த போது ஒருநாள்கூட அவரை நேரில் பார்த்ததில்லை. ஆனால் அவரைப் பற்றி நிறைய கேள்விப்பட்டேன். அதுவும் பயமுறுத்தலாக!

ஒருநாள் யாருக்கு சொந்தம் படத்தின் ரெஸ் போட்டு பார்த்திருக்கிறார். அந்த சமயத்தில் ஆங்கில படம் ஒன்றை தமிழில் எடுக்க முடிவு செய்து கதாநாயகியாக யாரைப் போடலாம் என்ற யோசனையில் இருந்திருக்கிறார்கள். அவர் தேடிய கதாநாயகி அங்கே தோன்றியிருக்கிறாள் என் உருவில்!

உடனடியாக அப் படத்திற்கு என்னைக் கதாநாயகியாகவும் ஆர்.எஸ். மனோகரை கதாநாயகனாக வும் ஒப்பந்தம் செய்தார்கள்.

இந்தப் படத்திற்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட போதும் கூட நான் டி.ஆர்.எஸ் அவர்களைப் பார்த்ததில்லை. படப்பிடிப்பு ஆரம்ப விழாவின் போதுதான் அவரை சந்தித்து காலைத் தொட்டு வணங்கி ஆசீர்வாதம் வாங்கினேன். அதுவும் இவர்களில் யார் டி.ஆர்.எஸ்? என்று மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளும் நிலையில்தான் அப்போதும் இருந்தேன்.



அவருடன் பேசிப் பழகிய பிறகுதான் அவரை எப்படிப்பட்ட தந்தை உணர்வு மிக்கவர் என்பது புரிந்தது. மற்றவர்கள் பயமுறுத்தியதுபோல கடுமையாக உள்ளம் படைத்தவராக அவர் நடந்துகொண்டது இல்லை. ஒரு கனிவான தந்தை எப்படித் தன் மகளிடம் நடந்துகொள்வாரோ அப்படித்தான் என்னிடம் நடந்துகொண்டார்.

ஆனால் இந்தப் படம் முடியும் முன்பே டி.ஆர்.எஸ். திடீரென்று இயக்கை எய்தி விட்டார்.

ஒரு படத்திலாவது கதாநாயகியாவது நடிக்க வேண்டும் என்ற என் கனவை நனவாக்கிய அந்தத் தெய்வத்தின் மறைவு என் வாழ்க்கையில் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

இவ்வாறு மனோரமா குறிப்பிட்டார்.



**டி.ஆர்.சுந்தரம் உருவச்சிலை**

மறைந்த டி.ஆர். சுந்தரத்தின் உருவச் சிலை 05.01.2000 அன்று சென்னையிலுள்ள தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை வளாகத்தில் திறக்கப்பட்டது.

அன்றைய முதலமைச்சர் கருணாநிதி அதைத் திறந்து வைத்தார். (தொடரும்)

# "றக்பி" நட்சத்திரம் தாஜுதீன்...

(18 ஆம் பக்கக் கட்டுரையின் தொடர்ச்சி)

நீதி விசாரணையொன்றில் தடையாக இருக்கும் சிக்கலை விடுப்பதற்குரிய விஞ்ஞான ரீதியான ஆதாரங்கள் எனக்கூறும் போது அது 'பௌதீக-இரசாயனவியல்' தடய, அல்லது சட்ட மருத்துவ அறிக்கைகளை மட்டுமே கருதுவதாக இருக்காது. மாறாக குற்றமிழைத்தவர்கள் பாதிக்கப்பட்டவர்கள் போன்றோரது அது சம்பந்தமான தொலைபேசி அழைப்பு மற்றும் பேச்சு விபரங்களுங்கூட சிக்கலை விடுவிப்பதற்கான சரியான ஆதாரங்களாகவே கருதப்படுகிறது. பாதிக் கப்பட்டவர் களது அல்லது மரணமடைந்தவர்களது தருணத்திற்கேற்ற முந்திய தொலைபேசி அழைப்புக்கள் பற்றிய விபரங்களும் சிக்கலை விடுவிக்க உதவும் ஆதாரங்களாக இருக்கலாம். விசாரணைகளை தடுப்பவர்களை பொலிஸ் பாதுகாப்பில் வைத்திருந்து விசாரிப்பதற்கு நாட்டின் சட்டம் இடமளிப்பதான ஒரு தருணத்திலேயே டயலொக் ரெலிகொம் நிறுவனமும் பொலிஸ் விசாரணைகளுக்கு உள்நோக்கத்துடன் தடையேற்படுத்தியிருக்கிறது" என்றும் அவ்வட்டாரங்கள் கூறுகின்றன.

அதேநேரம் முன்னாள் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியான 'JMO' பேராசிரியர் ஆனந்த சமரசேகர சம்பவ இடத்திற்கு நேரடியாகவே அழைக்கப்படாததுடன் சடல பரிசோதனை நடத்தப்படாமலேயே உடலம் சவச்சாலைக்கு நேரடியாகக் கொண்டு போகப்பட்டது பற்றியும் கேள்விகள் எழுப்பப்படுகிறது.

மரணம் நிகழ்ந்த அந்த சம்பவ இடத்திற்குதான் சென்று திரும்புவது மிக எளிதான ஒன்றாகவே இருக்கின்ற போதிலும் தாம் அங்கு ஒரு போதுமே அழைக்கப்படவில்லை என ஊடகத்திற்கான ஒரு நேர்காணலில் போராசிரியர் சமரசேகர கூறியிருந்தார்.

இதுபற்றி பேசியபோது இம்மாதிரியான சம்பவ இடங்களுக்கு 'JMO' வை அழைக்க வேண்டியது பொலிஸாரினது கடமையே என அவர் உரிமையுடன் மேலும் காட்டமாகவே கூறினார்.

'CID' யினருடன் பின்னர் ஒத்துழைத்துச் செயற்பட்ட டயலொக் நிறுவனம் தேவையான செல்லிட தொலைபேசி அழைப்பு விபரங்களை அவர்களுக்கு வழங்கிய தன் மூலம் பல நீண்ட வருட காலப் பகுதிக்கான புதிர்களை விடுவிக்க உதவியிருந்ததாக அதே வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

"தொலைபேசி அழைப்பு விபர அறிக்கைகளை நீதிமன்றத்திற்கே கூட சமர்ப்பிக்காத தன் மூலம் விசாரண்ணைக்கு தடையேற்படுத்தும் டயலொக் நிறுவனத்தின் முயற்சிக்கு காரணம் எதுவாக இருக்கும்?

நாட்டின் முன்னைய ஆட்சிக்கால முதன்மைக் குடும்பத்தினருடன் டயலொக் ரெலிக்கொம் உயர் அதிகாரிகள் கொண்டிருந்த நெருக்கமான நட்பேதான் இதற்குக் காரணம் என்றே நாம் கருத வேண்டும்" என்றே அவர்கள் குறைபட்டுக்கொண்டனர்.

அதேநேரம் அடுத்த நீதிமன்ற அமர்வுக்கு முன்னரே சந்தேக நபர்களை கைது செய்யப்பட வேண்டுமெனவும் கொலையில் நேரடியாகவே சம்பந்தப்பட்ட முதல்தர நபர்களையும் அதற்கு அனுசரணையாகவிருந்து உதவியிருந்தவர்களையுங் கூடவே கைது செய்வதற்கான ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருப்பதாக பொலிஸ் பேச்சாளரும் உதவி பொலிஸ் சுப்ரிண்டருமான ரஞ்சித் குணசேகர கூறினார்.

"கொலையில் நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் நபர்களை மட்டுமல்லாது சந்தேக நபர்களை கொலைக் குற்றச் சாட்டிலிருந்து தப்பிக்க உதவியவர்களையுங் கூட கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதியரசர் நிசாந்த பீரிஸ் 'CID' யினருக்கு ஆணையிட்டிருந்தார். இந்த சந்தேக நபர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுவிடாதபடி தடை செய்வதற்கான அறிவித்தல் குடிவரவு- குடியகல்வு இலாகாக்களுக்கு முறைப்படி வழங்கப்பட்டுள்ளது.

இந்த சந்தேக நபர்களனைவரது நடமாட்டங்கள் அனைத்தும் இப்போது 'CID' யினரது இறுக்கமான கண்காணிப்பின் கீழ் இருப்பதால் இவர் கள் எவருமே தப்பிக்க முடியாது' என்று தெளிவு படுத்துகிறார் பொலிஸ் பேச்சாளர்.

முடிச்சு இறுகிக் கொண்டிருக்கிறது!

(முற்றும்)

தமிழில்- யோகர்

ஆயிரம் இரவுகளின் வணக்கத்தை விட ஒரு மணி நேரம் அறிவுரை புகட்டுவது மேலானது.
-நபிகள் நாயகம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடபகுதியின் முதல் தேவை 67 அடி உயர புத்தர் சிலையா?

நயினாதீவில் 67 அடி உயரமான புத்தர் சிலை அமைக்கும் முயற்சி நடந்து வருவதை வடக்கு மாகாண ஆளுநரின் அறிவிப்புகள் உறுதி செய்துள்ளன.

புத்தர் சிலை அமைப்பது என்றவுடன் ஆளுந்தரப்பு உடனடியாகத் தலையிட்டு கருத்துக்கூறுவது இலங்கையில் வழமை.

அந்த வகையில் வடக்கு மாகாணத்தின் ஆளுநரும் 67 அடி உயரமான புத்தர் சிலை ஒன்று நயினாதீவில் அமைப்பது பற்றி கருத்துத் தெரிவித்துள்ளார்.

எமது வடபகுதி முழுவதிலும் புத்தர் சிலைகளை அமைப்பதில் அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் யாவரும் அறிந்ததே.

வடபகுதியில் எங்கு? அரசமரம் இருந்தாலும் அதைச் சுற்றி சுவரிட்டு புத்தர் சிலையை நிர்மாணிப்பது என்ற பணி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் சர்வசாதாரணமாக நடந்தேறியது.

வடபகுதியில் இராணுவ முகாம்கள் எங்கிருந்தாலும் அங்கு புத்தர் சிலைகளை அமைத்து விடுவது வழக்கம். இத்தகைய போக்கு தமிழ்த் தரப்புகளால் எதிர்க்கப்பட்ட போதிலும்; நாங்கள் ஆள்பவர்கள், இது பௌத்த சிங்கள நாடு எனவே புத்தர் சிலையை நாம் எங்கும் நிர்மாணிப்போம் என்பதாக நிலைமை இருந்தது.

இந்த நிலைமை நல்லாட்சியிலும் தொடர்கிறது. அதன் அடிப்படையில்தான் நயினாதீவில் 67 அடி உயரமான புத்தர் சிலை நிர்மாணிக்கப்படும் முயற்சி நடந்து வருகிறது.

தமிழ் மக்கள் வாழ்கின்ற நயினாதீவில் தண்ணீர்ப் பிரச்சினை, உள்ளகப் போக்குவரத்துக் கஷ்டங்கள் என ஏகப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றபோதும் அங்கு புத்தர் நிலையை நிர்மாணிப்பதில் அரச தரப்பு அக்கறை கொண்டிருப்பது ஏன்? என்ற கேள்வி எழுவது நியாயமே.

யுத்தம் முடிந்து இன்னமும் மீளமுடியாமல் தமிழ் மக்கள் இன்னலுற்று இருக்கும் வேளையில், காணாமல் போனவர்களின் உறவுகள் கண்ணீரும் கம்பலையுமாக அலைந்து திரியும்போது; விடுதலையின்றி தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் வாடும்போது நயினாதீவில் 67 அடி உயரமான புத்தர் சிலையை நிர்மாணிப்பதுதான் இன்றைய உடனடித் தேவையா? என்பதை வடக்கு மாகாண ஆளுநர் உணர்ந்து கொள்ளவேண்டும்.

நயினாதீவு நாகவிகாரையில் இருக்கக்கூடிய புத்த பிக்கு கேட்டு விட்டார் என்பதற்காக எல்லாவற்றுக்கும் அனுமதி கொடுப்பதானது இந்த நாட்டில் எந்தக் காலத்திலும் இன நல்லுறவை ஏற்படுத்த முடியாது என்பதாகி விடும்.

வடக்கு மாகாணத்தின் தற்போதைய ஆளுநர் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். அந்த நம்பிக்கையை அவர் பாதுகாப்பார் என்று நம்புகின்றோம்.

நயினாதீவு நாகவிகாரையின் இறங்கு துறையில் 67அடி உயரமான புத்தர் சிலையை அமைத்து இன-மத நல்லுறவை பாதிக்கச் செய்துவிடாதீர்கள் என்பதே நம் தாழ்மையான கோரிக்கை.

64 சக்தி பீடங்களில் ஒன்று எனப் போற்றப்படும் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் சைவத் தமிழ் மக்களின் இதயம் என்று போற்றக்கூடியது.

அத்தகையதொரு சிறப்புமிகு சைவ ஆலயம் எழுந்தருளியிருக்கின்ற நயினாதீவில் மிகப் பிரமாண்டமான புத்தர் சிலையை நிறுவி, குழப்பத்தை ஏற்படுத்துகின்ற சம்பவங்களைத் தவிர்ப்பது நல்லது.

இதை நாம் கூறும்போது நாங்கள் ஒரு மதத்துக்கு எதிராகக் கருத்துரைப்பதாக எவரும் நினைத்து விடத் தேவையில்லை.

புத்த பிரானின் போதனைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதில் எமக்கு எந்த மாற்றுக் கருத்துமில்லை. அதேவேளை புத்தபிரானின் போதனைகளை அவரைப் பின்பற்றுபவர்கள் சரியாக உணர வேண்டும்.

அத்தகைய உணர்வு நிலைகள் இருந்தால், தமிழர் தாயகத்தில் பொருத்தமற்ற – வில்லங்கமான செயற்பாடுகளை உரியவர்கள் செய்யமாட்டார்கள் என்பதே உண்மை.

## வவுனியாவில் 529 பேர் சாட்சியமளிக்க அழைப்பு

வவுனியா மாவட்டத்தில் காணாமல்போனோர் தொடர்பான விசாரணை மேற்கொள்ளும்ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளிக்க 529 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியுள்ள விசாரணைகளில் சாட்சியமளிக்க 311 பேருக்கும் இன்று புதன் கிழமை சாட்சியமளிப்பதற்காக 218 பேருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காணாமல் போனோா தொடர்பான புதிய பதிவுகளும் இடம்பெற்றுவருவதுடன் நான்கு பிரிவுகளாக ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் விசாரணைகளை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-2-250)

## வெயில் கொடுமையால் நண்பகலுடன் பாடசாலைகளைமூட வேண்டுகோள்

(கொழும்பு)

தற்போது நாட்டில் நிலவி வரும் கடும் வெப்ப நிலையைக் கருத்திற்கொண்டு பாடசாலைகளை நண்பகல் 12 மணியுடன் மூடுமாறு கிழக்கு மாகாண இலங்கை கல்வி நிர்வாக சேவை சங்கம் கல்வியமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் செயலாளர் ஏ.எல்.எம். முக்தர் கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடும் வெப்பநிலை காரணமாக குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. அத்துடன் வெப்பநிலை அதிகரிப்பினால் பல்வேறு தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயமும் காணப்படுகிறது.

பாடசாலை விளையாட்டுப் போட்டிகளை எதிர்வரும் மேமாதம் வரை பிற்போடுவதற்கு கல்வியமைச்சு எடுத்த தீர்மானத்தை நாம் வரவேற்கின்றோம்.

கடும் வெப்பம் காரணமாக மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பாடங்களைக் கற்பதிலும் கற்பிப்பதிலும் ஒரு வித எரிச்சலூட்டும் தன்மை காணப்படுகிறது. மாணவர்கள் தாகம் தீர்ப்பதற்கு பெரும் அசௌகரியங்களை எதிர் கொள்ளவேண்டியுள்ளது.

எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு சகல பாடசாலைகளையும் நண்பகல் 12 மணியுடன் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (3)

## மின்மாற்றியில் மீண்டும் தீ; நாசகார கும்பல் கைவரிசை!

(கொழும்பு)

பம்பலப்பிட்டி லோரிஸ் வீதி பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த மின் பிறப்பாக்கியில் நேற்று காலை திடீரென தீ விபத்து ஏற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

குறித்த பகுதிக்கு தீயணைப்பு வாகனம் இரண்டு அனுப்பட்ட போதிலும் அந்நேரத்தில் பிரதேச மக்கள் தீயை அணைத்துள்ளதாக தீயணைப்பு சேவை திணைக்களம் தெரிவித்துள்ளது.

தீயிற்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை. குறுகிய காலப்பகுதியில் இலங்கையில் மின் பிறப்பாக்கியில் விபத்து இடம்பெற்ற மூன்றாவது சந்தர்ப்பம் இது வாகும்.

மின் பிறப்பாக்கிகளை இலக்கு வைத்து, நாசகார கும்பல் ஒன்று தாக்குதலை மேற்கொண்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் நேற்றும் மின்பிறப்பாக்கி தீ பற்றிக் கொண்டுள்ளமையால் மக்கள் மத்தியில் பலத்த சந்தேக நிலை ஏற்பட்டுள்ளது. (செ-12)

## வெலிக்கட சிறைக்கூடத்தில் 15 கைபேசிகள் மீட்பு!

(கொழும்பு)

வெலிக்கட சிறைச்சாலையில் மரணதண்டனைக் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் செப்பல் சி 3 சிறைக்கூடத்திலிருந்து 15 கைப்பேசிகளை சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட தொலைபேசிகளில் 3G ரக உயர் தொழில்நுட்பம் கொண்டவையும் இருந்ததாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின பேச்சாளரும் ஆணையாளருமான துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

செப்பல் சி 3 சிறைக்கூடத்தில் நூறு மரணதண்டனைக் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் கைப்பற்றப்பட்ட தொலைபேசிகள் அந்தச் சிறைக்கூடத்தின சுவர்களிலும் தரைக்குக் கீழும் ஆங்காங்கே ஒளித்து வைக்கப்பட்டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட தொலைபேசிகளின் சிம் கார்டுகள் மேலதிகப் பரிசோதனைகளுக்காக புலனாய்வுப் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டிருப்பதாக சிறைச்சாலைகள் தலைமையகம் தெரிவித்தது. (செ-12)

## மோ.சைக்கிளில் வந்தவர்களால் இரவுவேளை ஆடு அபகரிப்பு

(கோப்பாய்)

உரும்பிராய் தெற்கு வேம்பன் ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு ஆடு ஒன்று திருடப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் இருந்தவர்கள் இரவு உணவு அருந்திவிட்டு படுக்கைக்கு சென்றதனை மறைந்திருந்து அவதானித்த திருடர்கள் அந்த வீட்டில் இருந்த 14 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஆட்டினை திருடிச் சென்றுள்ளனர்.

ஆடு கத்தும் சத்தம் கேட்டு விழிப்படைந்த வீட்டார் வெளியில் வந்து பார்த்த போது ஆட்டினை திருடர்கள் இழுத்துச் செல்வதை அவதானித்து, அயலவர்களுக்கும் தகவல் கொடுத்துள்ளார்.

வீட்டின் உரிமையாளரும் அயல் வீட்டாரும் திருடர்களை துரத்திய போதும் திருடர்கள் ஆட்டினை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு தப்பியோடியுள்ளனர்.

இதேபோன்று கடந்த மாதமும் நேற்று முன்தினம் ஆடு திருடப்பட்ட வீட்டிற்கு அண்மையில் உள்ள வீடு ஒன்றிலும் பெறுமதியான ஆடு ஒன்று மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்களால் அபகரிக்கப்பட்டதாகவும் அவ் வீட்டாரும் கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மைக் காலமாக உரும்பிராயில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றது. இதனால் இரவு வேளைகளில் பொலிஸார் தீவிர கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-87)

## வெதுப்பகப் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(தண்ணீரூற்று)

முல்லைத்தீவு மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தினரால் 2016 ஆம் ஆண்டிற்கான வெதுப்பகப் பயிற்சிக்கான பயிலுநர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன.

குறித்த பயிற்சியை தொடர விரும்புவோர் விண்ணப்பிக்குமாறு தொழிற்பயிற்சி நிலைய பணிப்பாளர் ஆர். மயூரதன் கோரியுள்ளார்.

விண்ணப்பதாரிகள் சுய விபரக்கோவையை பூரணப்படுத்தி 02.04.2016 இற்கு முன்னர் பணிப்பாளர், மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம், மாங்குளம் வீதி, முல்லைத் தீவு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

இது தொடர்பில் மேலதிக தகவல் தேவைப்படுவோர் 0710318989 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டுபெற்றுக்கொள்ள முடியும் என அவர் அறிவித்துள்ளார். (2-3-292)

## க.பொ.த.(சா/த) பெறுபேறுகள்-2015

யா/ அரானி கிழக்கு அ.மி.த.க. பாடசாலை

சி.கண்ணகிபாலன்-4ஏ3பி1சி, க.கஜேந்திரன்-3ஏ1பி4சி, வி.சுகிர் தாஸ்-ஏபி4சி2எஸ், அ.பர்மியன்-6சி2எஸ், பு.நிமல்ராஜ்-1ஏ6சி1எஸ், த.தமிழரசன்-3சி4எஸ், வி.உமாதேவி-5சி3எஸ், ச.சன்சிகா-1பி4சி3எஸ், ந.மேனகா-3சி4எஸ், பு.கீர்த்திகா-3சி5எஸ்.ஜெ. அலைமகள-ஏ6எஸ்,யோ. சாளினி-பிசி4எஸ், உ. தேன்நிலா-பிசி4எஸ், யோ.நிலக்சன்-4சி2எஸ், ஞா.டிலக்சன்-3சி2எஸ். (இ)

## மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ் பிரதேசத்தில் அம் பலவாணர் வீதி, உடுவில் பிரதேச செயலக வீதி, சபாபதிப் பிள்ளை வீதி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில அரிப்பு, சவேரியார் குளம், CECB ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும. (இ-9)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### தேடுவது உனக்கு கிடைக்கும்



✦ வெண்ணெய் எடுக்க சூரிய உதயத்திற்கு முன்பாக கடைய வேண்டும். பகலில் கடைந்தால் நன்றாகச் சேராது. அதுபோல் சிறுவயதிலேயே ஆன்மீக நெறியில் நின்று மனதைக் கடவுளிடம் செலுத்தினால் தான் இறைக்காட்சி கிடைக்கும்.

✦ மனிதனின் மனம் கடுகுப் பொட்டலம் போன்றது. அது கிழிந்து, நாலாப் பக்கங்களிலும் ஓடிவிட்டால் அதை ஒன்று சேர்ப்பது சிரமம். அதுபோல் மனம் பல வழிகளில் சென்று, உலக விஷயங்களோடு ஈடுபட்டிருக்கும் போது அதைக் குவித்து ஒருமுகப்படுத்துவதும் சுலபமல்ல.

✦ கடவுளைத் தேடுபவன் அவரை அடைகிறான், செல்வத்தைத் தேடுபவன் அவற்றை அடைகிறான். நீ எதைத் தேடுகிறாயோ அதையே அடைவாய்.

✦ "நான்" என்னும் அகங்காரம் அழியும்போது கடவுள் தோன்றுகிறார். ஒருவனது அகங்காரம் அவனது உடல் இருக்கும் வரை அவனைவிட்டு முற்றிலும் நீங்குவதில்லை.

✦ ஒளியை உணர்பவன் இருளையும் உணர்கிறான். பாவம் தெரிந்தவனுக்கு புண்ணியமும் தெரியும் குணத்தை அறிந்தவன், குற்றத்தைப் பற்றியும் அறிந்திருப்பான்.

# ஜோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக்கிண்ணம்-2016 யாழ். பல்கலைக்கழக அணி முன்னிலையில்



ஜோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 7ஆவது ஆண்டாக நடத்திவரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித்தெரிவுக்கு 01.01.2016 தொடக்கம் 29.02.2016 வரை 18 கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றுள்ளன. அவற்றிற்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் யாழ். பல்கலைக்கழக அணி 6 போட்டிகளில் பங்குபற்றி 4 போட்டிகளில் வெற்றி பெற்று 33.60 புள்ளிகளை பெற்று முதலாவது இடத்திலும் கே.சி.சி.சி. அணி 5 போட்டிகளில் பங்குபற்றி 4போட்டிகளில் வெற்றிபெற்று 31.68 புள்ளிகளை பெற்று 2 ஆம் இடத்திலும் திருநெல்வேலி சீ.சீ.அணி 2போட்டிகளில் பங்குபற்றி இரண்டிலும் வெற்றி பெற்று 16.07 புள்ளிகளை பெற்று 3 ஆம் இடத்திலும் உள்ளனர்.

ஏனைய கழகங்களின் நிலை பின்வருமாறு,

ஓல்ட்கோல்ஸ்-10.50(01/01), விக்டோரி-10.30(02/01), விங்ஸ்-9.21(01/01), ஹாட்லியைற்ஸ்-8.88 (03/01), சிறிகாமாட்சி-8.73(01/01), யாழ்.ஜொனியன்ஸ்-8.35(01/01), டிறிபேக்ஸ்ரார்-7.76 (01/01), ஜொலிஸ்ரார்-6.86(03/00), திருநெல்வேலி YMHA-5.31(02/00), நியூஸ்ரார்-3.62(01/00), அரியாலை சென்றல்-3.35(02/00), யூனியன்ஸ்-2.81(01/00), யங்ஸ்ரார்-1.86(01/00), ஸ்ரான்லி-1.37(01/00). (க)

# கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழா சம்பியன் பட்டம் வென்றது மாலுசந்தி மைக்கல்



கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழாவில் கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்று வந்த குழுநிலை போட்டிகளின் இறுதி நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யா/நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் பி.ப 2 மணியளவில் நடைபெற்றது.பிரதேச செயலகத்தில் 55 கழகங்கள் பதிவு செய்யப்பட்ட நிலையில் 31 கழகங்கள் இம்முறை போட்டிகளில் பங்குபற்றின.

மிகவும் பரபரப்பாக நடைபெற்று வந்த விளையாட்டு போட்டிகளில் இறுதிநாள் வரை எந்த கழகம் ஓவர் ஓல் சம்பியன் பட்டம் பெற்றுக் கொள்ளும் என்ற விறுவிறுப்புக்கு மத்தியில் போட்டிகள்நடைபெற்றன. இறுதியில் அனைத்து போட்டிகளிலும் 55 புள்ளிகளை பெற்று மாலு சந்தி மைக்கல் மணி சம்பியனாகியது.

51 புள்ளிகளை பெற்று வதிரி டயமன்ஸ் அணி இரண்டாவது இடத்தை பெற்றுக்கொண்டது. உடுப்பிட்டி சிவகுமரன் 37, அல்வாய்மனோகரா 27, கரவெட்டி ஞானம்ஸ் 20, உடுப்பிட்டி நவஜீவன் 10, அண்ணா சிலையடி 10, வதிரி சிறி முருகன்7,கம்பர்மலை யங்கம்பன்ஸ் 7, கரவெட்டி வளர்மதி 7புள்ளிகள் முறையே பெற்றுக்கொண்டன.

ஏனைய கழகங்கள் எந்த புள்ளிகளையும் பெற்றுக்கொள்ளவில்லை. தொடர்ந்து நடைபெற்ற உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி பெரும் திரளான ரசிகர்கள் மத்தியில் மோதியது. விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் வதிரி டயமன்ஸ் அணி பெற்றது. பிரதேச செயலாளர் எஸ்.சிவசிறி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா.செந்தில்நந்தனன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்கள பணிப்பாளர் இ.குருபரனும் கௌரவ விருந்தினராக யா/நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் க.கிருஷ்ணகுமாரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (க)

# சிவகுமரன், ஞானமுருகன் அடுத்த சுற்றுக்கு தெரிவு

திக்கம் இளைஞர் வி.கழகம் நடத்தும் காற்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகம் மற்றும் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் என்பன அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

திக்கம் இளைஞர் வி.கழகத்தின் மைதானத்தில்அண்மையில் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதல் பத்து நிமிடங்கள் வரை எந்த அணியாலும் கோல்களைப் பதிவுசெய்ய முடியவில்லை. 12 ஆவது நிமிடத்தில் சிவகுமரன் அணியின் கஜனன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி அணிக்கான முதல் கோலைப பெற்றுக் கொடுக்க அதுவே முதல் பாதியின் ஒரே கோலாகவும் பதிவானது. இரண்டாவது பாதியில் கோல் கணக்கில் எந்தவித மாற்றங்களும் ஏற்படாத நிலையில் 1:0 என்று சிவகுமரன் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது. ஆட்டத்தின் 16 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணியின் சிமித் முதல் கோலைப்பதிவு செய்தார்.

மேலதிக மாற்றங்கள் எவையும் ஏற்படாத நிலையில் முதற்பாதி முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாதியில் கிடைத்த வாய்ப்புக்களை இரு அணிகளும் வீணடித்தன. இருப்பினும் 10 ஆவது நிமிடத்தில் ஜெகதீஸின் உதவியுடனும் 17 ஆவது நிமிடத்தில் பார்த்தீபன் மற்றும் 22 ஆவது நிமிடத்தில் லகின்சன் ஆகியோரின் உதவியுடன் ஞானமுருகன் மேலும் மூன்று கோல்களைப் பதிவு செய்ய முடிவில் அந்த அணி 4:0 என்ற அடிப்படையில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (க)

# தெல்லிப்பழை நாமகள் வி.கழக உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்

## யங்கம்பன்ஸ் வெற்றி



தெல்லிப்பழை நாமகள் வி.கழகம்நடத்தும்அணிக்கு 7 நபர்கொண்ட உதைபந்தாட்ட தொடரின் அண்மையில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் ஞானகலா வி.கழகத்தை எதிர்கொண்ட கம்பர்மலையங்கம்பன்ஸ் வி.கழகம் 4.1 என்ற வித்தியாசத்தில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது.

ரதன் 2 கோலினையும் கோபி, ரகுவரன் தலா 01 கோலினையும் போட்டனர். (க)

# இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்ட போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சிவானந்தா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை சென். பீற்றேர்ஸ் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்தும் தாச்சித் தொடரின் முடிபுகள்

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விபரங்கள் வருமாறு,

சண்டிலிப்பாய் வசந்தசிறி அணிக்கும் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 6 புள்ளிகளைப் பெற்றதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. மேலதிகமாக வழங்கப்பட்ட 5 நிமிடங்களில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி 2:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணிக்கும் சங்கானை இளங்கதிர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணி 9:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக்கழக அணிககும் நவாலி தென்றல் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக்கழக அணி 11:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இணுவில் அண்ணா விளையாட்டுக்கழக அணிக்கும் மானிப்பாய் பெஸ்ட் ஹோம் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மானிப்பாய் பெஸ்ட் ஹோம் விளையாட்டுக்கழக அணி 5:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணிக்கும் தமிழ் ஒளி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணி 11:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணிக்கும் மாவை கலட்டி உதயதாரகை விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில், புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணி 9:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. உடுவில் உதய சூரியன் விளையாட்டுக்கழக அணிககும் மயிலிட்டி கலைமகள் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உடுவில் உதய சூரியன் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (க)

## வடக்கு பெண்...

சமத்துவத்துக்கான உறுதிமொழி, வலுவான பெண்கள், நிலையான நாளைய தினம எனும் தொனிப்பொருளில் மகளிர் தின நிகழ்வு நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிலைய மண்டபத்தில் நேற்றையதினம் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையற்றுகையில்,

ஆண்கள் வாழ்வது பெண்களின் அர்ப்பணிப்பான வாழ்கை முறையில் தான். பெண்களை சிறுமைப்படுத்தும் ஆண் ஆதிக்க முறை கட்டுப்படுத்தப்பட வேண்டும். தற்காலத்தில் பெண்கள் கல்வியிலும் தொழில் நிலைகளிலும் சிறந்து விளங்குகின்றார்கள். ஆண்களை விட பெண்களே அதிகமாக உள்ளார்கள்.

யுத்தத்தின் பின்னர் அதிகளவான பெண்கள் மிகவும் துன்பத்துக்கு ஆளாகியுள்ளனர் கணவர், பிள்ளைகளை இழந்ததுடன் தமது பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தையும் இழந்துள்ளனர். பிள்ளைகளை வளர்கும் பொறுப்பு அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே எதிர்காலத்தில் பெண்களுடன் ஒன்றிணைந்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக செயறபடுவதோடு அனைத்து செயற்பாடுகளிலும் அவர்களுக்கு முன்னுரிமை வழங்க முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## கனரக வாகன...

இடம்பெற்றது.

இதில் வவுனியா கனகராயன்குளத்தை வசிப்பிடமாகவும் பண்டத்தரிப்பை சொந்த இடமாகவும் கொண்ட எஸ்.கலைச்செல்வன் (வயது-26) என்பரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கனரக வாகனம் ஒன்று நேற்று மாலை 5மணியளவில் முருகண்டி பிள்ளையார் ஆலயம் முன்பாக பயணத்தின் போது நிறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளையில் வவுனியா கனகராயன் குளத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் குறித்த நபர் பயணித்த வேளை மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து கனரக வாகனம் மீது பின்னால் மோதியது.

இதில் படுகாயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிளை செலுத்திய நபர் உடனடியாக அங்கு நின்றவர்களால் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்.எனினும் அங்கு சிகிச்சை பலனின்றி அவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்துத் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சடலம் மரண விசாரணைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (செ-15-281)

## அருட்தந்தை பிரா...

குழுவிடம் கேள்வியெழுப்பினார்.

அருட்தந்தை பிரான்சிஸ் யோசப் தலைமையில் எனது கணவர் பரராஜசிங்கம் உமாபதி உட்பட 50 போராளிகள் 2009 ஆம்ஆண்டு மே மாதம் 17-ம் திகதி இராணுவத்திடம் சரணடைந்த நிலையில் அவர் எம்முடன் இன்று வரை எந்தவித தொடர்புகளும் அற்று இருக்கின்றார்.

எனது கணவர் உட்பட 50 போராளிகளையும் அருட்தந்தை பிரான்சிஸ் யோசப்பையும் ஏற்றிச் சென்ற இலங்கை போக்குவரத்துச்சபைக்கு சொந்தமான சிவப்பு நிற பேருந்தில் சென்றவர்களின் விபரம் இந்த ஏழு வருடங்களில் எமக்கு கிடைக்கப் பெறவில்லை எனவே இது தொடர்பாக எங்களுக்கு நீதி வேண்டும்.

11 ஆயிரம் போராளிகளை புனர்வாழ்வளித்து விடுதலை செய்த இந்த அரசால் வெளிப்படையாக பேருந்தில் ஏற்றிச் செல்லப்பட்ட இந்த 50 பேர் தொடர்பாக விபரங்களை வெளியிட முடியாமைக்கான காரணம் என்ன? எனது கணவனை தேடி கடந்த 7 வருடங்களாக நான்அலைந்து திரிகின்றேன். இறுதி யுத்தத்தின் போது அரசாங்கம் விடுதலைப் புலிகளை சரணடைய கூறியது. அதனடிப்படையில் எனதுகணவர் 33 வயதில் இராணுவத்தினரிடம் சரணடைந்தார். இன்றைக்கு அவருக்கு 40 வயது அவர் இருக்கின்றாரா? இல்லையா? என ஆணைக்குழு தெரிவிக்க வேண்டும்.

அருட்த்ந்தை பிரான்சிஸ் யோசப்புடன் சரணடைந்த போராளிகளில் ஆறு பேருக்கான ஆட்கொணர்வு மனு தொடர்பான வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நடந்து வருகிறது. அதன்படி கடைசியாக நடைபெற்ற வழக்கின் போது வட்டுவாகல் பகுதியில் சரணடைந்தவர்களின் பெயர் பட்டியல் உள்ளது என சாட்சியமளித்து அதனை இராணுவம் ஒப்புக்கொண்டுள்ளது.

அந்த பட்டியலின் அடிப்படையில் இம்மாதம் நடைபெறவுள்ள வழக்கில் குறித்த பட்டியலில் எனது கணவரின் பெயர் வரும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். இராணுவம் கூறுகிறது, சசிதரன் என்றழைக்கப்படும் எழிலன் பெயர் தங்களிடம் இல்லை. ஆனால் வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களின் பெயர் விபரம் எங்களிடம் இருக்கின்றது என்று ஆறு பேர் தொடர்பான ஆட்கொணர்வு மனுவில் முதலாவது நபர் எழிலன். ஆனால் ஆட்கொணர்வு மனுவின்படி எழிலன் தொடர்பாக விசாரணையில் எழிலன் இல்லை என இராணுவம் கூறுகிறது. ஆனால் ஏனைய சரணடைந்தவர்களின் பட்டியல் இருப்பதாக கூறுகிறது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் இந்த பட்டியலை இராணுவம் சமர்ப்பிக்கவேண்டும். அந்த பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டால் எனது கணவரின் பெயரும் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும். ஏன் என்றால் எனது கணவரும் அந்த இராணுவ முகாமில் தான் சரணடைந்தார். எனவே ஆணைக்குழு எனது கணவரை கண்டுபிடித்து தரவேண்டும்என ஆணைக்குழு முன் கண்ணீர்மல்க சாட்சியமளித்தார்.

அவர் மேலும் சாட்சியமளிக்கையில், உறவுகளை இழந்த எங்களுக்கு இது தொடர்பாக விபரங்கள் கிடைக்காதா? என்று மிகவும் மன அழுத்தத்துடனும், வேதனையுடனும் எனது சாட்சியினை பதிவு செய்கின்றேன். குறிப்பாக இதே ஆணைக் குழுவில் கடந்த ஒருவருடத்திற்கு முன் எனது சாட்சியங்களை பதிவு செய்திருக்கின்றேன் அதனால் எந்த ஒரு பலனும் கிடைக்கவில்லை, இலங்கை செஞ்சிலுவை சங்கத்திடம பதிவுசெய்திருன்கின்றேன் அங்கும் எனக்கு எந்த பலனும் கிடைக்கவில்லை.

சாட்சியங்களை பதிவு செய்து, பதிவு செய்து களைத்துப்போன நான் இது ஒரு கடைசி முயற்சியாக இந்த ஆணைக்குழுவிடம் சாட்சியங்களை பதிவு செய்ய வந்திருக்கின்றேன். நீங்கள் என்ன தீர்வு தரப்போகிறீர்கள் என்பதினை காலம்தான் சொல்ல வேண்டும் என்றார். (செ-281)

## 'சுதந்திர கட்சி...

ஒன்றியத்தின் தலைவர் லக்ஸ்மன் பிரேமரட்ன, செயலாளர் ஜனக புஸ்பகுமார, உறுப்பினர்களான டீ. அத்தநாயக்க, கே.எம்.குணவர்தன, எம்.எம். ரட்னதிலக, ஆர்.சோமரட்ன ஆகியோர் இந்த செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

கட்சியின் யாப்பின் அடிப்படையில் கட்சியின் யாரேனும் நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் கட்சியின் தலைவராக நியமிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவில்லை.

நல்லாட்சி அரசாங்கம் பொய்யான வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்றி ஆட்சிகைப்பற்றியுள்ளது. ஜனநாயகத்தை புறந்தள்ளி மக்கள் விரோத ஆட்சியொன்றே நடைபெறுகின்றது.

உண்மையான சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களான தம் மீது எவ்வாறான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் நல்லாட்சி அரசாங்கத்திற்கு எதிரான போராட்டம் தொடரும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சுதந்திரக் கட்சியின் மகிந்த தரப்பு ஆதரவாளர்களே இந்த செய்தியாளர் சந்திப்பினை ஏற்பாடு செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

# காணாமல்போன உறவினர்களை எம்மால் மறந்து வாழ முடியாது

## ஆணைக்குழு முன் பெண்ணொருவர் சாட்சியம்

உயிரிழந்த உறவுகளை மறந்து வாழ்ந்தாலும் காணாமல்போன உறவுகளை மறக்க முடியாது என ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் காணாமல்போன நபர் ஒருவரின் சகோதரி சாட்சியம் அளித்துள்ளார்.

காணாமல்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மன்னாரில் இடம பெற்றது.

இந்த விசாரணையில் சாட்சியம் அளித்த மன்னார் - வங்காலை பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயான ஜே.ஜெகயோதீஸ்வரி என்பவரே ஆணைக்குழுவிடம் இவ்வாறு குறிப்பிட்டார்.

யுத்தம் காரணமாக திருகோணமலையிலிருந்து கடந்த 1990 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து, கடல்வழியாக முல்லைத்தீவுக்கு சென்று கொண்டிருந்தபோது கொக்குளாய் இராணுவ முகாமிலிருந்து வந்த பீரங்கி படகுகள் தமது படகை வழிமறித்துச் சுட்டதாகவும், அதில் தனது குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் உயிரிழந்தாக கண்ணீர் சிந்தியபடி சுட்டிக்காட்டினார்.

மேலும் இந்த சம்பவத்தில் தனது சகோதரன் ஒருவர் காயமடைந்ததாக குறிப்பிட்ட அவர், பின்னர் தாம் வங்காலை பிரதேசத்தில் வசித்து வந்ததாக தெரிவித்தார்.

கடந்த 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி தனது மற்றுமொரு சகோதரனான செபமாலை பீரிஸ் ஜெகயோதி என்பவரும், தனது உறவினரான விக்டர் கனிசியஸ குலாஸ் என்பவரும் நானாட்டான் பகுதியில் இருந்த இரணுவ முகாமில் விசாரணைக்கு உட்படுத்திய பின் விடுதலை செய்வதாக தெரிவித்து பின்னர் கடத்திச் செல்லப்பட்டதாக குறிப்பிட்டார்.

பல்வேறு உயிரிழப்புக்களைச் சந்தித்து துயரடைந்துள்ள தமக்கு கடத்தப்பட்டவர்களைத் தேடிக்கண்டுபிடித்து தருமாறும் ஆணைக்குழுவினரிடம் கண்ணீர்மல்க அந்தச் சகோதரி கோரிக்கை விடுத்துள்ளார். (செ-2-281)

# ஜனாதிபதி பங்கேற்ற நிகழ்வில் மின்சாரம் திடீரென துண்டிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்ற நிகழ்ச்சி ஒன்றில் மின்சாரத் தடை ஏற்பட்டுள்ளது.

வடமேல் மாகாண சுகாதார மற்றும் உள்நாட்டு வைத்திய அமைச்சின் விருது வழங்கும் விழாவின் பிரதம அதிதியாக ஜனாதிபதி கலந்து கொண்டு உரையாற்றிக் கொண்டிருந்த போது மின்சாரத் தடை ஏற்பட்டுள்ளது.

முன்னதாக நாட்டில் நிலவி வரும் வரட்சியான காலநிலை காரணமாக மின்சாரம் துண்டிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் அவ்வாறு மின்சாரம் துண்டிக்கப்படாது என மின்வலு அமைச்சு அறிவித்திருந்தது.

இந்நிலையில் குருநாகலில் அமைந்துள்ள மாகாணசபை கேட்போர் கூடத்தில் நேற்று பிற்பகல் இந்த விருது வழங்கும் விழா நடைபெற்றுள்ளது.

இதன்போது ஜனாதிபதி உரையாற்றத் தொடங்கி 10 நிமிடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

அவசர தேவைக்காக பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மின் பிறப்பாக்கியும் உடனடியாக செயற்படவில்லை. இதனால் சுமார் அரை மணித்தியாலங்கள் கேட்போர் கூடம் இருளில் மூழ்கியிருந்தது.

இதனால் மின் பந்தங்களின் உதவியுடன் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. (செ-12)

## வடக்கு மாகா...

நயினாதீவில் அமைக்கப்படவுள்ள 67 அடி உயர புத்தர் சிலை தொடர்பிலேயே இவ எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தீவக அமைப்பாளருமான கே.என். விந்தன் கனகரட்ணம் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தின் சப்த தீவுகளில் ஒன்றாகவுள்ள நயினாதீவில் இந்துக்களின் வரலாற்று ரீதியான நாகபூசணி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

சுமார் ஆயிரத்து 500 வருடங்களுக்கு முன்னர் ஒல்லாந்தர் படையெடுப்பின் போது ஆலயம் எரிக்கப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டது. இதன்போது ஆலயத்தின் தேரும் அனலைதீவுக்கும் நயினாதீவுக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள கடலில் தள்ளிவிடப்பட்டது.

இதன் பின்னர் ஆலயம் புனரமைக்கப்பட்டு இலங்கையின் வரலாற்று பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. நயினாதீவில் தொண்ணூறு வீதமான மக்கள் இந்துக்களாகவே உள்ளனர் ஏனையோர் கிறிஸ்தவர்களாக உள்ளனர். எனினும நயினாதீவுக்கு புத்தபெருமான் வந்த காரணத்தால் ஒரு பௌத்த கோயிலை அமைத்திருந்தனர்.

தற்போது விகாரைக்கு அருகில் அறுபத்தியேழு அடி உயரமுள்ள புத்தர் சிலை ஒன்றினை அமைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் தாயக பிரதேசமான வடக்கு மாகாணத்தில் அதுவும் வடக்கின் உச்சியில் அமைந்துள்ள நயினாதீவில் அறுபத்தியேழு அடி உயரமுள்ள புத்தர் சிலை அமைப்பது என்பதனை சாதாரணமாக கருத முடியாது.

பௌத்த மேலாதிக்கத்தை நிறுவி அதனை உயர்த்தி காட்டி பௌத்தத்தினையும் பேரினவாதத்தையும் எம்மீது திணித்து மதத்தின் பேரால் எம்மை அடக்கி ஆள்வதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. குறித்த சிலை அமைக்கும் பணிகள் கடலோர பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் பன்னிரண்டு கோடி ரூபாய் செலவில ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிய முடிகின்றது.

பௌத்த ஆலயங்களிற்குள் இந்து சமய கடவுள்களின் படங்களை வைத்துள்ளதாகவும், புத்தர் சிலை அமைப்பதற்கு பிரதேச மக்களின் எதிர்ப்பும் இல்லை எனவும் கூறுகின்றனர். இதனை நியாயப்படுத்தி புத்தர் சிலை அமைக்கும் முயற்சிகளை வன்மையாக கண்டிக்கின்றோம். இந்த செயற்பாடு இன, மத நல்லிணக்கத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் குந்தகம் விளைவிக்கும் செயற்பாடாகும்.

புத்தர் சிலை அமைக்கும் பன்னிரண்டு கோடி ரூபாயினை வடக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் அழிவடைந்த பிரதேசங்களை கட்டியெழுப்புவதற்கும், போரினால் பாதிக்கப்பட்ட மக்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் உதவுதற்கும் வடக்கு மாகாண ஆளுநர் முன்வர வேண்டும்.

மேலும் புதிதாக பதவியேற்ற கையோடு வடக்கு மாகாணத்தில் ஆளுநர் குரே மதத் திணிப்பை தொடர்ந்து செய்வாராயின்,

வடக்கு மாகாண சபையினதும், வடக்கு மக்களின் கடும் எதிர்ப்பை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4)

## எனது கணவரை இராணுவம்...

ஆணைக்குழுவிடம் சாட்சியமளித்துள்ளார்.

காணாமல் போனோர் தொடர்பாக விசாரணைகளை நடத்தும் மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் நேற்று வவுனியா பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு சாட்சியமளித்தார். அவர் தனது சாட்சியத்தில் தெரி விக்கையில்,

நாங்கள் முல்லைக்குளம், கல்மடுவில் வசிக்கின்றோம். கடந்த 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08 ஆம் திகதி எனது கணவர் எமது பகுதியில் வசிக்கும் ஒருவருடன் வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிளில வவுனியா நகரத்திற்கு சென்றார். காலையில் சென்றவர் 11.30 மணியளவில் வங்கி யில் பணத்தை வைப்புச் செய்து விட்டு திரும்பி வந்து கொண்டிருந்த போது ஈச்சங்குளத்திற்கும் - கல்மடு விற்கும் இடையில் அமைக்கப் பட்டிருந்த இராணுவ காவலரண்கள் இரண்டின் அருகே வீதி தடை போடப்பட்டு மக்கள் அவ்வீதியால் செல்ல விடாமல் தடுக்கப் பட்டது. இதன் போது அநத இராணுவக் காவலரண் இரணடும் அமைந்துள்ள பகுதிக்குள் வைத்து எனது கணவன் பேரின்பராஜா (வயது 34) மற்றும் அவருடன் சென்ற உதயகுமார் ஆகிய இருவரையும் 57 ஆவது படைப் பிரிவு இராணுவத்தினர் மோட்டார் சைக்கிளில் இருந்து இறக்கி வெள்ளை வாகனத்தில் ஏற்றிச் சென்றனர்.

இதன்போது அவ்விடத்திற்கு அருகில் இருந்த எனது சகோதரி வீட்டில் இருந்த நான் எனது கணவனை கடத்தும் போது கண்ணால் கண்டேன். அந்த இராணுவத்தை இப்பொழுதும் என்னால் அடையாளம் காட்ட முடியும். நான் கணவன் நின்ற இடத்திற்கு செல்ல முற்பட்ட போது காவலரணில் இருந்த இராணுவம் என்னை செலல விடவில்லை. ஒரு காவ ரணில் ஜெயவர்த்தன என்ற இராணுவ வீரர் இருந்தார். அவருக்கும் கடத்திய இராணுவத்தினரை தெரியும்.

அதன்பின் நான் இராணுவத்திடம் கேட்ட போது தாம் கடத்தவில்லை எனக் கூறி விட்டார்கள். அதன் பின் பொலிஸ்நிலையம், மனித உரிமை ஆணைக்குழு, இராணுவ முகாம் என எனது மூன்று பெண் பிள்ளைகளுடனும் ஏறி இறங்கி வருகின்றேன். இறுதியாக உங்களிடம் வந்துள்ளேன் என கண்ணீர் மல்க சாட்சியமளித்தார். (செ-2,250)


**ECONOMICS HALL**

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

கணித பாடம் சித்தியடையாது A/L 2018-ல் கல்வி பயிலும் மாணவர்களுக்கான விசேட வகுப்பு

கணிதம் **A.K. யசிந்தன்**

திங்கள், புதன்,வெள்ளி 3-4

ஆரம்பம்: **04.04.2016** 3.00 மணி

உங்கள் கணித பாட சித்திக்கு நாங்கள் உத்தரவாதமளிக்கின்றோம்.

(4048)

**ECONOMICS HALL**

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

A/L 2018

**கலை, வர்த்தகம்**

ஆரம்பம் : **02.04.2016** காலை : 9.00 மணி

அனைத்துப் பாடங்களும் ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்.

(4048)

**தேவை**

வடமராட்சி பருத்தித்துறையில் 3 மாடி கொண்ட திருமண மண்டபத்திற்கான (Shuttering) பலகை அடிப்பதற்கான கூலியாட்கள் தேவைப் படுகின்றனர்.

**குறிப்பு :- வேலைகளுக்கான பலகை, கம்பிகள் எம்மால் வழங்கப்படும் மற்றும் தங்குமிட வசதியும் செய்து தரப்படும்.**

**தொடர்புகளுக்கு :**

**0777795904 / 0772540683**

(C-4161)

**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

அழையுங்கள் - 077 29 31 062

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

(C-4163)


## கணவரைக் கடத்திய...

காணாமல்போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று சாட்சியமளிக்கும் போதே மனைவி இவ்வாறு தெரிவித்தார். அவர் தனது சாட்சியத்தில்,

நானும் எனது கணவர் மற்றும் பிள்ளைகள் கொழும்பு, களுபோவில பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வாடகைக்கு வசித்து வந்தோம். கடந்த 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி இரவு 9 தொடக்கம் 10 மணிக்கிடையில் எமது வீட்டின் கதவை தட்டிச் சத்தம் கேட்டது. அப்போது எனது தம்பி கதவைத் திறந்தார். வீட்டிற்குள் நுழைந்த 5, 6 பேர் எனது கணவ்ரை கூப்பிட்டார்கள். நாம் நீங்கள் யார் என கேட்டோம். தாம் பொலிஸ என கூறி எனது கணவரின் அடையாள அட்டை, பொலிஸ் வதிவிடச் சான்றிதழ் என்பவற்றை பார்த்துவிட்டு எனது கணவரை பிடித்து இழுத்துச் சென்றார்கள்.

நாங்கள் விடும்படி கதறினோம். எம்மை வீட்டுக்குள் விட்டு பூட்டிவிட்டு கணவனை இழுத்துச் சென்றார்கள். அதன்பின் எனது கணவனை 50 - 7062 இலக்க வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்றதைக் கண்டோம். நாம் வெள்ளவத்தையில் இருந்த எனது அப்பாவை வரவழைத்து கதவைத்திறந்து கொவல பொலிஸ் நிலையம் சென்று விசாரித்தோம். அவர்கள் கணவரை பிடிக்கவில்லை எனக் கூறினார்கள். அதன் பின் எனது கணவரை கொண்டு சென்ற வாகனத்தை பொலிஸ் நிலையத்தில் கண்டேன். அதைச் சென்று பார்த்த போது அதற்குள் வேறுபலர் இருந்தாரகள். அதற்குள் எனது கணவனை காண வில்லை. எப்படியாவது எனது கணவரை கணடு பிடித்து தாருங்கள். அவர் இருக்கின்றார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என கண்ணீர் மல்க சாட்சியமளித்தார். (செ-2,250,281)


**தேவை**

(4043) புங்குடுதீவு பிரதான வீதியில் காணிதேவை. 0777295428



**வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய மண்டலாபிஷேக குடமுழுக்கு**

31/03/2016 வியாழக்கிழமை காலை 7 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்று இரவு 7 மணியளவில் வசந்தமண்டப பூசையும் பின் விசேட மேளக் கச்சேரியுடன் பூந்தண்டிகையில் விநாயகப் பெருமான் வீதியுலா வருவார்.

வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும் - வெள்ளைக் கொம்பன்
விநாயகனைத் தொழ துள்ளி ஓடும்
தொடரும் வினைகளே

(C-4153)




(C-4157)

**ஒலிம்பியா ஸ்போட்ஸ்** இல.06, ஜும்மா பள்ளிவாசல் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3490 / 077 806 0267


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.